# இது நம்தேசம்

'Registered in the department of posts of Srilanka under No.QD/173/News/2014'

பார்வை-02 பெப்ரவரி, 15.2015 வியூகம்-03 பக்கங்கள்-24 விலை-ரூ.30.00

Web - www.ithunamthesam.com
Email - ithunamthesam@gmail.com

## துரோகத்திற்கு பதிலடி



# சுதந்திர தினம்!



## தமிழ் மக்களுக்குமா?

# ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் 38 வது சிரார்த்த தின நிகழ்வு



அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் தலைவரும், மாபெரும் சட்டமேதையுமான மறைந்த பெருந்தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் நினைவுதின நிகழ்வு 09.02.2015 அன்று காலை 11.30 மணியளவில் இடம்பெற்றது. குருநகரில் அமைக்கப்பட்டுள்ள அமரர் ஜீ.ஜீ அவர்களது திருவுருவ சிலைக்கு ஜீ.ஜீ அவர்களது பேரனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து அகவணக்க நிகழ்வும் இடம்பெற்றது. அதன் பின்னர் கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஆனந்தராஜா தலைமையில் நினைவுக் கூட்டமும் இடம்பெற்றது.

# அடையாளத்தை இழந்து வரும் தமிழர்கள்

பிரான்சின் ஒரு பகுதியே கொதுலூப் (GUADELOUPE) தீவுக் கூட்டமாகும். சிறிய ஐந்து தீவுகளைக் கொண்டது தான் இப்பிரதேசம். இங்கு சுமார் 150 வருடங்களாக தமிழர்கள் வாழ்கின்றனர். 1854 ஆம் ஆண்டிலிருந்து சுமார் நாற்பது ஆண்டுகளாக விவசாயக் கூலிகளாக கொண்டு செல்லப்பட்ட தமிழ் நாட்டுத் தமிழர்களே அங்கு வாழ்கின்றனர். இவர்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பிப் போகக் கூடாது என்பதற்காக அப்போதைய பிரெஞ்சு ஆட்சியாளர்கள் இவர்களது ஆவணங்களை அழித்து விட்டார்கள். தாம் இந்தியாவிலிருந்து வந்ததை அறிந்த இவர்கள், எந்த ஊரிலிருந்து வந்தவர்கள் என்பதை அறியாதவர்களாக உள்ளனர்.

இன்று தமிழர்கள் எனச் சொல்ல முடியாத அளவிற்கு மொழியை இழந்து பண்பாட்டை இழந்து வாழ்கின்றனர். பிரான்சின் சமூக, பொருளாதார, அரசியல் நிர்ப்பந்தங்கள் இவர்களது அடையாளங்களை அழித்துள்ளது. தமிழ்ப் பெயர்களைக் கொண்டிருக்கும் இவர்களுக்கு ஒரு சொல்லுக் கூட தமிழில் பேசத் தெரியாது. தமிழ்ப் பெயர்களும் பிரெஞ்சு உச்சரிப்புக்கு உள்ளாக்கப்பட்டு உருமாறியுள்ளன. மிஷெல் நாரயனிண்சாமி , கோபர் தன்ழான்மரீ , ஃபில்ஸ்ட் கோவிந்தின், ஆறுமுகம் தித்அர் மாண்ட் எனப் பெயர்கள் உருமாறி உள்ளன.

1894 ஆம் ஆண்டு கறுப்பர்களின் அடிமைமுறை உலகெங்கும் ஒழிக்கப்பட்ட பிறகு கொதுலூப் தீவில் பிரெஞ்சுக்காரர்களின் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு கூலிகளாக இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனாம், மாஹி பகுதிகளிலிருந்து 40,000 கூலிகள் 1854 இலிருந்து 1889 வரை சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பகுதிகள் பிரான்சின் ஆதிக்கத்திலிருந்தமை அழைத்துச் செல்லல் செயற்பாட்டை இலகுவாக்கியிருக்கலாம். இவர்களில் 70 வீதம் தமிழர்களும் 30 வீதம் மலையாளிகளும், வங்காளிகளுமாவர். இவர்களில் பெரும்பாலானவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத ஏழைகள். ஆறு தலைமுறைகளுக்கு முன்னர் சென்றவர்களின் வழித்தோன்றல்களே இப்போது உள்ளனர். தற்போது இவர்கள் கல்வி அறிவு பெற்றவர்களாகவும் பொருளாதார பலம் படைத்தவர்களாகவும் உள்ளனர். தமது பழைய அடையாளங்களைத் தொலைத்தவர்களாக உள்ளமையினால் சாதி வேறுபாடுகள் இவர்களிடம் இல்லை. இது வரவேற்கத்தக்கது. 1923 இல் இவர்களுக்கு பிரெஞ்சுக் குடியுரிமை வழங்கப்பட்டது.

இன்று அவர்கள் தாங்கள் தொலைத்த பண்பாட்டு அடையாளங்களை மீளுருவாக்கம் செய்யும் அவாவில் உள்ளனர் பண்பாட்டு அடையாளங்கள் பல அழிவுற்றாலும் தமிழ் அடையாளச் செயற்பாடுகள் சில சடங்குகள் மற்றும் மதரீதியான கிரியைகளில் உள்ளன. பல மரபார்ந்த மக்களிடம் நடனவடிவங்களாகவும், வாய்மொழிப் பாடல்களாகவும் அவை உள்ளன. சுடலமாடன் வழிபாடு, மதுரைவீரன் வழிபாடு, அய்யனார் வழிபாடு என்பன தற்போதும் உள்ளன. தமிழ் வாய்மொழிப் பாடல்கள் பிரெஞ்சு மொழியிலேயே உச்சரிக்கப்படுகின்றன.

தனக்கென்றிருக்கின்ற மொழியை இழந்து விட்ட பண்பாடும் தனக்கென்று இருக்கின்ற பண்பாட்டை இழந்துவிட்ட மொழியும் நாளடைவில்பலவீனமாகி விடும் என்பதே உண்மை.

தமது வேர்களைத் தேடும் இவர்களுக்கு யார் உதவுவது? தமிழ்நாடு இதில் அதிக பங்களிப்பைச் செய்ய முடியும். உலகத் தமிழர்களை பலப்படுத்தும் பொறுப்பு தமிழ்நாட்டிற்கு உள்ளது.

**செய்தி ஆய்வு**

தமிழ்நாடு இந்தப் பொறுப்பை ஏற்றுச் செயற்படுமா?

# அரை நூற்றாண்டிற்கும் பின்னர் இராஜதந்திர உறவுகள்

கடந்த அரைநூற்றாண்டுகளாக துண்டிக்கப்பட்டிருந்த இராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள கியூபாவும், அமெரிக்காவும் இணங்கியுள்ளன. கைதிகள் பரிமாற்றம், தூதரக தொடர்புகள், வர்த்தக கட்டுப்பாடுகளை தளர்த்தல் என்பவற்றிற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளன. கியூபா மீதான பொருளாதாரத்தடை நீக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்திருக்கின்றார். இந்த இணக்கத்தைக் கொண்டு வருவதில் கனடாவும் வத்திக்கானும் பெரும்பங்காற்றியிருந்தன. சர்ச்சைக்குரிய இராஜதந்திர உரையாடல்கள் இரகசியமாக நீண்ட காலம் இடம் பெற்றன.

1959ம் ஆண்டு கியூபாப் புரட்சி இடம்பெற்று பிடல்காஸ்ரோ தலைவரானர். அன்று முதல் அமெரிக்க கியூபா உறவுகள் மோசமாகவே இருந்தன. கியூபாவிற்கும் சோவியத் யூனியனிற்கும் இடையே ஏற்பட்ட ஐக்கியமும் முரண்பாட்டை கூர்மைப் படுத்தின. அமெரிக்க பிளவுப் பிரிவான சி.ஐ.ஏயின் இரகசிய யுத்தங்கள், காஸ்ரோவிற்கு எதிரான கொலை முயற்சிகள், பிகஸ்குடா ஏவுகனை நெருக்கடி, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க புரட்சிகளுக்கு கியூபா அளித்த ஆதரவு என்பனவும் முரண்பாட்டை வளர்ப்பதில் பங்கு செலுத்தின.

ஆனால் இவ் முரண்பாட்டிற்கு மத்தியிலும் இராஜதந்திர முயற்சிகளும் தொடர்ந்த வண்ணமே இருந்தன. அரை நூற்றாண்டு முயற்சிகள் தற்போதே கை கூடியுள்ளது, சோவியத் யூனியனின் சிதைவும், பனிப்போரின் முடிவும் இதனை ஊக்குவித்திருக்கலாம்.

தொடர்ச்சியாக முயற்சி செய்தால் இயலாதது எதுவும் இல்லை. என்பதற்கு கியூபா-அமெரிக்க புது உறவு ஒரு எடுத்துக் காட்டு.

## செய்தித் துளிகள்

கட்சியின் தலைமைக்குக் கட்டுப்பட்டு உறுப்பினர்கள் நடக்காவிடின் தலைமைப்பதவியினை இராஜினாமா செய்துவிட்டு ஜனாதிபதியாக மட்டும் செயற்படும் நிலை ஏற்படும். அத்துடன் பாராளுமன்றத்தையும் கலைக்க வேண்டிவரும்.

**-ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன -**

கிழக்கு மாகாண சபையில் சர்வக்கட்சி அமைப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அழைப்பு விடுகின்றோம். கூட்டமைப்பும், ஐ.தே.கட்சியும் கிழக்கு மாகாண சபையில் அமைச்சரவையில் பங்கேற்க வேண்டும் எனவும் அழைப்பு விடுக்கிறோம்.

முதலமைச்சர் விவகாரத்தில் கூட்டமைப்பு விடாப்பிடியாக நின்றபோது கூட அதனை எஞ்சிய காலத்துக்கு இரண்டாக பகிரும் மாற்றுத் திட்டத்தை நாங்கள் கூறினோம். கூட்டமைப்பு அதனை நிராகரித்துவிட்டது.

**-சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி-**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் தேசியப்பட்டியல் பாராயுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோருக்கு எதிராக கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

**–சம்பந்தன் சுமந்திரனுக்கு எதிராக யாழ்.பல்கலையில் சுவரொட்டிகள்–**

வடக்கிலுள்ள படையினரை எக்காரணம் கொண்டும் குறைப்பதற்கு தயாரில்லையென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் வியேவர்தன தெரிவித்தார்.

வடக்கில்படைக்குறைப்பில்லை -

**–ருவான் வியேவர்த்தன–**

டெல்லி சட்டசபைத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று அதன் தலைவர் கெஜ்ரிவால் முதலமைச்சராக பதவியேற்கவுள்ளார்.

70 உறுப்பினர்களைக் கொண்ட டெல்லி சட்ட பேரவைக்கு கடந்த சனிக்கிழமை தேர்தல் நடைபெற்றது. இதில் ஆம் ஆத்மிக் கட்சி 67 தொகுதியிலும் ப.ஜ.க மூன் று தொகுதிகளிலும் கைப்பற்றியுள்ளன.

**-டெல்லியில் ஆட்சிப்பீடம் ஏறும் ஆம் ஆத்மி -**

கரவெட்டி பிரதேச இளைஞர் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற எல்லே போட்டியில் ஆண்களில் இமையாணன் அணியும், பெண்களில் டயமன்ஸ் அணியும் சம்பியனாகியுள்ளன.

**-இமையாணன்,டயமன்ஸ் அணிகள் சம்பியன்-**

## பிரதமர் வேட்பாளராக மகிந்தரை பொதுத்தேர்தலில் இறக்க முயற்சி



எதிர்வரும் பாராளுமன்றத் தேர்த லில் பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ச வினை இறக்கும் முயற்சியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி கள் ஈடுபட்டு வருகின்றன. வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவங்ச, தினேஸ்குன வர்த்தனா, உதய கம்மன்பல ஆகியோரே இம் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

மகிந்த ராஜபக்சவின் சம்மதமும் இதற்குக் கிடைத்துள்ளது போலவே தெரி கின்றது. கடந்த 09ம் திகதி இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது. பெப்ரவரி 18ம் திகதி நுகே கொடவில் ஒரு மக்கள் கூட்டமும் இடம் பெற்றுள்ளது.

மைத்திரியையும், மகிந்தரையும், சந்திரிக்காவையும் இணைத்து சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்பும் முயற்சியும் அண்மையில் இடம் பெற்றது. சந்திரிக்கா அதனை முற்றாக நிராகரித்ததினால் தற் போது இம் முயற்சி இடம் பெறுகின்றது போலத் தெரிகின்றது. இது விடயத்தில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்கள் மௌனம் சாதிக்கின்றனர். பின் வரிசை உறுப்பினர்களே அக்கறை காட்டுகின்றனர். அண்மைய தினங்களாக திரளான வகையில் மகிந்தரை மக்கள் சந்திக்கின்ற நிகழ்வும் திட்டமிட்ட வகையில் இடம்பெறுகின்றது.


சிறீலங்கா சுதந்திரக்கட்சியாளர் கள் நேரடியாக ஈடுபட்டால் கட்சிக் கட்டுப்பாடு என்ற விடயத்தை மைத்திரி தூக்கப்பார்ப்பார் என்பதால் தான் சுதந்திரக்கட்சியல்லாத ஏனைய தலைவர்கள் இதில் முன்னணியில் நிற்கின்றனர். தேர்தலுக்கு முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவு- படலாம் .

இதை விட சட்ட ஒழுங்கு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை 114 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு சபாநாயகரி டம் கையளித்துள்ளனர். இது நிறை வேற்றப்படுமானால் பாராளுமன்றத்தைக் கலைப்பேன் என ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார். சுதந்திரக் கட்சியினருக்கு இது தெரியாததல்ல. பொதுத் தேர்தல் வந்தால் நாங்கள் வெற்றியடைவோம் என அவர்கள் நம்புவது தெரிகின்றது.

புதிய அரசாங்கம் பழைய ரணில் அரசாங்கத்தைப் போல சொற்ப ஆயுளை மட்டும் உடையதா?

பேரினவாதத்தை மிகச்சிறிய விடய மாக எடுத்துக்கொண்ட அமெரிக்காவும், இந்தியாவும் இனியாவது உண்மையைத் தரிசித்துக் கொள்வர் என நம்புவோம்.

## நரேந்திரமோடியின் சாயம் வெளுக்கின்றது.



புதுடில்லி சட்டமன்றத் தேர்தலில் ஆம்ஆத்மிகட்சி அமோக வெற்றியை ஈட்டி யுள்ளது. மொத்த 70 ஆசனங்களில் 67 ஆசனங்களை அக்கட்சி பெற்றிருக்கின்றது. பாரதீய ஜனதாக்கட்சிக்கு 3 ஆசனங்கள் மட்டுமே கிடைத்துள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு எதுவுமில்லை. 2013 ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் 28 ஆசனங்களை மட்டும் பெற்றிருந்த ஆம் ஆத்மி கட்சி இந்த தடவை 67 ஆசனங்களை பெற்றமை பெரு வெற்றியாகும். கடந்த முறை காங்கிரஸ் கட்சி யின் ஆதரவுடன் ஆட்சியை அமைத்தாலும் 49 நாட்களில் அரவிந்த கெஜ்ரிவால் முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

2013 ஆம் தேர்தலில் 31 இடங் களைப் பெற்ற பாரதீயஜனதாக்கட்சி இத்தேர் தலில் வெறுமனே மூன்று ஆசனங்களை மட்டும் பெற்றமை கட்சிக்கு கிடைத்த பெரும் தோல்வியாகும். கட்சியின் முதல்வர் வேட் பாளர் கிரண்பேடியும் தோல்வியடைந்திருக் கின்றார். வெற்றியடைய வேண்டும் என்பதற் காக ஐ.பி.எஸ் அதிகாரியாக இருந்த இவரை வேட்பாளராக நிறுத்தியபோதும் தோல்வியே கிடைத்திருக்கின்றது.

பாராளுமன்றத் தேர்தலில் ஒரு போதும் இல்லாத வகையில் பாரதீய ஜனதா கட்சி அமோக வெற்றியைப் பெற்றி ருந்தது. அதுவும் புதுடில்லியில் 7 ஆசனங் களையும் அதுவே பெற்றிருந்தது. ஆம் ஆத்மி கட்சி எவ்வளவோ முயன்போதும் ஒரு பாராளுமன்ற ஆசனத்தை கூட புதுடில்லி யில் பெற முடியவில்லை. ஆனால் இத்தேர் தலில் படுதோல்வி பாரதிய ஜனதா கட்சி அடைந்திருக்கிறது என்றால் அதற்கு காரணம் நரேந்திரமோடியின் சாயம் அண்மைக் காலமாக வெளுத்து வருகின்றமையே. மோடி என்கின்ற தனிநபர் விம்பந்தான் நாடு முழுவதிலும் பாரதீய ஜனதா கட்சிக்கு அமோக வெற்றியை பெற்றுக்கொடுத்தி ருந்தது. இன்று இந்த விம்பமே கீழிறங்கி இருக்கின்றது. தேர்தல் கால வாக்குறுதி களில் பலவற்றை நரேந்திர மோடியால் நிறைவேற்ற முடியவில்லை. இது மக்களுக்கு பெரும் அதிருப்தியை கொடுத்திருக்கின்றது.

அரவிந்த கெஜ்ரிவால் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆம் ஆத்மி கட்சியை ஆரம்பித்தார். மிகச் சொற்ப காலத்திலேயே தலைநகரில் அது உச்சத்திற்கு சென்றிருக்கின்றது. ஊழலுக்கு எதிரான அவரது அரசியலும், மக்களுடனான நெருக்கமுமே இவ்வுச்சத்திற்கு காரணம். ஊழலை மொத்தமாக கூட்டி அகற்றுவோம் என்பதை குறிக்கும் வகையில் விளக்கு மாறினை (துடைப்பம்) கட்சியின் சின்ன மாக கேட்டுப் பெற்றார். உள்ளூர் பிரச்சினை களை தீர்ப்பதற்காக அவர் முன்வைத்த வேலைத்திட்டங்களும் மக்களை வெகுவாக கவர்ந்துள்ளன.

தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகள் எவற்றையும் பேசலாம். ஆனால் ஆட்சிக்கு வந்தபின்னர் அவற்றை நிறை வேற்றுவது கடினம். ஏற்கனவே உள்ள கட்ட மைப்புகளும்பாரியநெருக்கடிகளைக்கொடுக் கும். அரவிந்த கெஜ்ரிவால் இவற்றிற் கெல்லாம் முகங்கொடுத்து வெல்வாரா? அல்லது சாதாரண அரசியல்வாதிகள் போல மாறுவாரா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இத்தேர்தலில் மிகப்பெரிய தோல்வி காங்கிரஸ் கட்சிக்குதான். பழம்பெரும் கட்சிக்கு ஒரு ஆசனத்தைக் கூட தலைநகரில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. கட்சியின் வேட்பாளர் பலர் மூவாயிரம், நாலாயிரம் என மிகக் குறைந்த வாக்குகளையே பெற்றி ருக்கின்றனர். இதன் பாரம்பரிய வாக்குகள் ஆம் ஆத்மிக்கே பெருமளவில் கிடைத் துள்ளன. கட்சியின் மீட்பர்களாக கருதப்பட்ட நேரு குடும்பத்தினர் கண்ணுக்கு முன்னா லேயே செல்லாக்காசாகியுள்ளனர்.

## தமிழ் மக்களை கணக்கெடுக்காத மைத்திரி அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம்



புதிய மைத்திரி அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தை தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பின் ஆதரவுடன் நிறைவேற்றியுள்ளது. ஆனால்இவ்வரவுசெலவுத்திட்டம்போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பற்றி சிறியளவு கூட கவனம் செலுத்தவில்லை. முப்பது வருட போர் காரணமாக தமிழ் மக்கள் ஐம்பது வருடம் பின்தங்கிப் போயுள்ளனர். அவர் களுடைய அடிப்படை வாழ்வாதாரங்கள் பல முற்றாகசிதைந்துள்ளன. விதவைகள், அங்க வீனர்கள், தாய் தந்தையற்ற சிறுவர்கள் என பல்வேறுபட்டவர்களுடைய பிரச்சினைகள் மலைபோல குவிந்துள்ளன. இவற்றை தீர்ப்பதற்கு சிறப்பு வேலைத்திட்டங்களும், சிறப்பு நிதிஒதுக்கீடுகளும் தேவை.

இந்த வரவு செலவு திட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக் கென சிறப்பு ஒதுக்கீடுகள் எதுவுமில்லை. விலைவாசி குறைப்பு, சம்பள உயர்வு என் பன தேர்தலை இலக்காகக் கொண்டு சிங்கள மக்களுக்காக கொண்டுவரப்பட் டவை. அவை தமிழ் மக்களுக்கும் கொஞ்சம் சுவறுகின்றது என்பது உண்மைதான். ஆனால் பலத்த இழப்புகளை சந்தித்திருக் கின்ற தமிழ் மக்களுக்கு அவை போதுமானதல்ல.

வடக்கில் மகிந்த அரசாங்கம் மேற் கொண்ட வீதிஅபிவிருத்திதிட்டங்கள் கொழும் பின் ஆதிக்கத்தை வடக்கில் நிறுவுவதற் காகவும், வடக்கை சிங்களமயமாக்குவதற் காகவும் மேற்கொள்ளப்பட்டவை. இவற்றி னால் தமிழ் மக்களுக்கு கிடைத்த இலாபங் களை விட நட்டங்களே அதிகம். தமிழ் மக்களின் சிறு சேமிப்புகளையும் கொள்ளை அடிப்பதற்கான நிதி நிறுவனங்கள்தான் வடக்கில் பல்கி பெருகியுள்ளன. போர்க்காலத் தில் உள்ள சிறு சேமிப்புகள் கூட தற் போது தமிழ் மக்களிடம் இல்லை. எல்லாவற் றையும் இந்த நிதி நிறுவனங்கள் கொள்ளை யடித்துள்ளன. கிழக்கிலும் ஏறத்தாழ இதே நிலைதான். சேவைத்துறை வந்தளவிற்கு உற்பத்தி துறை எதுவும் வரவில்லை. இன் னொரு பக்கத்தில் மகிந்தவின் அபிவிருத் திகள் எல்லாம் தமிழ் மக்கள் ஒரு தேசமாக நிலைபெறுவதை கொஞ்சம் கொஞ்சமாக சிதைத்து வருகின்றன.

இந்நிலையில் தமிழ் மக்களுக்கு எதுவுமில்லாத வரவுசெலவுத் திட்டத்திற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு அளித்துள்ளது. இது கண்டிக்கத் தக்க மிகப்பெரும் வரலாற்று துரோகமாகும்.

ஸ்ரீ லங்கா அரசு மட்டுமல்ல தமிழ்த்தேசிய கூட்டமைப்பும், தமிழ் ஒரு தேசமாக நிலைபெறுவதை திட்டமிட்டு அழிக்கின்றதா?

-முத்துக்குமார்-

# வீடு எரிப்பவனுக்கு கொள்ளிக்கட்டை எடுத்துக் கொடுக்கின்றாரா சம்பந்தன்?



இலங்கையின் 67வது சுதந்திர தினம் மைத்திரி அரசாங்கத்தினால் எளிமையாகக் கொண்டாடப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ. தமிழரசுக் கட்சியோ உத்தியோக பூர்வதீர்மானம் எடுக்காமல் அதன் தலைவர் சம்பந்தனும் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் சுதந்திரதின விழாக்களில் கலந்துகொண்டுள்ளனர். சம்பந்தன் சுதந்திரதின விழாவில் கலந்துகொண்டமை அவரின் தனிப்பட்ட முடிவே தவிர கூட்டமைப்பின் முடிவல்ல என சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிவித்திருக்கின்றார். வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமிழ்மக்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை சுதந்திரதின விழாக்கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளப் போவதில்லை எனக் கூறியிருக்கின்றார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தேசிய நிறைவேற்றுசபையில் இணைந்த பின்னர் தற்போதைய அரசாங்கம் என்பது கூட்டமைப்பினது அரசாங்கமுமே. இந்நிலையில் தமது அரசாங்கத்தின் விழாவில் சம்பந்தன் கலந்து கொண்டதில் தவறில்லை என்ற வாதமும் முன்வைக்கப்படுகின்றது. சர்வதேசத்திற்கு இணக்க அரசியல் முகத்தையும், தமிழ்மக்களுக்கு எதிர்ப்பு அரசியல் முகம் என்ற இரட்டை முகத்தை காட்டமுற்படுவதால் ஏற்படும் குழப்பமே இவையாகும்.

கூட்டமைப்பில் சம்பந்தன், சுமந்திரன் தவிர்ந்த ஏனைய தலைவர்கள் பெயருக்குத் தான் இருக்கின்றனர். தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை சம்பந்தன் தன்கையிலேயே வைத்திருக்கின்றார். சுரேஷ்பிரேமச்சந்திரன் கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கின்றபோதும் அவர் முன்வைக்கின்ற கருத்துக்கள் கூட்டமைப்பின் கருத்துக்களல்ல. அவை அவரது தனிப்பட்ட கருத்துக்களே! சம்பந்தனின் கருத்துகளும், செயற்பாடுகளுமே கூட்டமைப்பின் உத்தியோக பூர்வ கருத்துக்களும் செயற்பாடுகளுமாகும்.

சுதந்திரதின வைபவத்தில் கலந்து கொள்ள வேண்டும் என மேற்குலகும், இந்தியாவும் சம்பந்தனுக்கு அழுத்தம் கொடுத்திருக்கலாம். அவ்வாறு கொடுக்கவிட்டாலும் கூட சம்பந்தன் குறிப்பறிந்து செயற்படுவதில் வல்லவர் என்பதால் இந்தியாவிற்கும், மேற்குலகிற்கும் எதுபிடிக்கும் என்பதை குறிப்பால் உணர்ந்து கலந்துகொள்ளும் முடிவை எடுத்திருப்பார். தமிழ் மக்களின் விருப்பங்களைப் பற்றியோ, எதிர்ப்புக்களைப் பற்றியோ சம்பந்தன் ஒருபோதும் கவலைப்படுவதில்லை. தானாகத் தனித்து தீர்மானத்தை எடுத்துவிட்டு எப்படியாவது கட்சியையும் அதனை ஏற்கச் செய்துவிடுவார். கூட்டமைப்புக்கோ, தமிழரசுக் கட்சிக்கோ வலுவான கட்டமைப்பு இல்லாததும் அவருக்கு வாய்ப்புக்களைக் கொடுத்து விடுகின்றது.

சம்பந்தனின் செயற்பாடு என்பது தமிழ்த்தேசிய அரசியலை அதன் உள்ளாந்த மட்டத்தில் நீர்த்துப் போகச் செய்யும் செயற்பாடே. ஆயுதப் போராட்டம் முடிவுற்ற காலத்திலிருந்து இச் செயற்பாடு வளர்ந்து கொண்டு வருகின்றது. சுதந்திரதின வைபவத்தில் கலந்து கொண்டமை இச்செயற்பாட்டின் பரிணாம வளர்ச்சியே!

> **சம்பந்தனின் செயற்பாடு என்பது தமிழ்த்தேசிய அரசியலை அதன் உள்ளாந்த மட்டத்தில் நீர்த்துப் போ-கச் செய்யும் செயற்பாடே. ஆயுதப் போராட்டம் முடிவுற்ற காலத்திலிருந்து இச் செயற்பாடு வளர்ந்து கொண்டு வருகின்றது. சுதந்திரதின வைபவத்தில் கலந்து கொண்டமை இச் செயற்பாட்டின் பரிணாம வளர்ச்சியே!**

ஆயுதப் போராட்ட முடிவுடன் தமிழ்த் தேசிய அரசியலின் அடிப்படைகளான தாயகம், தேசியம் சுய நிர்ணயம் என்பவற்றைக் கைவிட்டமை சம்பந்தனின் முதலாவது சறுக்கலாகும். இதற்கு சம்பந்தன் கூறிய காரணம் இந்தியா இவற்றை விரும்பவில்லை என்பதே! பேராசிரியர் சிற்றம்பலம் இதை மீறி கருத்துக்களைக்கூறியபோது சம்பந்தனால் கண்டிக்கப்பட்டார். தேர்தல் காலத்தில் மட்டும் வாக்குகளைப் பெறுவதற்காக இக் கோசங்கள் உச்சரிக்கப்பட்டன.

இராண்டாவது சறுக்கல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு மேதினத்தை யாழ்ப்பானத்தில் நடத்தியது மட்டுமல்லாமல் ரணில்விக்கிரம சிங்கவுடன் சேரந்து சிங்கக்கொடி ஏற்றியமையாகும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அங்கீகரிக்காத ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு மேதினத்தை கொண்டாடியமை முதலாவது தவறாகும். தமிழ் மக்களைப் புறக்கணித்து சிங்கக் கொடியை ரணிலுடன் இணைந்து ஏற்றியமை இரண்டாவது தவறாகும்.

தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் தமிழ்மக்களை ஒடுக்குவதில் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல. இதனை மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஒன்று தமிழருக்கு நெஞ்சில் குத்துகின்ற கட்சி.மற்றயது -முதுகில் குத்துகின்ற கட்சி என வர்ணித்தார். தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பதை இரண்டு கட்சிகளும் என்றைக்கும் ஏற்றவையல்ல. இக் கட்சிகளுடன் இணைந்த செயற்பாடு என்பது தமிழ்த்தேசிய அரசியலை நீர்த்துப் போகச் செய்யும் செயற்பாடே!

சிங்கக் கொடியில் தமிழ் மக்களது அடையாளம் சமத்துவமாக இடப்படவில்லை என்ற அதிர்ப்தியை அக்கொடி உருவான காலம் முதல் தமிழ்மக்கள் தெரிவித்து வந்தனர். கொடியில் தமிழ் முஸ்ஸிம் மக்களைக் குறிப்பிடுவதற்கு இரண்டு கோடுகள் மட்டும் இடப்பட்டன வாளேந்திய சிங்கம் தான் சிங்கள மக்களையும், இலங்கையின் இறைமையயும் குறித்து நின்றது. தமிழ்,முஸ்ஸீம் மக்களைக் குறிக்கும் கோடுகள் வாளேந்திய சிங்கத்திற்கு வெளியே இருந்ததினால் இலங்கையின் இறைமைக்கு வெளியே தான் தமிழ் முஸ்லீம் மக்கள் இருக்கின்றனர் என்பதை அது காட்டியது. இதனைதேசியக்கொடிஉருவாக்கக்குழுவில் இருந்த தமிழர்கள் எதிர்த்தனர். வாளேந்திய சிங்கத்திற்குள் தமிழ், முஸ்ஸீம் மக்களைக் குறிக்கும் கோடுகள் இடுமாறு கேட்டனர் ஆனால் சிங்களத்தரப்பு அதற்கு இணங்கவில்லை இதனால் குழுவில் இருந்த தமிழ் உறுப்பினர் நடேசன் அதனை எதிர்த்து வெளிநடப்பு செய்தார்.


சிங்களக் கொடி நடைமுறைக்கு வந்த காலம் தமிழ் அரசியல் சக்திகள் அதனை ஏற்கவில்லை. சிங்கக்கொடி அறிமுகப்படுத்திய தினத்தன்று தந்தை செல்வா தமிழர் ஆட்சியின் கடைசி மன்னன் சங்கிலியனின் நந்திக் கொடியை தனது வாகனத்தில் ஏற்றி கொழும்பு வீதிகளில் பவனி வந்தார். அன்று தொடக்கம் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, விடுதலை இயக்கங்கள் என்பன சிங்கக் கொடியைப் புறக்கணித்து வந்தன. அதே சிங்கக் கொடியை சம்பந்தன் ரணிலுடன் இணைந்து ஏற்றியிருந்தார்.

சம்பந்தனின் மூன்றாவது சறுக்கல் வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்ட மாகாண-சபைகளில் போட்டியிட்ட போது ஏற்பட்டது. இந்தியாவின் வற்புறுத்தலின் பேரில் முதலில் கிழக்கு மாகாண சபையிலும் பின்னர் வடமாகாணசபையிலும் கூட்டமைப்பினர் போட்டியிட்டனர். வடக்குக் கிழக்கு இணைந்த மாகாணசபையில் போட்டியிடாத கூட்டமைப்பினர். பிரிக்கப்பட்ட மாகாண சபையில் முண்டியடித்துக் கொண்டு போட்டியிட முனைந்தனர்.

இதில் இரண்டுவிடயங்கள் உண்டு. முதலாவது பிரிக்கப்பட்ட மாகாணசபையில் போட்டியிட்டமையாகும். இரண்டாவது ஒற்றையாட்சிக்குட்பட்ட மாகாணசபையில் போட்டியிட்டமை மூலம் ஒற்றையாட்சி முறையை ஏற்றுக் கொண்டமையாகும். வட - கிழக்கினை உயர்நீதிமன்றம் தீர்ப்பு மூலம் பிரித்தாலும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு இணைப்பில் உறுதியாக இருக்கும் வரை அதற்கு ஒரு அரசியல் அந்தஸ்து இருந்தது. பிரிக்கப்பட்ட மாகாணசபைகளில் போட்டியிட்டதன் மூலம் அந்த அரசியல் அந்தஸ்தையே இல்லாமல் ஒழித்துவிட்டனர்.

அடுத்தது மாகாணசபை முறைமையால் எந்தவித பயனுமில்லை என்பதை அறிந்தும் அதனை ஏற்றமையாகும். 13வது திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு எந்தவித சுயாதீனமும் கிடையாது. இது ஒற்றையாட்சிக்குட்பட்ட ஒரு நிர்வாகப் பரவலாக்கமே. இதனை அரசியல் தீர்வாக ஏற்றமை தமிழ் மக்களுடைய சுயநிர்ணய அரசியல் தீர்வுக் கோரிக்கையை பலவீன-மடையச் செய்துள்ளது. இனப்பிரச்சினை

(23 ஆம் பக்கம் பார்க்க)



இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com

# வரவேற்கத்தக்க தீர்மானம்

வடக்கு மாகாண சபையினால் கொண்டு வரப்பட்டுள்ள இனப்படுகொலை தொடர்பிலான தீர்மானம் வரவேற்கத்தக்க ஒன்று. இவ்வளவு கால விடுதலைப் போராட்டத்தில் மக்கள் இழந்தவற்றிற்கும், அவர்கள் மேற்கொண்ட தியாகங்களுக்கும் கொடுக்கப்பட்ட தகுந்த கௌரவமாகவே இது பார்க்கப்பட வேண்டும். இது நிறைவேற்றப்பட்டதன் பின்னால் இருக்கின்ற அரசியலுக்கு அப்பால் தமிழர் அரசியல் வரலாற்றில் இவ்வாறானதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு விடயம்.

இன்றைய நிலையில் - இலங்கையில் இந்திய மற்றும் மேற்குலகு சார்ந்த ஆட்சிமாற்றம் ஒன்று நிகழ்ந்துள்ள நிலையில் தமிழர்களின் அரசியல் சர்வதேசத்துக்கு அவசியம் தேவைப்பட இல்லை. அது மஹிந்த ராஜபக்சவின் காலத்திலேயே அவரைக் கட்டுப்படுத்தும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஐ.நா மனித உரிமைகள் பேரவை தீர்மானம், போர்க்குற்ற விசாரணை போன்ற மிரட்டல்கள் அவரை நோக்கியே விடுக்கப்பட்டன. ஆட்சி மாற்றத்தை இலங்கை கண்டவுடன் இனி அந்த விடயங்களை பேச வேண்டிய தேவை சர்வதேசத்துக்கு இல்லாத சூழலே உருவாகியுள்ளது. எனவே தமிழர்களும் சர்வதேச நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் இங்கு பொறுப்புக்கூறலை வலியுறுத்தாமலும் அரசியல் தீர்மாவாக 13ற்குள் திருப்பதிப்பட்டுக் கொள்வதன் மூலமும் அனைவராலுமே நமது பிரச்சினை மறந்துவிடப்படக்கூடிய ஒன்றாக மாறிவிடும். எதிர்வரும் மார்ச் மாதத்தில் வரவிருக்கின்ற ஐ.நா தீர்மானத்தைக் கூட தள்ளிப் போட வைக்கின்ற அல்லது நீர்த்துப்போகச் செய்கின்ற நடவடிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் அதன் வெளிநாடுகளிலுள்ள கிளைகளின் உதவியுடனும் இலங்கையும் சர்வதேச நாடுகளும் ஈடுபட்டு வருகின்றன. இந்த நேரத்தில் இங்கு இன்னமும் இடம்பெற்றுக்கொண்டிருப்பது இனப்படுகொலையே என இடித்துரைப்பது மிகப் பொருத்தமான ஒன்று.


உண்மையில் உலகில் எந்த இனமும் சந்திக்காத இன்னல்களைத் தமிழர்கள் சந்தித்திருக்கிறார்கள். சந்தித்து வருகிறார்கள். அவர்கள் வரலாறு முழுதும் செய்துவந்த தியாகங்கள் மிக உச்சமானவை. எனவே அந்தத் துயரங்களுக்கும், தியாகங்களுக்கும் ஒரு பெறுமதி கிடைத்தாகவேண்டும். அத்துடன், நலிந்து வரும் தமிழ்த் தேசிய அரசியல் புதுவீரியம் கொள்ளவேண்டிய தேவையும் எழுந்திருக்கின்றது. புலிகளின் மௌனிப்பிற்கு பின்னரான தமிழ்த்தேசிய அரசியல் கூட்டமைப்புத் தலைமையில் முழு அனுசரணையுடன் பல்வேறு தரப்பினரினதும் சதித்திட்டங்களின் காரணமாக பின்னடைவை சந்தித்திருந்தது. இளைஞர், யுவதிகள் கொண்டிருந்த விடுதலைக் குணாம்சம் திட்டமிட்டு சிதைக்கப்பட்டு வருகின்றது. இவை அனைத்தும் சீர் செய்யப்பட்டு தேசிய விடுதலை நோக்கிய பயணம் ஜனநாயக வழியில் மீளவும் துளிர்விடவேண்டும். அதற்கு இந்தத் தீர்மானம் பெரும் உயிர்ப்பூட்டலை செய்திருக்கின்றது. எங்கள் தியாகங்களை நினைத்தாவது இதற்கு ஒரு தீர்வு வேண்டும் என்ற எண்ணத்தை பலரின் மனதிலும் ஏற்படுத்தியிருக்கிறது. விடுதலை நோக்கிய ஜனநாயகப் பயணத்தின் மீள் தொடக்கப்புள்ளியாக மாறியிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உடனடியாகவே வரவேற்றுள்ளது. அதேவேளை கூட்டமைப்பு பொறுப்புக்கூறல் விடயத்திலும், இனப்பிரச்சினை தீர்வு விடயத்திலும் நேர்மையாகச் செயற்பட்டால் அவர்களுடன் ஒத்துழைத்துச் செயற்படத்தாயர் என்ற நல்லெண்ணத்தையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளிப்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது. மறுபக்கத்தில் கூட்டமைபபின் தலைமைகள் மீதான தமது அனுபவரீதியான நியானமான சந்தேகத்தினையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே கூட்டமைப்பினர் இந்த சந்தர்ப்பத்தை வெறுமனே அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்திவிட்டு கைவிடலாகாது. அப்படி செய்தால் மறுபடியும் துரோகம் செய்தவர்களாகிவிடுவார்கள். இதனை தமிழினம் மீளவும் ஒன்றுபடுவதற்கான ஒரு தொடக்கப்புள்ளியாகக் கொண்டு இனவிடுதலைக்கான ஜனநாயகப் போராட்டத்தை மிடுக்குடன் கொண்டு செல்ல வேண்டும். தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைமைகள் இனியாவது இதயச்சுத்தியுடன் இயங்கத் தொடங்குவது தமிழர் அரசியலுக்கு மிகப் பொருத்தமான செயலாக அமையும்.



# கிழக்குமாகாண முதலமைச்சர் ! கூட்டமைப்பின் தோற்றுப் போன இராஜதந்திரம்



கிழக்கு மாகாணமுதலமைச்சர் பதவியை முஸ்லீம் காங்கிரஸ் குறுக்கு வழிகளினால் பெற்றிருக்கின்றது. புதிய முதலமைச்சராக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஹாவிஸ் நஸீர் அகமட் பதவி ஏற்றுள்ளார். அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் அதிகமாக வாழ்வதனால் அம்மாவட்டத்திற்கே முதலைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. அம்மாவட்டத்தைச் சேர்ந்த ஜெமீல் அதற்காக முயற்சி செய்தார். அது பலனளிக்கவில்லை. அவர் சாய்ந்தமருதில் ரவூப்ஹக்கீமின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டம் செய்தார். கட்சி நீக்க அறிவிப்பை தலைமை செய்தவுடன் அவர் அடங்கிவிட்டார்.

முஸ்லீம்களின் அரசியல் மையம் கிழக்கு மாகாணம் தான். அதுவும் அம்பாறை மாவட்டமே! ரவூப்ஹக்கீம் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இதனால் அவரின் தலைமைக்கு எப்போதும் அம்பாறை மாவட்டத்தில் எதிர்ப்பு இருந்தது. அங்கிருந்து முதலமைச்சர் பதவி வருவது தனது தலைமைக்கு ஆபத்தைத் தரும் என ஹக்கீம் நினைத்திருக்கலாம்.

முதலமைச்சர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக ரவூப்ஹக்கீம் மேற்கொண்ட குறுக்கு வழிகள் ஏராளம். அது விடயத்தில் மகிந்த ராஜபக்ஷ தோற்றுப் போய்விடுவார் என்றே கூறவேண்டும். கூட்டமைப்பு விடாப்பிடியாக முதலமைச்சர் தங்களுக்கே எனக் கூறியிருந்தது. மூன்று தடவை முஸ்லீம் காங்கிரஸ்சுடன் பேச்சுவார்த்தை நடாத்தியும் பலன் கிடைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டமைப்பை முறிக்கதயாராக இருக்கவில்லை.

ரவூப்ஹக்கீம் யாரை எதிர்த்து வெளியேறி மைத்திரியை ஆதரிக்க முற்பட்டாரோ அந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் ஆதரவினை நாடி அதனைப் பெற்றுக் கொண்டார். ரிசாத்பதியுதீனுடன் எதுவும் பேசாமலேயே அவர்களது உறுப்பினர்கள் இருவரையும் பிடுங்கியெடுத்தார். பிள்ளையானுக்கு ஆசைவார்த்தைகள் கூறி அவர்களிடமிருந்து இரு உறுப்பினர்களது ஆதரவினைப் பெற்றார். அதாவுல்லா எங்கே தான் தனிமைப்பட்டு விடுவேனோ என அஞ்சி தானாகவே ஆதரவு கொடுத்தார். ரவூப்ஹக்கீமுக்குத் தேவையான பெரும்பான்மை கிடைத்துவிட்டது.

தற்போது வெளியில் இருப்பது கூட்டமைப்பின் 11 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் நான்கு உறுப்பினர்களும் தான். சம்பந்தனின் இராஜதந்திரம் தோற்றுப் போனதால் கூட்டமைப்பு ஆடிப்போய்விட்டது. அரசாங்கத்திடமிருந்து இந்த சிறிய அபிலாசைகளைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத நீங்கள் எவ்வாறு பெரிய அபிலாசைகளைப் பெறப் போகின்றீர்கள் என மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கியுள்ளனர். சம்பந்தன் கட்சியின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களை கொழும்புக்கு அழைத்துப் பேசியபோதும் அவர்கள் திருப்திப்படுவதாக இல்லை. தற்போது மாகாண நிர்வாகத்தில் சில அமைச்சுப் பதவிகளையாவது பெற முயற்சிப்பதாக தகவல்.

கிழக்கில் 40:37:23 என்ற விகிதத்தில் தமிழர், முஸ்லீம்கள், சிங்களவர்கள் ஆகிய மூன்று சமூகங்களும் வாழ்வதால் எந்தச்சமூகமும் தனித்து நிர்வாகத்தைக் கைப்பற்ற முடியாது. இரண்டு சமூகங்கள் இணைந்தால் கைப்பற்ற முடியும். தமிழ் - சிங்கள முரண்பாடு இருப்பதனால் முஸ்லீம்கள் அதனைப் பயன்படுத்தி நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

முஸ்லீம்களின் அரசியல் மையம் கிழக்கு மாகாணம் தான். அதுவும் அம்பாறை மாவட்டமே! ரவூப்ஹக்கீம் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இதனால் அவரின் தலைமைக்கு எப்போதும் அம்பாறை மாவட்டத்தில் எதிர்ப்பு இருந்தது. அங்கிருந்து முதலமைச்சர் பதவி வருவது தனது தலைமைக்கு ஆபத்தைத் தரும் என ஹக்கீம் நினைத்திருக்கலாம்.

தமிழர்களில் அம்பாறை மாவட்டத் தமிழர்களும், மட்டக்களப்பு மாவட்ட தமிழர்களும் முஸ்லீம்களையே எதிரியாகப் பார்க்கன்றனர். இதனால் சிங்கள சமூகத்துடன் இணைந்து நிர்வாகத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற கருத்து கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களிடம் இருந்தது. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான தயாகமகே தனக்கு முதலமைச்சர் பதவியை மட்டும் தாருங்கள் மீதி அமைச்சுப் பதவிகளை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் இணைந்து செயற்படலாம் எனக் கேட்டார். கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பலருக்கு அதில் விருப்பம் இருந்த போதும் தலைமை அதனை நிராகரித்து விட்டது.

கிழக்கு மாகாணத் தமிழர்கள் தமிழ் - முஸ்லீம் முரண்பாட்டினால் இதனை ஆதரிக்கின்ற போதும் அது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. கிழக்கின் பூர்வீக மக்கள் தமிழர்களும், முஸ்லீம்களுமே! சிங்களவர்கள் திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம்நிலங்களைப் பறித்தவர்கள். என்ன தான் முரண்பாடு இருந்தாலும் தமிழர்களும் முஸ்லீம்களுமே கிழக்கின் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். இதற்காக தமிழர்கள் மீது முஸ்லீம்கள் சவாரி செய்வதை அனுமதிக்க முடியாது.

(17ஆம் பக்கம் பார்க்க)

-சூரியவேந்தன்-

# ஆட்சி மாற்றத்தின் பின்னரான தமிழ் அரசியல்

ஆட்சிமாற்றத்தின் பின்னரான தமிழ் அரசியல் மிகவும் கவலைக்குரியதாக வுள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசின் பங்காளிக்கட்சியாக மாறி இணக்க அரசியலுக்குச் சென்றமையே இதற்குக் காரணம். பொது எதிரணியின் நூறு நாள் வேலைத்திட்டத்திலும் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழ் மக்கள் பற்றி எதுவும் கூறாத நிலையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனாவை ஆதரித்தது. தமிழ் மக்கள் தங்களுக்கு சாதகமாக இருந்த சர்வதேச விசாரணை, இலங்கைத் தீவினை மையப்படுத்திய புவிசார் அரசியல் போட்டி என்கின்ற புறச்சூழலை விலையாகக் கொடுத்தே ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தினர்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் கூட தமிழர் சார்பான எவையும் பெரிதாக முன்னெடுக்கப்படவில்லை. இந்தியாவின் நலன்களுக்காக வடமாகாணசபையின் ஆளுனரும், பிரதம செயலாளரும் மாற்றப்பட்டுள்ளனர்.

இணக்க அரசியல் என்பது இரு சம தரப்புகளுக்கிடையே நிலவுகின்ற அரசியல். இங்கு இரண்டிற்கும் வெற்றி கிடைக்கும். ஆனால் கூட்டமைப்பு முன்னெடுக்கின்ற இணக்க அரசியலில் தமிழ் மக்களுக்கு எதுவுமில்லை. வெற்றி நிலையில் சிங்களத் தரப்பும், தோல்வி நிலையில் தமிழர் தரப்பும் உள்ள போது இணக்க அரசியல் என்பது சரணாகதி அரசியலே. சம்பந்தன் தனித்து இணக்க அரசியல் செய்வதில் பிரச்சினையில்லை. தமிழ் மக்களின் தலைவராக இருந்து கொண்டு இணக்க அரசியல் செய்வது தான் பிரச்சினை. இங்கு சம்பந்தன் தமிழ் மக்களின் சுயமரியாதையை அடகு வைக்கின்றார். தனி மனிதருக்கு மட்டுமல்ல ஒரு தேசிய இனத்திற்கும் சுயமரியாதை உண்டு.

இன்றைய நிலையில் தமிழ் மக்களைப் பொறுத்த வரை இரண்டு விடயங்கள் முக்கியமாக உள்ளன. ஒன்று அரசியல் தீர்வு மற்றையது இயல்பு நிலையைக் கொண்டு வருதல். புதிய ஆட்சியில் இரண்டிலும் முன்னேற்றங்களைக் காணமுடியவில்லை.

அரசியல் தீர்வு முயற்சிகள் எதுவும் தற்போது இல்லை. 13வது திருத்தம் தான் அரசியல் தீர்வு என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகும் இது விடயத்தில் இந்தியாவிற்கு ஒத்தூதுகின்றது. கூட்டமைப்பு இந்தியாவின் எடுபிடி அமைப்பாக இருப்பதனால் வெளியில் சமஷ்டித் தீர்வு பற்றிப் பிதற்றித் திரிந்தாலும் நடைமுறையில் 13வது திருத்தத்தினை அரசியல் தீர்வாக ஏற்றுள்ளது.

இந்தியாவிற்கு இலங்கை - இந்திய ஒப்பந்தம் முக்கியம். அதனைப்பேண 13 வது திருத்தத்தில் திருத்தங்கள் செய்தாலும் தமிழ் மக்களுக்குப் பயன்படப் போவதில்லை என தமிழ்நாட்டில் கர்ச்சித்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் இன்று மௌனமாக அந்த முறையினை ஏற்றிருக்கின்றார். காணி மாகாணசபைக்கு இல்லை என உயர் நீதி மன்றம் கூறிவிட்டது. பொலிஸ் அதிகாரம் வழங்கப்படக் கூடாது என்பதில் தென்னிலங்கைக் கட்சிகள் அனைத்தும் உறுதியாக உள்ளன. ஒற்றையாட்சிக் கட்டமைப்பை ஒரு போதும் மாற்றுவதில்லை என மைத்திரி ஹெல உறுமயவுடன் ஒப்பந்தம் செய்திருக்கின்றார். இந்நிலையில் எதுவுமே இல்லாத மாகாணசபைமுறைமையைத் தலையில் தூக்குவதன் மூலம் என்ன பயன் கிடைக்கப் போகின்றது.

அடுத்த விடயம் இயல்பு நிலையினைக் கொண்டு வருதல். அது பற்றி அதிகம் பேசப்படுகின்றது. ஆட்சி மாற்றத்தை ஆதரித்த பலர் இயல்பு நிலையைக் கொண்டு வருவதற்காக மைத்திரிக்கு வாக்களிக்க வேண்டுமென வாதிட்டனர். இராணுவம் பறித்த காணிகள் மீட்டல், வலிவடக்கிலும் சம்பூரிலும் மீளக்குடியேறுதல், இராணுவக் குறைப்பு, சிறையிலுள்ளோர் விடுதலை என்பவை பற்றித் தான் இயல்பு நிலையினைக் கொண்டுவருதலில் முக்கியமாகப் பேசப்படுகின்றது.

இங்கு ஒரு முக்கிய கேள்வி எழுகின்றது. தமிழ் அரசியலில் முக்கியப்படுத்த வேண்டியது அரசியலா? விளைவுகளா? இயல்பு நிலை விடயத்தில் அடங்குகின்ற காணிப் பறிப்புத் தொடக்கம் சிறைக் கைதிகள் பிரச்சினைகள் வரை அனைத்தும் தமிழ் மக்களின் அரசியலின் விளைவுகளே! அரசியல் பிரச்சினையால் தான் இந்த விளைவுகள் ஏற்பட்டன. இதன் ஒரு பகுதி ஒடுக்கு முறையால் ஏற்பட்டது. மறுபகுதி ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடியதால் ஏற்பட்டது. அரசியல் பிரச்சினை இருக்கும் வரை விளைவுகள் திரும்பத் திரும்ப வந்து கொண்டேயிருக்கும். அரசியல் பிரச்சினைக்கு முடிவு வராத வரை விளைவுகளுக்கான தீர்வுகள் தற்காலிகத் தீர்வுகளாகவே இருக்கும். அரசியல் தீர்வு வந்து விட்டால் விளைவுகளுக்கும் தீர்வு வந்து விடும். எனவே அரசியலைத் தான் நாம் முதன்மைப்படுத்த வேண்டும். விளைவுகளை இரண்டாம் பட்சமாகவே கருத வேண்டும்.

> இணக்க அரசியல் என்பது இரு சம தரப்புகளுக்கிடையே நிலவுகின்ற அரசியல். இங்கு இரண்டிற்கும் வெற்றி கிடைக்கும். ஆனால் கூட்டமைப்பு முன்னெடுக்கின்ற இணக்க அரசியலில் தமிழ் மக்களுக்கு எதுவுமில்லை. வெற்றி நிலையில் சிங்களத் தரப்பும், தோல்வி நிலையில் தமிழர் தரப்பும் உள்ள போது இணக்க அரசியல் என்பது சரணாகதி அரசியலே.

அரசாங்கம் எப்போதும் விளைவுகளையே பெரிதாகக் காட்டும். மக்களை அரசியல் தீர்வின் பக்கம் கவனத்தைச் செலுத்த விடாமல் விளைவுகளிலேயே கவனத்தை குவிக்க வைக்கும். அரசாங்கத்தின் தந்திரோபாயத்திற்கு நாம் பலியாகி விடக்கூடாது. மறுபக்கத்தில் விளைவுகள் கொடூரமாக இருக்கும்போது அது அரசியலையும் பாதிக்கும் என்பது உண்மைதான் . உதாரணமாக மகிந்த அரசின் பச்சை ஆக்கிரமிப்புக்கள் தமிழ்த் தேசியத்தின் இருப்பையே ஆட்டம் காணச் செய்தது உண்மைதான். இந்நிலையில் தற்காலிகத் தீர்வுகள் தேவைப்படலாம். இதன் போது அரசியலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் விளைவுகளுக்கு தற்காலிக தீர்வு காண முற்பட வேண்டும். அரசியலை விலையாகக் கொடுத்து ஒரு போதும் விளைவுகளுக்கு தீர்வு காண முற்படக் கூடாது.

ஆட்சி மாற்றத்தை ஆதரித்தவர்கள் அதன் மூலம் காணிகளை மீளப் பெற்றுக் கொள்ளலாம், இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்கலாம். சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்கலாம், சிறைக் கைதிகளை விடுவிக்கலாம் என்பதையே முதன்மைப் படுத்தி வாதிட்டனர்.

தற்போது ஆட்சி மாற்றம் வந்து விட்டது. ஆனால் மேற்கூறியவை நிறைவேறும் என்பது சந்தேகமே. ஆட்சிமாற்றம் வந்த சூட்டுடன் சிலவற்றைச் செய்திருந்தால் நம்பிக்கை வைக்கலாம். இனிமேல் நம்பிக்கை வைப்பதற்கு வாய்ப்புக்கள் குறைவு. ஏனெனில் இவற்றில் பல அரச கட்டமைப்புடன் சம்பந்தப்பட்டவை . இலங்கையின் அரசுருவாக்கம் என்பது சிங்கள பௌத்த கருத்து நிலை ஆதிக்கம் கொண்ட அரசுருவாக்கமே. இந்த அரசுருவாக்கத்தினாலேயே இனப் பிரச்சினைகளையும் அதன் வழிநீண்டகாலப்போராட்டமும் உருவானது. இந்த அரசுருவாக்கத்தை அரசின் இராணுவக் கட்டமைப்பே பாதுகாக்கின்றது. இதனால் இராணுவக் கட்டமைப்பில் குலைவினை ஏற்படுத்த ஆட்சிக்கு வருவோர் விரும்புவதில்லை. மைத்திரபால சிறிசேனாவும் அதற்கு விதிவிலக்கல்ல.

மேலே கூறிய இயல்பு நிலையைக் கொண்டு வருவதற்கு உரிய விடயங்கள் இராணுவக் கட்டமைப்புடன் தொடர்புடையவை என்பதால் அவற்றிலே கைவைக்க அரசாங்கம் தயக்கம் காட்டுகின்றது. ரணிலின் சமாதான உடன்படிக்கைக் காலத்திலும் இதுவே இடம்பெற்றது. கட்டம் கட்டமாக உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படும் எனக் கூறியபோதும் நடைமுறையில் அவை இடம் பெறவில்லை. ஓமந்தைச் சோதனைச் சாவடி மீண்டும் திறக்கப்பட்டமையும், வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டமையும், தேசியக் கொடி ஏற்றாமைக்காக நல்லூர் பிரதேச சபைத்தலைவர் வசந்தகுமாரை சி.ஐ.டியினர் விசாரணைக்கு அழைத்தமையும், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்ட விதிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இராணுவத்திற்கு வழங்கப்பட்டமையும் இராணுவம் தனது இறுக்கமான நிலைப்பாட்டிலிருந்து விலகத்தயாரில்லை என்பதையே காட்டுகின்றது.

ஆனால் மறுபக்கத்தில் ஆட்சி மாற்றத்திற்கு விலையாகக் கொடுத்தது தமிழரது அரசியல். ஆயுதப் போராட்டம் முடிவின் பின்னர் தமிழ் அரசியலின் அகச் சூழல் மிகவும் பலவீனமாக இருந்தது. மக்கள் தோல்வி மனப்பான்மைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். அதிலிருந்து விடுபட்டவர்கள் சற்று செயற்பட முனைந்தால் இராணுவக் கெடுபிடிகள் கொடூரமாக அவர்களை நசித்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் இலாவகமான வகையில் தமிழ்த் தேசியத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கு முயற்சித்தது.

இந்நிலையில் புறச் சூழல் மட்டும் தமிழ் அரசியலுக்குச் சாதகமாக இருந்தது. சர்வதேச விசாரணையும், சீனாவின் அதிகரித்த பிரசன்னத்தால் எற்பட்ட புவிசார் அரசியல் போட்டியுமே சாதகமான புறச் சூழலை உருவாக்கியிருந்தன. தாயகத்தில் கெடுபிடிகள் இருந்தாலும் தமிழ் டயஸ்போறாவும், தமிழகமும் சற்று வினைத்திறனுடன் செயற்படக்கூடிய சூழல் இருந்தன. ஆட்சி மாற்றத்தினால் புறச் சூழல் முழுமையாக இல்லாமல் போய்விட்டது. அகச் சூழல் முன்னரை விட பலவீனமடைந்து வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய நிறைவேற்றுச்

(23 ஆம் பக்கம் பார்க்க)





# ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ.....

- முத்தர் அம்மான் -

கூட்டமைப்பின் தன்னிகரலில்லா தலைவர் மற்றும் பின்கதவு எம்பியென இரண்டு பேரும் சத்தம் சந்தடியில்லாமல் இலங்கையின்ர சுதந்திரநிகழ்விற்கு போன விவகாரம் எடுபிடிகளிற்கு கூட பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கு. ஆளாளுக்கு திட்டிக்கொண்டும் பூட்டின வீட்டுக்குள்ள புறுபுறுத்துக்கொண்டிருக்கிறதாகவும் கேள்வி. சீ தூவெண்டு காறிதுப்பாத சனமில்லை.ஆளாளுக்கு தோளில போட்டுத்திரிஞ்ச பட்டுசால்வைகளை இப்போது தலையளிற்கு போட்டுதிரியிறதாக கேள்வி. அந்த ஆளிற்கு எங்கேனும் சிங்கக்கொடியை கண்டால் தலையில இருந்து கால்வரை உணர்ச்சிபிரவாகம் பெருக்கெடுத்தோடுமெண்டது இவ்வளவு நாளும் ஒருத்தருக்கும் தெரியாதோ.

ஆளாளுக்கு மிரட்டினதிலயும் வெருட்டினதாலயும் எதிர்பார்ப்பிற்கு மாறாக அவள் பிள்ளை அனந்திக்கு மக்களிடையே ஆதரவு அதிகரிச்சுக்கொண்டு போறது பெரிய தலைகள் எல்லாவற்றிற்கும் அதிர்ச்சியாக இருக்குதாம். எப்பிடியும் நாடாளுமன்ற தேர்தலில் ஒதுக்கிப்போட வேணுமெண்டு முனைப்பு காட்டி கட்சியில இருந்து நீக்கினாலும், எரிக்கப்பட்டாலும் சாம்பலில் இருந்து எழுந்து வாற பீனிக்ஸ் பறவையாகிப்போயிருக்கிறாள் அவள் பிள்ளை. ஆனால் அவள் தேர்தல் பகிஸ்கரிப்பிற்கு சொன்ன காரணங்கள் இப்போது மெய்யாகிவாறதை கண்டு பிழை பிடிச்சவையெல்லாம் மூச்சுப்பேச்சின்றி இருக்கிறதுதான் இப்போது பெரியகதை.

கூத்தமைப்பில இப்போது பலருக்கும் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில சீற் பிடிக்கிற கனவில தான் திரியினம். அதனால பலரும் கைவிட்ட விடயங்களை தூசுதட்டி புத்துயிர் கொடுக்க தொடங்கியிருக்கினம். காணாமல் போனோரை பற்றி கதைக்கினம்.பினாமியாக போராட்டம் நடத்துகினம்.அரசியல் கைதிகள் பற்றியும் பேசுகினம்.கூத்தமைப்பினை பதிவு செய்யிறதப்பற்றியும் பேசுகினம்.எல்லாவற்றையும் விட மூன்று தடவைக்கு மேலாக கதிரையிலிருந்தவை இனி தேர்தலில போட்டியிடக்கூடாதென்று இடம்பிடிக்க மற்றொரு பகுதிகாரர் வெளிக்கிட்டிருக்கினம்.

தந்தை செல்வா சொன்னமாதிரி இனி தமிழனை கடவுள்தான் காப்பாற்றவேணும்.ஐ.நாவிசாரணையும் காலம் குறிப்பிடாது ஒத்திவைக்கப்பட்டவுள்ளமை அம்பலமாகியிருக்கின்றது. அமெரிக்காவிற்கு விரும்பின ஆட்சி மாற்றம் நடந்திட்டுது.இனி தமிழ் மக்களது பிரச்சினைகள் பற்றி சர்வதேசம் மறந்து போகும்.பிரதம நீதியரசர் எல்லாம் நம்மட ஆள்.அதனால உள்நாட்டுவிசாரணைகள் பக்காவாக நடக்கப்போகுது.என்ன பழையபடி வருடக்கணக்கினில் விசாரணை நடக்கும்.சனம் அழுதழுது கொண்டு வாக்குமூலமளிக்கும்.பேப்பர்காரரும் பக்கம் பக்கமாக நிரப்பித்தள்ளுவினம். தீர்வு அப்பிடியொண்டும் கிடைக்காதெண்டது கடவுளிற்கே தெரியுமோ தெரியாது.


முப்பது வருட ஆயுதப்போராட்டம், தொடர்ந்து ஆயுதப்போராட்டம் தியாகங்கள் அர்ப்பணிப்புக்கள் எல்லாம் ஆளுநர் மாற்றத்திற்கும் பிரதம செயலாளர் மாற்றத்திற்குமெண்டாகிப்போயிட்டுது.வாற போற வெளிநாட்டுக் காரனுங்கள் எல்லாமுமே ஆளுநர் மாற்றினதை தமிழ் ஈழம் தந்த கணக்கில கதைக்கிறாங்கள்.அதுக்குள்ள தானா முன்வந்து முதலமைச்சர் ஆளுநர் சொக்கதங்கமெண்டு அறிக்கை விடுகிறார்.ஆளுநர் இதுவரை மஹிந்த ராசாவின் காணாமல் போனோர் விசாரணையினையில ஆமிக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு திரிஞ்சவர்.போதாக்குறைக்கு உலகமெங்கும் சுற்றி சுற்றி தமிழின அழிப்பை நியாப்படுத்தின ஆள். இப்ப அவரும் தியாகியாகியிட்டார் பாருங்கோவன்.

# அமுதவாக்கு




ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ச வெற்றிபெற்றிருந்தால் நாம் வெலிக்கடைச் சிறைக்குள் தள்ளப்பட்டிருப்போம்.

**-அமைச்சர் ராஜித சேனாரத்ன**




எந்த ஒரு ஆசை வார்த்தைகளையும் கூறி தமிழக முகாம்களில் இருக்கும் ஈழத்தமிழர்களை அவசர கதியில் இலங்கைக்கு அனுப்பி வைக்கக்கூடாது. இந்த விடயத்தில் மத்திய அரசு, மாநில அரசின் கருத்தை முற்றிலும் பின்பற்ற வேண்டும்.

**ஆர்.சரத்குமார்**
**தலைவர் அகில இந்தியசமத்துவ மக்கள் கட்சி**




கொடுங்கோண்மையான ஆட்சியாளர் ஒருவரை அல்லது ஒடுக்குமுறை அரசாங்கமொன்றை வெறுமனவே தூக்கியெறிவதனால் மாத்திரம் சுதந்திரம் வெல்லப்படுவதில்லை. அது வழமையாக புதிய கொடுங்கோண்மைக்கும், ஒடுக்குமுறைக்குமான முன்னோடி மாத்திரமே.

**ஜொனாதன் சக்ஸ்**




ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிக் கட்சிகள் கடைப்பிடித்த அணுகுமுறை கொரில்லா யுத்தம் போன்று எதிரியின் முகாமுக்குள் குழப்ப நிலையை தோற்றுவிப்பதாகவே இருந்தது. மகிந்தருக்கு அரசியலில் அழிவைக் கொண்டு வந்த தாக்குதல் வெளியில் இருந்து அல்ல உள்ளுக்குள் இருந்தே தொடுக்கப்பட்டது.

**-சித்தார்த் வரதராஜன்-**



கடந்த செப்டெம்பரில் சீன ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்த போது சீனாவின் கடல் பட்டுப்பாதை தொடர்பான யோசனைக்கு ராஜபக்ச வெளிக்காட்டிய முற்றுமுழுதான ஆதரவு சீனாவுடனான இலங்கையின் நெருக்கம் குறித்த புதுடில்லியின் கவலைகளை அதிகரித்திருந்தது.

**எம்.பி.வித்தியாதரன்**
**இந்தியப்பத்திரிகையாளர்**




நானே தலைவனாகி அரசியல் கட்சியை நடத்துகிற அளவிற்கு எனக்கு திறமையும் கிடையாது. அனுபவமும் கிடையாது. ஆசையும் கிடையாது. எனக்கு ஒரு தலைவர் வேண்டும். தகுதிகளை தலைவனுக்குரிய நான்தான் தீர்மானிப்பேன்.

**நடிகர் கமல்ஹாசன்**

சிங்கள மக்களின் ஆதரவை இழக்கக் கூடாது என்பதற்காக தமிழ் மக்களின் அரசியல் உரிமைப்பிரச்சினைகள் குறித்து தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் கட்சிகளும் மௌனம் சாதிக்கின்ற படு பிற்போக்குத்தமையான அரசியல் கலாச்சாரம் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றது.

**சமகால அரசியல்தலையங்கம்**





# இந்திய - மேற்குலகக் கூட்டின் தற்போதைய இலக்கு மைத்திரி அரசாங்கத்தைப் பாதுகாப்பதே

-பூரணன்-

மைத்திரி அரசாங்கத்தின் நூறு நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு புதிய பிரதம நீதியரசர் நியமனத்துடன் நெருக்கடிகள் வரத் தொடங்கிவிட்டன. இது விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாகப் பிளவுபட்டிருக்கின்றது. கட்சியின் மூத்த தலைவர்கள் சற்று மௌனமாக இருந்தாலும் இளந்தலைவர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். பாராளுமன்றத்தையும் செயற்படவிடாமல் தடுத்திருக்கின்றனர். கறுப்புப்பட்டி போராட்டமும் இடம் பெற்றிருக்கின்றது. தினேஸ் குணவர்த்தனா, வாசுதேவநாணயக்கார, விமல் வீரவன்ச போன்ற சுதந்திரக்கட்சி அல்லாதவர்கள் இந்த செயற்பாட்டில் முன்னணியில் நிற்கின்றனர்.

இவ்வாறு பல எதிர்ப்புக்கள் வருகின்ற போதும் அரசாங்கம் தனது நிகழ்ச்சிநிரலை நகர்த்திக் கொண்டேயிருக்கின்றது. இதற்குக் காரணம் இந்த நிகழ்ச்சி நிரல்களின் மூல கர்த்தா மைத்திரியோ, ரணிலோ, சந்திரிக்காவோ அல்ல. மாறாக இந்தியாவும் மேற்குலகமுமே மைத்திரி அரசாங்கத்தின் பணி இந்தியா-மேற்குலகத்தின் நிகழ்ச்சி நிரலை நடைமுறையில் நகர்த்துவதே!

தற்போதைய நிலையில் இந்திய-மேற்குலகத்தின் இலக்கு மிகவும் தெளிவானது, தாங்கள் சிரமப்பட்டு உருவாக்கிய அரசாங்கத்தை பாதுகாப்பதே அதன் இலக்கு. இதற்காக அவை பிரதானமாக இரண்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றன. ஒன்று மகிந்தரை மீள எழும்பவிடாமல் தடுத்தல். இரண்டாவது தமிழ்த் தேசிய அரசியலை எழுச்சியடைய விடாமல் தடுத்தல். இரண்டு வேலைத்திட்டங்களிலும் அவை வெற்றியடைந்து வருகின்றன என்றே கூற வேண்டும்.

மகிந்தரை மீள எழும்பவிடாமல் தடுத்தல் என்ற வேலைத்திட்டத்தைப் பொறுத்தவரை மூன்று பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதில் முதலாவது மகிந்தர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி அவரை நாட்டைக்கொள்ளையடித்தவராக சிங்கள மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துதலாகும். இங்கு கவனிக்க வேண்டிய முக்கியவிடயம் இதனை ஒரு நீதிமன்ற நடவடிக்கையாக கொண்டு செல்லும் நோக்கம் மைத்திரி அரசாங்கத்திற்கு இல்லை. வெறுமனவே அம்பலப்படுத்தும் நோக்கம் மட்டுமே உண்டு. ஜனாதிபதி மீது அவரது பதவிக் காலம் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது என்பதற்கு அப்பால் இது தொடர்பான விருப்பமும் அரசாங்கத்திற்கு இருப்பதாகத் தெரியவில்லை. இதற்குப் பிரதான காரணம் மகிந்தர் மீது நடவடிக்கை எடுப்பதை சிங்கள மக்கள் விரும்பாமையே! ஏற்கனவே சரத்பொன்சேகா மீது மகிந்தர் எடுத்த நடவடிக்கைகளை ஒரு பழிவாங்கல் நடவடிக்கையாகவே சிங்கள மக்கள் பார்த்தனர். மகிந்தரின் குடும்பஆட்சி, ஜனநாயகமின்மை என்பவை காரணமாக சிங்கள மக்களில் ஒரு பிரிவினர் அவர் மீது அதிர்ப்தி கொண்டிருந்தார்களே தவிர போர் வெற்றி நாயகன் என்ற கௌரவத்தை மாசுபடுத்த அவர்கள் விரும்பவில்லை.

மகிந்தர் ஜனாதிபதியாக இருந்தமையினால் யாப்பு ரீதியாகப் பதவிப்பாதுகாப்பு உண்டு. பதவிக்காலத்தின்போதான அவரது செயல்கள் தொடர்பாக எந்த நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்ப முடியாது. ஆனால் கோத்தபாய மீதோ, பசில் ராஜபக்ச மீதோ சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எந்தத் தடைகளும்கிடையாது. எனினும் அரசாங்கம்இதற்கும் துணியவில்லை. சண்டேலீடர் பிரதம ஆசிரியர் லசந்தவிக்கிரமசிங்க கொலை தொடர்பாக கோத்தபாய மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பேசப்பட்டது. ஆனால் பின்னர் அது கைவிடப்பட்டது. அவர் மீது கை வைத்தால் போர்க்கால இராணுவக்கட்டமைப்பு பற்றி கேள்வி எழுப்ப வேண்டி வரும். இதனை சிங்கள மக்களும் விரும்பமாட்டார்கள். இராணுவமும் விரும்ப மாட்டாது.

மைத்திரியைப் பொறுத்தவரை இராணுவக் கட்டமைப்பில் எந்தக் குலைவையும் ஏற்படுத்த தயாராகவில்லை. அதற்கு அவர் தயாராக இருந்திருந்தால் பதவியேற்றவுடனேயே இராணுவப் பதவிகளில் மாற்றங்களைக் கொண்டு வந்திருப்பார். தன்னுடன் ஒத்துழைக்கக்கூடியவர்களைத் தேர்ந்தெடுத்து பதவியிலிருத்தியிருப்பார். அந்த முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை. சரத்பொன்சேகாவிற்கு பின்னரான இராணுவக்கட்டமைப்பு என்பது மகிந்தரும், கோத்தபாயாவும் உருவாக்கிய கட்டமைப்பே. அந்தக் கட்டமைப்பையே மைத்திரி தனக்குரிய கட்டமைப்பாகவும் ஏற்றிருக்கின்றார்.

இரண்டாவது சிங்கள அடித்தள மக்களின் ஆதரவினை வென்றெடுப்பதாகும். சிங்கள மத்தியதர வர்க்கம் மகிந்தரின் சர்வதிகார ஆட்சிக்கு எதிராக மைத்திரியை ஆதரித்து நின்ற போதும் சிங்கள அடித்தள மக்கள் மகிந்தருக்கு ஆதரவாகவே வாக்களித்திருந்தனர். இந்த மக்களின் ஆதரவினை வென்றெடுப்பதற்காகவே வரவு செலவுத் திட்டத்தில் ஒரு போதும் எதிர்பார்க்காத வகையில். பொருட்கள், சேவைகளின் விலைகள் குறைக்கப்பட்டன. சிங்கள மத்தியதர வர்க்கத்தின் ஆதரவினைத் தொடர்ந்து பேணவேண்டும் என்பதற்காக 10,000ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. இவ்வாறான அதிகரித்த சம்பள உயர்வு முன்னர் ஒரு போதும் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஒரு வகையில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வரவு செலவுத்திட்டம் எனவும் இதனைக் கூறலாம்.

மூன்றாவது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பண்டாரநாயக்க குடும்ப ஆதிக்கத்தில் மீண்டும் கொண்டு வருதலாகும். சந்திரிகா ஆட்சிமாற்ற விடயத்தில் மிகுந்த அக்கறை எடுத்தது இதற்காகத் தான். தற்போது பண்டாரநாயக்கா குடும்பத்தில் அரசியல் ஆர்வம் உள்ளவர் சந்திரிகா மட்டுமே. அவரது சகோதரி சுனித்ராவிற்கு அரசியல் தொடர்பாக எந்த அக்கறையும் கிடையாது. சந்திரிகாவின் பிள்ளைகளும் இது வரை வெளிப்படையாக ஆர்வம் எதனையும் காட்டவில்லை. எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பண்டாரநாயக்க குடும்ப ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவது என்பது சந்திரிகாவின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதே! சந்திரிகா அரசாங்கப் பதவிகளில் எந்த அக்கறையும் காட்டாவிட்டாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனது ஆதிக்கத்தின் கீழ் இருப்பதையே விரும்புகின்றார்.


**மகிந்தர் ஜனாதிபதியாக இருந்தமையினால் யாப்பு ரீதியாகப் பதவிப்பாதுகாப்பு உண்டு. பதவிக்காலத்தின் போதான அவரது செயல்கள் தொடர்பாக எந்த நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்ப முடியாது. ஆனால் கோத்தபாய மீதோ, பசில்ராஜபக்ச மீதோ சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எந்தத் தடைகளும் கிடையாது. எனினும் அரசாங்கம் இதற்கும் துணியவில்லை.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களுக்கு பண்டாரநாயக்கா குடும்பத்தின் மீது மிகுந்த அபிமானம் உண்டு. இதனால் பண்டாரநாயக்கா குடும்பத்தின் ஆதிக்கத்தின் கீழ் கட்சி வருவதை அவர்களும் விரும்புகின்றனர். மகிந்தவின் சர்வாதிகார முகத்தை விட சந்திரிகாவின் தாராண்மை முகம் சிறந்தது எனவும் அவர்கள் கருதுகின்றனர். கட்சியின் அடிப்படைத் தொண்டர்களும் பண்டாரநாயக்க குடும்பத்தை விரும்பக் கூடும். இந்திய காங்கிரஸ் கட்சிக்கு நேருகுடும்பம் எவ்வளவு முக்கியமோ அதேயளவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பண்டாரநாயக்க குடும்பம் முக்கியம். இந்தியாவிற்கும் மேற்குலகத்திற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து எப்படியாவது மகிந்தரை அகற்ற வேண்டும். அவரை மட்டுமல்ல அவரது குடும்பத்தையே அகற்ற வேண்டும். அவரை மட்டுமல்ல அவரது குடும்பத்தையே அகற்ற வேண்டும். இந்தச் செயற்பாட்டிற்கு சந்திரிக்கா ஒரு நல்ல துரும்பாக அவற்றிற்கு கிடைத்திருக்கின்றது.

இந்திய- மேற்குலகின் இரண்டாவது வேலைத்திட்டம் முன்னரே கூறியது போல தமிழ்த்தேசிய அரசியலை எழுச்சியடையவிடாமல் தடுத்தலாகும். தமிழ்த் தேசியவாதம் எழுச்சியடைந்தால் சிங்கள இனவாதம் எழுச்சியடையும். இந்திய - மேற்குலகின் செல்லப் பிள்ளையாக உள்ள ஒருவர் ஆட்சியிலிருக்கும்போது தமிழ்த் தேசியவாதம் எழுச்சியடையுமானால் அதற்கெதிராக எழுச்சியடையும் சிங்கள இனவாதம் ராஜபக்சேவின் காலம்போன்று மீண்டும் இந்திய-மேற்குலகிற்கு எதிரான சக்திகளுடன் உறவை வலுப்படுத்த முயலும். அவ்வாறான ஒரு நிலை மீண்டும் இலங்கைத் தீவில் ஏற்படுவதனைத் தடுப்பதற்கே இந்தியாவும் மேற்குலகும் முயல்கின்றன.

இதன் அடிப்படையில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தேசிய நிறைவேற்று சபையில் சேர்த்தனர் தற்போது கூட்டமைப்பு போராட்டங்களில் பங்கு பெறுவதை கைவிட்டது மட்டுமல்லாமல் அவற்றில் மக்கள் பங்குபெறுவதை தடுத்தும் வருகின்றது. "நாம் எல்லாவற்றையும் பெற்றுத்தருவோம் நீங்கள் குழப்பாதீர்கள்" என போராட்டம் நடாத்துபவர்களையும் எச்சரிக்கின்றது. இணக்க அரசியலை நடாத்தும் போது போராட்டங்களை நடாத்த முடியாது என்பது தான் இதற்கு காரணம்.

(23 ஆம் பக்கம் பார்க்க)





**வ**ணக்கம் வணக்கம்

நான் கல்வயல் கனகசிங்கம்

எப்படி உங்கட பாடு?

ஏதோ என்ர பாடும் போகுது.

இப்ப கொஞ்ச நாளாக பழைய படி தலைசுத்து அது இதுவெண்டு உடல் நிலைசரியில்லை. ஊரிலகிளினிக் வைத் திருக்கின்ற டாக்குத்தர் உங்களிற்கு பிரஷர் அண்ணைகண்டபடியோசிக்காதையுங்கோ எண்டுறார்.

உண்மைதான் எங்களின்ரை சனத்தின்ர நிலையை நினைச்சால் பிரஷர் கூடாமல் வேறை என்னவரும்? காணாமல் போனோருக்கு பதிலென்ன எண்டுகேட்டு அழுது ஒப்பாரிவைச்சுக்கொண்டுசனம் திரி யுது. கடைசிக்காலத்திலேயேனும் பெத்த தாய் தகப்பனிற்கு கஞ்சி ஊற்றவேணும். கொள்ளி வைக்கவேணுமெண்டு இள மையை தொலைச்சுக் கொண்டு




ஆயிரமாயிரம் பொடியள் சிறையுக்குள்ள வாடுறாங்கள். இன்னொருபக்கம் பெத் தெடுத்த பிள்ளைக்கு தீனிபோட வழியில்லா மல், உடம்பை வித்து அவல வாழ்க்கை வாழுறதுகள். இன்னொரு பக்கம் பெத்தெ தடுத்த, உடம்பைவித்துஅவலவாழ்க்கை வாழுறதுகள் இன்னொருபுறம்

இவ்வளவும் நடக்க, நாமளோ இலங்கையின்ர சுதந்திரதின விழாவில் பட்டுவேட்டி, குஞ்சரங்களோட முன்வரிசை யில குந்தியிருந்துபோஸ்கொடுக்கிறம். போதா தற்கு மனுசி, பிள்ளையளோடபோய்விருந்து சாப்பிட்டுவாறம்.

இல்லைக் கேக்கிறான், கோபித்து போடாதையுங்கோ. உங்களிற்கு ரோசம், மானம் அது இதுவெண்டு ஏதேனு மிருக்கே வெட்கமாயில்லை. நாக்கை தொங் கப்போட்டுக்கொண்டுதிரியிறியள். உங்கட கண்ணுக்குள்ள உந்தசனத்தின்ர கண்ணீர் என்றாலும் ஞாபகத்திற்குவாறதில்லையே.

அதிலயும் சிங்கக்கொடிகாத்த வீரருக்கோ, எங்கின அதைகண்டாலும் மெய் சிலிர்த்துப் போகும். அவ்வளவு விசுவாசம் அவருக்கு மற்றைய வருக்கோ எப்படி யெண்டாலும் அமைச்சராகிப் போடாணு மெண்ட கனவு அதுகளைப் பெற்றுக் கொள்ள சொந்த இனத்தையே கூறிவிற் கும் கேவலம், உலகத்தில வேறு எங்கினையும் இருக்குமெண்டு நான் நம்பவில்லைப் பாருங்கோ

அதுக்குள் தேசியப்பட்டியல்காரரோ எப்படியேனும் நான் வென்று போடாணு மேண்டு ஆலாய் பறக்கிறார். இருக்கிற காடை, கடைப்புளியளுக்கெல்லாம் அள்ளி வழங்கப்படுகிறதாகஅவையிளன்ரகட்சியுக் குள்ளேயேகுசுகுசுக்கினம். பாராளுமன்ற சுற்றுலா அது இதுவெண்டு ஒரே கவனிப்பாம். ஐபகளெல்லாம் நிறையுதெண்டு ஒன்று இரண்டு பின்னாலை அலைஞ்சு திரிஞ் சாலும், இன்னொருபக்கம் உவருக்கு பாடம் படுப்பிக்கவேண்டுமென்று பெரும்பான் மைசனம் தயாராகநிக்கிறதாகக்கேள்வி. அதிலயும் இளைஞரணிகாரர் மிகத்தெளி வாகநிக்கினம்.

அடுத்ததேர்தலில கூத்தமைப்பு நிச்சயமாக துண்டு துண்டாகிப்போகு மென்றதற்கப்பால், ரணில் ஐயாவும் எப்பிடியும் இரண்டு சீற்பிடிச்சுப்போடவே ணுமென்றுதிரியிறர். ஆள் கவிழ்க்கிறதில மன்னாதி மன்னான் கருணாவை கவிழ்த்து ஆள் செய்தசதி சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதனால் நாடாளு மன்றதேர்தல் காலத்தில கூத்தமைப்பை வெட்டிவிட்டுத்தான் ரணில் அரசியல் செய்யப் போகிறாரெண்டதுமட்டும் உண்மை.

மீள்குடியமர்வு, அரசியல் கைதிகள் விடுதலை யென்று எச்சசொச்சங்களை அள்ளி விசிறி ஆள் வாக்குசேகரிக்க திட்டமிட்டிருக்கின்றதாக தகவல். இப்போதைய அரசின்ற நூறு நாளில் தமிழ் சனத்திற்கு ஒரு துரும்பை கூட கிள்ளிப் போட வில்லை யெண்டது தெரிஞ் சகதை.

ஷிராணிக்கு பழைய படி பிரதமநீதியரசர் பதவி சரத்பொன்சேகாவிற்கோ ஜெனரல் பதவி, கூடித்திரிஞ்சவைக்கோ ஆளாளுக் குப் பதவி. ஆனால் தமிழ்சனத்திற்கு பழைய படி ஓமந்தை சோதனைச்சாவடி திறப்பு விழாவும், கட்டுநாயக்கா விமானநிலையத் தில நாடு திரும்பிற வையளுக்கு சிறை வாசமும் தான் மிச்சம். இப்பவும் அநோம தேயதொலைபேசி அழைப்பில மிரட்டல் களும், விசாரணைகளும் மாற்றமேது மின்றிதொடர்கின்றது.

வாறபோறவெள்ளைக்காரங்களெல்லாம் எதுக்கெடுத்தாலும் ஆளுநரை மாத்திரி யிருக்கு, பிரதமசெயலாளரை மாத்திரியிருக் கெண்டு விளக்கம் சொல்லுறாங்கள். ஆளு நரைமாற்றவும், பிரதமசெயலாளரை மாற்ற வுமே, உத்திகளைஆயிரம் பொடியளும், சனங்களும் செத்தது. இல்லைக்கேட்கிறன் சொல்லுங்கோ, ஒட்டுமொத்த தியாகங்களை யும், அர்ப்பணிப்புக்களையும், கொச்சைப் படுத்த யார் காரணம். மாற்றுக்கருத்தில் லாமல் நாங்கள் தான்

வேண்டாம், வேண்டாமெண்ட 13 வதுதிருத்தசட்டத்தின் கீழான மாகாணசபை தேர்தலில விழுந்தடிச்சு போட்டிபோட்டம் நாங்களும் பாய்ந்துவிழுந்துபுள்ளடிபோட்டம் பிறகுவேலியாலபோறஓணானைவேட்டியுக் குள்ளபிடிச்சுவிட்டுட்டுகுத்துதுகுடையுதெண் டமாதிரிஅதிகாரமில்லைஅது இல்லை இது இல்லையெண்டு திரியினம்.

அதேபோல பகிரங்கமாக ஆதர வளிக்கவேண்டாம், தேர்தலைபுறக் கணிப்பமெண்ட வங்கள் மேல அபாண்டமா பொய்யான பழியை சுமத்தினியள். இப்ப மைதத்திரி ஐயா ஒன்றும் செய்யிறாரில்லை யெண்டு ஒப்பாரி வைக்கிறீர்கள். போதாக் குறைக்குநம்பியிருந்த ஐ.நாவின்ர போர்க் குற்ற விசாரணையும், உள்ளக விசாரணை எண்ட பெயரில நீத்துப் போகச் செய்து போட்டியள்.

இப்பசொல்லுங்கோயார் எங்கடை தலையில மண்ணை அள்ளிப்போட்டது?

தூரப்பர்வை இல்லாத, சுயநல அரசியல் கும்பல்களை அடையாளம் காணுங்கோ. அவைகளை முன்னேற்றப் பாதைகளில இருந்து தூக்கி வீசி தடை- களை அகற்றுங்கோ பயணம் சுமுகமாக இருக்கும். என்ன மாதிரிஉங்களிக்கும் பிரஷர் வராதுசரியோ.

# நையாண்டியார்

## பதில்கள்

**தே.சுரேஸ்குமார்**
**செட்டிக்குளம், வவுனியா**

**கேள்வி:- வடமாகாணசபையின் இனஅழிப்பு மற்றும் சர்வதேச நீதிமன்றினில் நிறுத்துதல் பிரேரணை பற்றி?**

பதில் :- 16 மாத காலத்தினில் உருப்படியானதொரு பிரேரணை. ஆனாலும் சீவன் போகின்ற உயிருக்கு கடைசியினில பால் வார்ப்பதாகவே அமைந் திருக்கின்றது. வெளியினில் சொல்லமுடியாத பேருண்மை மாகாண சபையினில் இருக்கின்ற பலரிற்கு பிரேரணையினில் என்ன சொல்லி யிருக்கின்றதென்பது தெரியாதாம். சிலர் அன்று பேரவைக்கு வராமல் பதுங்கி விட்டதாகவும்தகவல். சுமந்திரன், சம்பந்தனை தாண்டிசாதித்தது ஒருமுன்னு தாரணம்

**ப.சிவகுமார்**
**தாளையடி, வடமராட்சி கிழக்கு**

**கேள்வி:- கூட்டமைப்பினை பதிவு செய்யவேண்டுமென மீண்டும் குரல்கள் எழுந் துள்ளதே?**

பதில்:- சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் தன்னிச்சையான செயற்பாடுகளை மட்டுப்படுத்த கூட்டமைப்பினை பதிவு செய்வது தேவையென்ற கருத்துக்கள் வலுத்துள்ளது. தமிழரசுக்கட்சியின் தலைகள் பலவும் கூட்டமைப்பினை பதிவு செய்வதென்ற மனநிலைக்கு வந்துள்ளதாகவும் தகவல். ஆனால் தமிழரசுக்கட்சியை வெளியே விட்டு கூட்டமைப்பினை பதிவு செய்வதென்பது வேறு தரப்புக்களது கையாளுகைக்கே வழிகோலலாம்.

**செல்வி.க அனுசியா**
**மன்னார்**

**கேள்வி- ஆட்சி மாற்றத்திற்கு வாக்களித்துவிட்டு ஏதுமின்றி தமிழ் தரப்புக்கள் கையறு நிலையினில் இருக்கின்றனவே?**

பதில்- முதலில் முந்தைய ஆட்சியாளர்களை வீட்டிற்கு அனுப்பவே தமிழ் மக்கள் வாக்களித்திருந்தனர். கூட்டமைப்பு அரசியல்வாதிகள் மலையை பெயர்த்து கொண்டுவரப்போவதாக கூறிய சிங்களத் தலைமைக்கு வாக்களிக்குமாறு உசுப்பேத்தினர். ஆனாலும் எத்தரப்பையும் ஆதரிக்க வேண்டாம், ஒதுங்கிநிற்போம் என்றவர்கள் கூட்டமைப்பினராலும் அவர்கள் சார்பு எழுத்தாளர்களாலும் துரோகிகளாக்கப்பட்டனர்.

இறுதியில் மைத்திரிக்கு சனாதிபதிப் பதவி, இந்தியாவினதும் அமெரிக்காவினதும் சீனத் தலையிடி தீர்ந்தது. ஊழலில் சிக்கியிருந்த சரத்பொன்சேகாவிற்கு இழந்து போன பட்டங்களும் பதவிகளும், ஊழல் குற்றச்சாட்டில் சிக்கியிருந்த சிராணிக்கு இழந்த பட்டங்களும் பதவிகளும், சந்திரிகாவிற்கு குடும்பச் சொத்தான சுதந்திரக் கட்சி கைமேற்பலநாக கிடைத்துள்ளது. ஒட்டுமொத்த சிங்கள மக்களுக்கும் நல்லாட்சியும் சட்டத்தின் ஆட்சியும் ஆனால் மைத்திரியின் வெற்றியைத் தீர்மானித்த தமிழ் மக்களுக்கோ கண்ணீரும் கம்பலையும் மட்டும்தான் மிஞ்சியுள்ளது. மைத்திரிக்காக வக்காலத்து வாங்கிய கூட்டமைப்பினருக்கு லட்சமாகப் பணம் கொட்டியது. அவர்கள் குடும்பத்தினருடன் சுகபோகம் அனுபவிக்கின்றனர்.

**ந.ஜீவானந்தம்**
**காத்தான்குடி ,மட்டக்களப்பு**

**கேள்வி- கிழக்கு மாகாணசபை தமிழ் தரப்புக்கள் வசமில்லாமல் போய்விட்டதே?**

பதில்- ஐ.நா போர்க்குற்ற விசாரணை தேவையில்லையென்ற ஹக்கீம் தனது சாதுரியத்தால் கிழக்கு மாகாணசபையினை கைப்பற்றியுள்ளார். 11 உறுப்பினர்கள் மூலம் பெரும்பான்மையினை கொண்ட தமிழ் தரப்போ அமைச்சு கதிரை கேட்டு கெஞ்சிக்கொண்டிருக்கின்றது. பரிதாபம் வாக்களித்த மக்கள்.

- எஸ். ஜெயானந்தமூர்த்தி -

# எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமை தாய்மண்ணே..!

புலுட்டுமானோடை என்பது மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் புறக் கிராமங்களில் ஒன்று. செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவினதும் அம்பாறை மாவட்டத்தின் மகோயா பிரதேச செயலகப் பிரிவினதும் எல்லையில் இது அமைந்துள்ளது. மிகவும் பழமை வாய்ந்த விவசாயக் கிராமம். இக் கிராமம் பற்றி பலருக்குத் தெரிந்திருக்க முடியாது. இன்று இக்கிராமம் அடையாளம் தெரியாதவாறு அழிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகருக்கு வட மேற்காக சுமார் 60 கிலோமீற்றர் தொலைவில் அமைவிடத்தைக் கொண்டுள்ள குறித்த கிராமத்திற்கு செங்கலடி பதுளை வீதியில் இலுப்படிச்சேனை சந்தி ஊடாக வேப்பவெட்டுவான் வீதி வழியாகவும் வேறு சில உள் வீதி வழியாகவும் செல்லமுடியும். பரந்த காடுகள் நிறைந்த பகுதியை ஊடறுத்துச் செல்லும் இக்கிராமம் மாவட்டத்தின் எல்லையில் உள்ளது.

வளங்கள் நிறைந்த அதேவேளை பெரும் காட்டினால் சூழப்பட்ட இப்பகுதியை ஒரு தமிழர் கிராமமாக மாற்ற வேண்டும் என்பதில் பெரும் முயற்சி எடுத்து அதில் வெற்றி கண்டவர் வேப்ப வெட்டுவானைச்சேர்ந்த பொன்னையா ஜே.பி இவர் இன்று உயிருடன் இல்லை

வேப்பவெட்டுவான்,மயிலவெட்டுவான், இலுப்படிச்சேனை போன்ற கிராமங்களில் வாழ்ந்தவர்களுக்கு சேனைப்பயிர் செய்யவும் வேளாண்மை செய்யவும் இப்பகுதி பொருத்தமாக இருந்தாலும் இப் பகுதியை அண்டியதாக சிங்களக் குடியேற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கு தமிழர்கள் குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதில் இவர் குறியாக இருந்தார்.

தனது விருப்பத்தை அப்போது செங்கலடி உதவி அரசாங்க அதிபராக இருந்த இ.மோனகுருசாமியிடம் எடுத்துக் கூறியபோது அவரும் இதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

இதன் காரணமாக 1977 ஆம் ஆண்டு இப்பகுதியை உதவி அரசாங்கம் அதிபர் மோனகுருசாமி பொன்னையா ஜே.பியின் உதவியுடன் சில பொதுமக்களையும் அழைத்துச் சென்று இப்பகுதியைப் பார்வையிட்டார். அங்கிருந்த குளம் மற்றும் பயிர்ச்செய்கைக்குரிய நிலவளம் என்பன பொருத்தமாக இருந்ததால் குடியேற்றத்திற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

இங்கு முதற்கட்டமாக வேப்ப வெட்டுவான், மயிலவெட்டுவான், இலுப்படிச் சேனை ஆகிய இடங்களைச்சேர்ந்த பலரைத் திரட்டி புலுட்டுமானோடையில் காடு வெட்டி அங்கு குடியேற்றம் செய்யப் பட்டது.



**1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆடிக்கலவரம் தான் புலுட்டுமானோடையின் அழிவுக்கு வித்திட்டது. இக்கலவரம் ஆரம்பமானகையுடன் மகோயா, பதியத்தலாவ போன்ற சிங்களப் பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் அடிக்கடி இக்கிராமத்திற்குச் சென்று விவசாயிகள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியதுடன் பெண்கள் மீது பாலியல் சேட்டைகளிலும் ஈடுபட முயற்சித்தனர்.**

முதன்முதலாக அங்கு 65 குடும்பங்கள் குடியேறின. இவர்களுக்கு மட்டக்களப்புக் கச்சேரியினால் காணிக்கச்சேரி நடத்தப்பட்டு காணி உரிமைப்பத்திரமும் வழங்கப் பட்டது.

இங்கு இவர்கள் பயிர் செய்கையில் ஈடுபடுவதற்கு வசதியாக குளமொன்றும் அமைந்திருந்தது. இக்குளத்திற்கு எந்நேரமும் கிளை நதியினால் நீர் நிறைந்து கொண்டே இருக்கும். எந்தக் கோடை காலத்திலும் இங்கு நீருக்கு தட்டுப்பாடு கிடையாது. இந்தக் குளம் தான் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையாக இருந்தது. குளத்திற்கு அப்பாலுள்ள பகுதி மகோயா பிரதேசத்திற்குரியது.

இங்கு மக்கள் காடு வெட்டிக் குடியேறி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் அப்பகுதியில் பெருமளவு வாழ்ந்து வந்த புலுட்டுமான்கள் கூட்டம் கூட்டமாக ஓடித்திரிந்தன.இந்த புலுட்டு மான்களையும் அங்கு ஓடிய நீரோடையும் காரணமாக வைத்து இங்கு குடியேறியவர்கள் புலுட்டுமானோடை என்ற பெயரைச் சூட்டிக் கொண்டனர். பின்னர் இப்பெயர் பதிவுகளில் இடம்பெற்றுப் பிரபலமானது.

புலுட்டுமானோடையில் முதன் முதலாக இவர்கள் காடு வெட்டி துப்பரவு செய்த வேளையில் நீரேரிக்கு அப்பால் குடியேற்றம் செய்யப்பட்டிருந்த சிங்களவர்களால் பெரும் தொல்லை ஏற்பட்டது. சிங்களவர்கள் இவர்களைக் குடியேறவிடாது தடுத்ததுடன் இப் பகுதி தமக்குச் சொந்தமானது எனவும் வாதிட்டனர். இதற்கு அஞ்சாத இவர்கள் அவர்களை எதிர்த்து நின்று பயிர்ச்செய்கையில் ஈடுபட்டதுடன் இப்பகுதி தமது பிரதேசம் என்பதையும் உணர வைத்தனர். இதன் பின்னர் அங்கு வாழ்ந்த சிங்களவர்களினால் இவர்களுக்குத் தொல்லை இருக்கவில்லை.

புலுட்டுமானோடை நீர்வளம், நிலவளம் நிறைந்திருந்ததுடன் ஒரு புறம் மலைத்தொடர்களாலும் சூழப்பட்டிருந்தது. மிகவும் அழகிய அக்கிராமத்தில் இவர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் சித்தாண்டி, வந்தாறுமூலை போன்ற கிராமங்களைச் சேர்ந்தவர்களும் குடியேறவும் பயிர்ச் செய்கையில் ஈடுபடவும் ஆரம்பித்தனர். இதனால் அங்கு நிரந்தரமாக இருப்பவர்கள் தொகை குடும்பங்களாக அதிகரித்தது. இதனால் இப் பகுதி பெரும் வளம் மிக்க வளர்ச்சி மிக்க கிராமமாக மாறியது.

1978 ஆம் ஆண்டுக்குப் பின் காந்தியம் என்ற அமைப்பு எல்லைப்பகுதிக் கிராமங்களில் விவசாயப் பண்ணைகளை அமைக்கத் தொடங்கியது. இதன் மூலம் மக்களை சுயதொழில் திட்டங்களில் ஈடுபடுத்துவதுடன் குடியேற்றக் கிராமத்திற்குரிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தது.

காந்தியம் எல்லைப் புறங்களில் தமது பண்ணைகளை அமைத்து வரும் வேளையில் அதன் கண்ணில் புலுட்டு மானோடையும் தென்பட்டது. இப்பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அக் கால கட்டத்தில் எல்லையில் இக்கிராமம் அமைந்திருந்தாலும் இவ்விடத்தை இனங் கண்டு அங்கும் ஒரு பண்ணையை அமைத்தது. இப்பண்ணையின் மூலம் விவசாயிகளுக்கு உள்ளீடுகள், இலகு கடன் என்பவற்றை வழங்கியதுடன் விவசாயச் செய்கை தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கியது. அத்துடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடை ஒன்றும் அமைக்கப்பட்டு மக்களுக்கு பொருட்கள் இலகுவாகக் கிடைக்கவும் வழி செய்யப்பட்டதுடன் பாலர் பாடசாலை என்பவற்றையும் அமைத்துக் கொடுத்தது.

காந்தியத்தினால் பண்ணை அமைக்கப்பட்டதாலும் மக்கள் பயிர்ச்செய்கையில் தீவிரமாக ஈடுபட்டதாலும் இக்கிராமம் மிக விரைவாக வளர்ச்சி பெறலாயிற்று சேனைப் பயிருடன் பழவகைகளையும் மக்கள் உற்பத்தி செய்தனர். அத்துடன் இக்கிராமம் உருவாகிவருவதைக் கருத்திற்கொண்டு தென்னை அபிவிருத்தி அதிகார சபையினால் ஒரு குடும்பத்திற்கு 64 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுதென்னைப் பயிர்ச்செய்கையும் ஊக்குவிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆடிக்கலவரம் தான் புலுட்டுமானோடையின் அழிவுக்கு வித்திட்டது. இக்கலவரம் ஆரம்பமான கையுடன் மகோயா, பதியத்தலாவ போன்ற சிங்களப் பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் அடிக்கடி இக்கிராமத்திற்குச் சென்று விவசாயிகள் மீது

## அழிக்கப்பட்ட தமிழ்க்கிராமங்கள் புலுட்டுமானோடை

23ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றையாட்சி முறைக்குள் முடக்கும் செயற்பாட்டுக்கு வடமாகாணசபை தீர்மானம் ஒரு பதிலடி!

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

வட மாகாண சபையில் தமிழ் இனவழிப்பு தொடர்பாக நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானத்தை நாம் முழுமையாக ஆதரிப்பதோடு முதலமைச்சர் விக்னேஸ் வரன் அவர்களுக்கும் வடமாகாண சபைக் கும் பாராட்டுகளை தெரிவிக்க விரும்பு கிறோம். வடமாகாணசபை, 13ம் திருத்தம் என்ற விடயங்களுக்கு அப்பால் இப்படியான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி யமை, தேசிய அரசியலை ஒற்றையாட்சி முறைக்குள் முடக்குகின்ற செயற்பாட்டுக்கு கொடுத்த பதிலடியென்று நாங்கள் பார்க்கின் றோம்.

நேர்மையுடன் இந்த அடிப்படை யில் செயற்படுவற்கு முதலமைச்சரும் வடமாகாண உறுப்பினர்களும் ஏனைய கூட்டமைப்பின் உறுப்பினர்களும் தயாரென் றால், இத்தீர்மானத்திற்கு நேரெதிராக செயற்படுபவர்களை ஓரம்கட்டி, முதலமைச் சர் தலைமையில் இந்த நிலைப்பாட்டை வலி யுறுத்தி முன்னுக்குப் போகத்தயாரென்றால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அவ் வாறான தலைமைக்கு முழு ஆதரவையும் வழங்குவற்கு தயாராக உள்ளது என்பதுடன் இணைந்து செயற்படுவதற்கும் தயாராக இருக்கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

வடமாகாண சபைத்தீர்மானம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் உத்தியோக பூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஊடகமாநாடு ஒன்று அக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரினால் இணைந்துநடாத்தப்பட்டது. நேற்றையதினம் புதன்கிழமை (11.02.2015) மாலை யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற பத்திரிகை யாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதேகஜேந்திரகுமார்பொன்னம் பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் ஊடக மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதி தேர்தல் வெறு மனே மகிந்து ராஜபக்சவிற்கும் மைத்திரி பால சிறிசேனவிற்கும் இடையே நடை பெற்ற தேர்தல் அல்ல. இவ்விரண்டு வேட் பாளர்களுக்கும் பின்னால் வல்லரசுகளுக் கிடையேயான ஒரு போட்டி இடம்பெற்றது. மகிந்த ராஜபக்சவிற்குப் பின்னால் நின்ற சீனாவுக்கும், மைத்திரிபால சிறிசேனவிற்குப் பின்னால் இந்தியா மற்றும் மேற்கு நாடுகளுக் கும் இடையே இப்போட்டி நடைபெற்றது என்பதை நாம் கடந்தமுறை நடைபெற்றுற ஊடகவியலாளர் மாநாட்டில் தெளிவாகக் கூறியிருந்தோம்.

சீனாவை வெளியேற்றவேண்டும் என்ற கோணத்தில் மைத்திரிபாலவை ஆதரிக்கின்ற வல்லரசுகள், மைத்திரிபால




ஐ.நா சபையில் இலங்கைக்கு எதிரான திர்மானம் மீதான விவாதத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் தமிழ் மக்களுக்கு நடந்த இனப்படுகொலை என குறிப்பிட்டு சர்வதேச விசாரணையை வலியுறுத்திய போதும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களாக குறிப்பிடப்படும் மாவைசேனாதிராசா மற்றும் தேசியப் பட்டியல் எம்.பி சுமந்திரன் உட்பட 5 முக்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.நா. பார்வையாளர் இருக்கையில் (கலரியில்) பார்வையாளர்களாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

இத்தேர்தலில் வென்றால், பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவை தம்பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காக சிங்கள தேசம் விரும்புகின்ற செயற்பாடுகளைத் தான் முன்னெடுப்பார்கள். சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ளாத செயற்பாடுகளை அவர்கள் கைவிடக்கூடும். இந்தவகையில் ஜெனிவாவின் பொறுப்புக்கூறல் என்ற விடயங்கள்கூட ஒரு கட்டத்தைத் தாண் டிப் போகாமல் தடுக்கப்படக்கூடும் என்ற ஆபத்தையும் நாம் அன்றே சுட்டிக் காட்டியிருந்தோம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பகிஷ்கரிப்பு என்ற கோரிக்கையை முன் வைத்ததற்கு முக்கிய காரணம், பேரம் பேசுவதே. தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்கு கள் இல்லாமல் ஓர் ஆட்சிமாற்றம் இடம்பெறப் போவதில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இதனால் முன்கூட்டியே ஒரு சில உத்தரவாதங்களைப் பெறுவதற்கு, அதா வது எங்களது வாக்குகளைப் பெறுவதற்கு எங்களது விருப்பங்களையும் நீங்கள் உள் வாங்க வேண்டும் என்ற வாக்குறுதியை வழங்கிய பிறகுதான் நாங்கள் உங்களுக்கு ஆதரவைத் தரலாம் என்பதை வலியுறுத் தவே நாங்கள் பகிஷ்கரிப்பு என்ற கோட் பாட்டை முன்வைத்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதனை வலியுறுத்தியிருந்தால், ஆட்சி மாற்றத்தை இந்தளவிற்கு விரும்புகின்ற தரப்புக்கள் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்தி ருப்பார்கள்.

வட மாகாண சபையில் தமிழ் இனவழிப்பு தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர் மானத்தை நாம் முழுமையாக ஆதரிப்ப தோடு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கும் வடமாகாண சபைக்கும் பாராட்டுகளை தெரிவிக்க விரும்புகிறோம். வடமாகாணசபை மற்றும், 13ம் திருத்தம் என்பவற்றை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுஉங்களுக்குத்தெரியும். ஆனால்தந்த விடயங்களுக்கு அப்பால் இப்படியான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியமை, தேசிய அரசியலை ஒற்றையாட்சி முறைக்குள் முடக்குகின்ற செயற்பாட்டுக்கு கொடுத்த பதிலடியென்று நாங்கள் பார்க்கின்றோம்.

வடமாகாணசபையின் இத்தீர் மானம் நீண்ட ஒரு போராட்டத்திற்கு பிற்பாடு நிறைவேற்றப்பட்டுள்ள ஒன்று. இதற்கு முன் னர் இரண்டு தடவைகள் வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் முன்னெடுத்த முயற்சிகள் தோல்வியடைந்து, தாமதிக்கப் பட்டு, பலத்த இழுபறிகளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது.

சிவாஜிலிங்கத்தின் இம்முயற்சி களின்போது, 'இன அழிப்பு என தீர்மானம் நிறைவேற்றுவதில் சட்டப்பிரச்சனைகள் உள்ளன, இனவழிப்பு தான் நடந்துள்ளது என்று நாம் கூடமுடியாது' என திரு சுமந்திரன் தனக்கு வழங்கிய ஆலோசனையின் பிரகாரம், 'இன அழிப்பிற்கு சமமானது' என்ற பொருள்பட ஒரு தீர்மானம் அப்போது நிறைவேற்றப்பட்டது.

ஆனால், தற்போது முதல மைச்சர் விக்னேஸ்வரன் தனது சுயவிருப்பத்தின் பேரில் எடுத்துள்ள துணிச்ச லான முடிவுக்கு நாம் அவருக்கு பாராட்டு தல்களைத் தெரிவிக்கிறோம். இத்தீர்மானத் தில் கூறப்பட்ட விடயங்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த 5 வருடங்களாக பலத்த சவால்களுக்கு மத்தியிலும் தெரிவித்து வந்துள்ளது. மேலும் ஐ.நா மனிதவுரி மைகள் சபையில் இலங்கைக்கு எதிரான திர்மானம் மீதான விவாதத்தின் போதும் கூட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவராகிய நான் மற்றும் அதன் செயலா ளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சி யின் தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் ஆகியோர் இதனை வலியுறுத்தி வந்துள் ளோம்.

ஆனால் குறித்த திர்மானம் மீதான விவாதத்தின் போது தமிழ்தேசியக் கூட்ட மைப்பின் முக்கிய தலைவர்களாக குறிப்பிடப் படும் மாவைசேனாதிராசா மற்றும் தேசி யப்ப பட்டியல் எம்.பி சுமந்திரன் உட்பட 5 முக்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பின்ர்கள் ஐ.நா. பார்வை யாளர் இருக்கையில் (கலரியில்) பார்வை யாளர்களாக வேடிக்கை பார்க்க தமிழ் மக்கள் இனஅழிப்பு தொடர்பில் தலைமை களின் அடக்குமுறையை பொருட்படுத்தாமல் வடமாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம் மற்றும் வலி வடக்கின் உப தவிசாளர் சஜீவன் சண்முகலிங்கம் ஆகியோர் உரை யாற்றியமையானது பாராட்டத்தக்க விடயமாகும்.

முதலமைச்சரினால் தற்போது கொண்டுவரப்பட்ட இத்தீர்மானத்தை முழுமையாக ஆதரிக்கின்ற அதேசமயம் கூட்டமைப்போடு நாம் நிறையவே அனுபவப்பட்டவர்கள் என்ற ரீதியில், ஒரு சில சந்தேகங்களையும் இவ்விடத்தில் கூற வேண்டும். அதாவது, இன்னும் ஒரு சில மாதங்களில் ஒரு பொதுத்தேர்தல் வர விருக்கிறது. கடந்த 4ம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களான சம்பந்தன் ஐயா, சுமந்திரன் போன்றவர்கள் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தில் கலந்து கொண்டதுடன், அதனை நியாயப்படுத்தும் விதத்தில் கூட்டமைப்பிற்கு இன்றைய ஆட்சியில் முழுமையான நம்பிக்கையிருக் கிறது என்று கூறியிருந்தார்கள்.


ஆனால், இந்நிகழ்விற்கு 6 நாட்கள் இடைவெளியில், மகிந்த அரசாங்கத்தை நாம் நம்பவில்லை, மைத்திரிபால சிறி- சேன அரசாங்கத்தையும் நம்பமுடியாது, இனி வரும்காலத்தில் வரக்கூடிய அரசாங் கங்களையும் நம்பமுடியாது என்று நேரெதி ரான கருத்தைக் கூறி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானத்தின் இக்கருத்துகளை நாம் வரவேற்கிறோம்.

ஆனால்இத்தீர்மானத்தில்சொல்லப் பட்டகருத்துகளுக்குநேரெதிராகசெயற்பட்டுக் கொண்டிருக்கும் சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்களையும், அவர்களை நியாயப் படுத்திக் கொண்டிருப்பவர்களையும் ஓரம் கட்டி, அவர்களை சகல பொறுப்புகளிலிருந்து அகற்றாமல் இத்தீர்மானம் எந்தளவிற்கு தமிழ் மக்களின் நலன்களை மையப்படுத்தி கொண்டு வரப்பட்டது என்பதில் எமக்கு சந்தேகம் உள்ளது.

(23 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் தீர்வுத் திட்டத்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர




இந்த விடயம் தொடர்பில் இண்டு கேள்விகள்தான் உண்டு.

பிரிந்து நிற்கப் போகின்றோமா ? இந்தியாவை எதிர்த்து நாங்கள் எதையும் சாதிக்கமுடியாதா ?

யதார்த்தம் என்னவென்றால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமைகள் அதை விளங்கிக் கொண்டு செயற்படுகின்றார்கள். அந்த வகையில் நாங்கள் ஒன்றாக நின்று மாற்றத்தை ஏற்படுத்துவதானால் அதனுள் நின்று கொண்டு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இல்லை இதைத் தாண்டி இது பிழை என்று மாற்றுத்தலைமையை உரு வாக்கி மக்களை எங்களுக்குப் பின்னால் கொண்டுவரும் ஒரு வேலைத்திட்டத்தை செய்ய வேண்டும்.

2009 மே மாதம் 18ஆம் திகதி போர் முடிவுக்கு வருகின்றது, 21ஆம் திகதி அதாவது போர் முடிந்து 03ம் நாள் இந்தி யாவினுடைய தேசிய பாதுகாப்பு ஆணை யாளர் எம். கே. நாராயணனும் அன்றைய வெளிவிவகாரச் செயலாளர் சிவசங்கமேனன் அவர்களும் இலங்கைக்கு வருகின்றனர். வந்த பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் என்ற வகையில் சம்பந்தன் ஐயா தலைமையில் கட்சித் தலைவர்கள், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சி களின் தலைவர்கள் அனைவரும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டோம்.

அந்தச் சந்திப்பில் எங்களுக்கு மிகத் தெளிவாக ஒரு விடயம் இந்தியத் தரப்பால் சொல்லப்பட்டது. தமிழருடைய இனப் பிரச்சி னைக்கான தீர்வு 13ஆவது திருத்தம் அதா வது மாகாணசபை. நீங்கள் அதை ஏற்க வேண்டும். அந்த இடத்தில் உடனே மறுப் புக் கருத்தை தெரிவித்தார் சுரேஸ் பிரேமச்சந் திரன். அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த சுரேஸ் பிரேமச்சந்திரன்.

"இந்தியாவின்தேசியபாதுகாப்புஆணை யாளரினால் 1987 இல் 13வது திருத்தம் நிறை வேற்றப்பட்டபோது இணைந்த வடகிழக்கு மாகா ணசபையில் போட்டியிட்ட ஒரேயொரு தரப்பு ஈ.பி.ஆர்.எல்.எவ் மட்டுமே. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டுமல்ல சம்பந்தன் ஐயா தலைமையில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி டெலோ, புளொட் மற்றும் தமிழ்க் காங்கிரஸ் என அனைத்துக் கட்சிகளும் மாகாணசபை முறைமையை முற்று முழுதாக நிராகரித்தார்கள். நாங்கள் கூட அந்த 13 ஆவது திருத்தம் ஒரு பிரயோசனமும் இல்லாமல் இருந்தாலும் அதைத் தாண்டியும் போகலாம் என்றும், அதற்கு இந்தியாவினுடைய பலமான ஆதரவு எங்களுக்கு இருக்கும் என்ற ஒரு நம்பிக்கையில் தான் போட்டியிட்டோம். அப்படிப் போட்டியிட்டு வென்றும் இணைந்த வடக்கு, கிழக்கிற்கு முதலமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்ட போதும் எங்களால் எதையும் சாதிக்கமுடியவில்லை.

எனவே நாங்களே அதிலிருந்து விலகிப் போனோம். அதற்குப் பிறகு நாங்கள் ஒன்றைத் தெளிவாக விளங்கிக் கொண் டோம். ,னப்பிரச்சினை தீர்வு விடயத்தில் 13ஆவது திருத்தத்தை வைத்து நாம் முன்நகர முடியாது" என்றார்.

அதற்கு நாராயணன் ஐயா கொடுத்த பதில்,

"தமிழ் மக்களைவிட தமிழ் மக்களுக்கு எது நன்றாகத் தேவை என்பது இந்தியாவிற்கு விளங்கும். 13ஆவது திருத்தத்தைத் தீர்வாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்".

அதற்கு முக்கிய காரணம் சீனா. மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சீனா இலங்கையில் முக்கியம் பெற்றிருந்தது. இந்தியாவிற்கு சீனா இலங்கைக்குள் வருவது தேசிய பாதுகாப்பு பிரச்சினையாக இருந்தது. இவ்வாறு இலங்கையில் எழுச்சிபெறும் சீனா வின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரே ஒரு சட்ட பூர்வமான ஆவணம் இலங்கை - இந்திய ஒப்பந்தம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத் தில் இந்தியாவின் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனா வுக்கும் இடையே எழுதப்பட்ட கடிதங்கள் இணைக்கப்பட்டிருந்தன. அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் இந்தக் கடிதங் கள் ஊடாக இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே ஒரு இணக்கத்தை ஏற்படுத்தலாம். இந்தியாவிற்கு இலங்கை ஒரு வாக்குறுதி வழங்குகிறது. இந்தியாவிற்கு தேசிய பாது காப்பு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய வகை யிலோ அல்லது இந்தியாவின் தேசிய நலன் களைப் பாதிக்கக் கூடிய வகையிலோ இலங் கைத் தீவை மூன்றாம் தரப்பு நாடொன்று பாவித்துக் கால் வைப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அவ்வாறு கொடுக்கப்பட்ட வாக் குறுதி தான் இலங்கையில் சீனாவின் ஆதிக் கத்தைக் கட்டுப்படுத்த எப்போதும் உதவும் சட்டபூர்வமான ஆவணம். அந்த அடிப்படை யிலே இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை உயி- ரோடு வைத்திருப்பதற்கு இந்தியா விரும்பு கின்றது.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில், அரசியல் உள்நோக்கம் கொண்ட 13 ஆவது திருத்த சட்டம் தமிழரது இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற வகையில் கொண்டு வரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல் அமைப்பில் 13 ஆவது திருத்தத்தை கொண்டுவருவதனூடாக மாகாணசபைமுறை உருவாக்கப்பட்டது. இந்த மாகாணசபை முறையை தமிழ்த் தரப்பு தொடர்ந்தும் நிரா கரித்து வந்தால் இலங்கை - இந்திய ஒப்பந்தத் தின் தேவைப்பாடு இல்லாமல் போய்விடும். 13 ஆம் திருத்தம் தான் இலங்கை -இந்திய ஒப்பந்தத்தை உயிரோடு வைத்திருக் கின்றது. இந்த இடத்தில்மிகத்தெளிவாகசொல்லப் பட்டகாரணம்இந்தியாவின்தேசியபாதுகாப்பிற்கு 13ஆவது திருத்தம் தேவைப்படுகின்ற காரணத் தால் தான் அதனைத் தொடர்ந்தும் தமிழர் தலையில் கட்டிவிட இந்தியா முயற்சிக்கின்றது.

ரணில் விக்கிரம சிங்க இப்பொழுது பிரதமராக இருக்கின்றார். அவர் கடந்த வாரம் கண்டியில் வைத்து, ஒற்றையாட்சி முறை மூலம் 13ஆவது திருத்தம் தான் தமிழர் களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று அறிவித்திருக்கிறார்.

13 ஆவது திருத்தம் என்றால் என்ன? இலங்கை ஒற்றையாட்சி முறையுடைய நாடு. அனைத்து அதிகாரங்களும்ஒரே இடத்தில் இருப் பது தான் ஒற்றையாட்சி முறை நிறைவேற்று அதிகாரம் இலங்கையின் ஜனாதிபதி கையி லும், சட்ட உருவாக்க அதிகாரம் இலங்கை யிலுள்ள பாராளுமன்றத்தின் கையிலும் உள்ளது.

இலங்கையினுடைய அரசியல் அமைப் பின் 79ஆவது சரத்தினை எடுத்துப் பார்த் தால் மிகத் தெளிவாக இந்தவிடயம் சொல்லப் பட்டிருக்கின்றது. சட்ட உருவாக்க அதிகாரமும் நிறைவேற்ற அதிகாரத்தையும் எந்தக் கார ணம் கொண்டும் பகிர முடியாது. மாகாண சபையை தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு என்ற வகையில் அறிமுகப்படுத்தி யிருக்கலாம். அந்த மாகாணசபை முறை இந்த ஒற்றையாட்சி முறைக்குள்ளே தான் இருக்கின்றது.

மாகாணசபை நியமிக்கப்பட்டால் தமிழ் முதலமைச்சர் நியமிக்கப்பட வேண்டும். தமிழ் முதலமைச்சராக விக்னேஸ்வரன் ஐயா இருக்கிறார். இலங்கையின் உச்ச நீதிமன்றத் தினுடைய முக்கியமான ஒருவர். அந்த முதலமைச்சர் கூறுகிறார் தனக்கு தனது சொந்தச் செயலாளரை நியமிப்பதற்கோ மாற்று வதற்கோ உரிமையில்லை என்று..

13ஆம் திருத்தத்தைப் பார்த்தால், மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் என்ற ஒரு பட்டியல் இருப்பதுடன் மாகாணசபைக்கும் மத்திய அரசுக்கும் பொதுவான ஒரு பட்டியல் என இரண்டு வகையுண்டு.

மாகாணசபைக்குரிய அதிகாரங்க ளில் பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம், மாநில பொலிஸ் அதிகாரம் எல்லாம் பதியப்பட்டி ருக்கிறது. ஆனால் முதலமைச்சருக்கு உள்ள அதிகாரம் இல்லை. ஒற்றையாட்சி முறை எனக் கூறிக்கொண்டு மாகாணசபைக்குரிய அதி காரங்கள் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் தலைமையிலான அவைக்கு இல்லை. ஜனாதிபதியால் நியமிக்கப் படுகின்ற ஆளுனர் தலைமையிலான அவைக் குத்தான் தான் அதிகாரம் இருக்கின்றது. அத னால் தான் ஆளுனர் விரும்பியபடி எல்லாம் நடக்கின்றன.

நீங்கள் வாக்களித்து நியமிக்கின்ற இந்த முதலமைச்சருக்கு இருக்கும் பணி மக்க ளால் அல்லாமல் ஜனாதிபதியால் தெரிவு செய்யப்படுகின்ற ஆளுனருக்குத் தான் சட்ட பூர்வமான அதிகாரம் இருக்கிறது. இப்படியான ஒரு தீர்வைத் தான் இந்தியா நடைமுறைப் படுத்தக் கேட்டபோது, தமிழ்த் தேசியக் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைமைக்குத் தள்ள பட்டது.

இந்தியா சொல்வதற்காக நாங்கள் இந்தத் தீர்வை ஏற்றுக்கொண்டு போக வேண்டுமா?. இது ஒரு தீர்வல்ல. 13ஆவது

# ந்தை ஏற்கப் போகிறோமா?

## ரெகுமார் பொன்னம்பலம் அவர்கள் ஆற்றிய உரை

திருத்தம் ஒரு சட்ட மரபாக 1987 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போது அது நிறைவேற்றப்பட்ட முன் அமிர்தலிங்கம் ஐயா, (தமிழர் விடுதலைக் கூட்டனி செயலாளர்) சிவ சிதம்பரம் ஐயா (தமிழர் விடுதலைக் கூட்டனி தலைவர்) அப்போது உப தலைவராக சம்பந்தன் ஆகியோர் இந்தியப் பிரதமரான ராஜிவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதினர். குறித்த கடிதத்தில், 13ஆவது திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதைத் தடுத்த நிறுத்த வேண்டும். ஏனென்றால் இது தமிழருடைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற வகையில் தான் கொண்டு வரப்படுகின்றது. ஆனால் இது ஒற்றையாட்சிமுறைக்கு உள்ளாக கப்பட்ட தீர்வு. எந்தக் காரணத்தைக் கொண்டும் அதிகாரத்தை பகிர இடமளிக்காது, என்று குறிப்பிட்டிருந்தனர்.

தமிழ் மக்கள் இதுவரைக்கும் அனுபவித்த கஸ்ரங்கள், அழிவுகள், தியாகங்கள் எல்லாவற்றுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாங்கள் இந்தத் தீர்வை ஏற்க முடியாது. தயவு செய்து தடுத்து நிறுத்துங்கள். இந்தத் தீர்வுத் திட்டம் கொண்டுவரப்பட்டது, 1987 இல். 2015 இல் நினைத்தே பார்க்க முடியாத அளவுக்கு நாம் இழப்புக்களை சந்தித்து இருக்கிறோம். இழப்புகள் எவ்வளவோ குறைந்திருந்த காலத்தில் எற்றுக்கொள்ள முடியாத அதிகாரம் இன்று எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டது? எப்படி ஏற்க முடியும்?

இந்தியாவைத் தாண்டி எதையும் சாதிக்க முடியாது என்பதற்கு நாங்கள் உடன்படவில்லை. நாங்கள் எடுத்த எடுப்பிற்கு அப்படித் தான் யோசிப்போம். ஆனால் கேள்வி என்னவென்றால், இந்தியா, இலங்கை மீது இவ்வளவு அக்கறை செலுத்த என்ன காரணம்? இந்தியா மட்டுமல்ல இன்று அமெரிக்காவும் இலங்கை மீது அக்கறை செலுத்துகின்றது. சீனாகூட இலங்கை மீது கடும் அக்கறை காட்டுகின்றது. சீனா கடந்த 10வருடத்தில் இலங்கைக்குக் கொடுக்கின்ற நிதியுதவியில் முதலாவது இடத்தை பெறுகிறது.

சினாவைப் பொறுத்த வரையில் உலக வல்லரசுகளின் பொருளாதார ரீதியான வளர்ச்சியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இன்று இருக்கக் கூடிய சீனாவின் பொருளாதார வளர்ச்சிதொடர்ந்தும்இந்தவேகத்தில்வளரலாம் என்றால் 2035 க்கும் 2050 ஆண்டுக்கும் இடையில் சீனா முதலிடத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது. அமெரிக்காவை தாண்டி வந்து உலகத்தில் மிகப்பலமான பொருளாதார வளர்ச்சியை தக்க வைக்க முக்கியமான இடம் என்ன? எரிபொருள், எரிபொருள் இல்லாமல் எந்த ஒரு நாடும் முன்னேற முடியாது. சீனாவிற்குத் தேவைப்படுகின்ற எரிபொருளில் 85 சதவீதம் கப்பல் வழியாகத்தான் எடுத்துச் செல்லப்படுகின்றது.

அந்தக் கப்பல் போக்குவரத்துப் பாதையில் இலங்கை மிக முக்கியமான ஒரு இடத்தில் இருப்பதால் தன்னுடைய கப்பல் போக்குவரத்தைப் பார்வையிடவும், உலக வல்லரசாக மாறவேண்டும் என்ற கனவுக்கும் இந்தக் கேந்திரம் மிக முக்கியமாக இருக்கின்றது. அந்த எண்ணத்தைத் நிறைவுசெய்துகொள்ளும் நோக்கில் தான் சீனா கடந்த 15 வருடங்களாக எத்தனையோ வழியில் தனது செய்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

எண்ணெய் பிராந்தியமான மீசெல்லிருந்து கப்பல் ஒன்னுறு புறப்பட்டால் உடனே அது வருவது பாகிஸ்தான் பகுதிக்கே. பாகிஸ்தானில் இரண்டு நிறுத்தங்கள். அதற்கடுத்து

> **சினாவைப் பொறுத்த வரையில் உலக வல்லரசுகளின் பொருளா- தார ரீதியான வளர்ச்சியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இன்று இருக்கக் கூடிய சீனாவின் பொருளா- தார வளர்ச்சி தொடர்ந்தும் இந்த வேகத்தில் வளரல- ாம் என்றால் 2035க்கும் 2050 ஆண்டுக்கும் இடை- யில் சீனா முதலிடத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது, அமெரிக்காவை தாண்டி வந்து உலகத்தில் மிகப்பலமான பொருளாதார வளர்ச்சியை தக்க வைக்க முக்கியமான இடம் என்ன?**

குவால்டா அதனைத் தாண்டி இந்தியா, இந்தியா, சீனாவின் எதிரி நாடு. இந்தியாவை தவிர்த்து கீழே வந்தால் இலங்கை, அம்பாந்தோட்டை துறைமுகம், விமான நிலையம்.

இந்த இரண்டு மையங்களிலிருந்தும் இலங்கையின் முழுப் பகுதிகளுக்கும் போக்குவரத்துச் செய்யக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுவருகின்றன.

மாலைதீவிலும் பயங்கர குழப்பங்கள் வந்தன. மாலைதீவும் சீனாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்து ஒரு தளம் கட்ட இடமளித்திருந்தது. இதைத்தாண்டி இந்தியாவின் கிழக்குப் பக்கத்தைப் பார்த்தால் பங்களாதேசில், சிக்குபோமில் தளம் அமைத்திருக்கிறது. மியன்மாரில்உள்ளபெரியதொருதுறைமுகம்முழுமையாக சீனாவின் தேவைக்காக பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு சீனா அமைத்திருக்கின்ற தளங்களைத் தாண்டி, எரிபொருளைப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்ப்பது மிகப்பெரிய விடயம். இந்த எரிபொருளைப்பயன்படுத்தி உற்பத்தியாகின்ற பொருட்களை உலகத்திற்கு ஏற்றுமதி செய்வதும் கப்பல் ஊடாகத் தான் நடக்கிறது.

இரண்டிற்குமாக, சீனாவுக்கு இந்தக் கடல்வழிப் பாதை முக்கியமானதாக இருக்கின்றது. அதுமட்டுமல்ல சினா உலகத்தில் மிகப் பெரும் வல்லரசாக வந்தால், அந்த இடத்தை தக்கவைத்துப் பாதுகாப்பது என்றால் தனக்குப் போட்டியாக இருக்கக் கூடிய ஆசியாவின் ஒரே ஒரு நாடு இந்தியாமிருந்துதான். இந்தியாவை மட்டுப்படுத்துவதனால் இரண்டு விடயங்களைச் செய்யவேண்டும். ஒன்று, இந்தியாவை சுற்றிவளைக்க வேண்டும். சுற்றி வளைக்கும் வேலைத் திட்டங்களை சீனா ஏற்கனவே மேற்கொண்டு வருகின்றது,

சீனாவிற்கு அது தான் இலங்கையில் இருக்கக் கூடிய முக்கியமான பிரச்சினை. வட எல்லை நாடுகள் முழுவதும் இந்தியாவிற்கு எதிரானதாக இருக்கின்றது. ஒரு புறம் பாகிஸ்தான் மறுபுறம் சீனா இருக்கிற படியால் இந்தியா தன்னுடைய மூல வளங்களை தென்னிந்தியாவிலுள்ள தமிழகம், கர்நாடக, கேரளா போன்ற மாநிலங்களில்தான் குவித்து வைத்திருக்கின்றது.

மூல வளங்களை தென்னிந்தியாவில் குவித்து வைத்திருப்பதால், அங்கிருந்து 32கிலோமீற்றர் தொலைவில் இருக்கின்ற இலங்கைக்கு சீனா செல்வது இதியாவின் தேசிய பாதுகாப்புக்குப் பிரச்சினையாக இருக்கின்றது. மறுபுறம் அமெரிக்கா பொருளாதார ரீதியாக முதலாவது இடத்தில் இருக்கின்றது. அது ஒரு போதும் தனது வல்லரசு நிலையிலிருந்து கீழிறங்குவதற்கு விரும்பாது. ஆகவே இலங்கையை கையாள்வதற்கான போட்டி இந்த மூன்று வல்லரசுகளுக்கிடையேயும் கடுமையாக இருக்கின்றது. இலங்கை ஒரு சிங்கள தேசம். இன விகிதாசாரப்படி 75 வீதமானோர் சிங்களவர்கள். ஆகவே இலங்கையின் பெரும்பான்மையினராகிய சிங்கள மக்களைக் கையாள்வதன் ஊடாக இலங்கை அரசைக் கையாளலாம். அதன் பின்னர் எழும் பிரச்சினை, சிங்கள தேசிய வாதத்தை எவ்வாறு கையாளலாம் என்பது. அதற்கு இருக்கக் கூடிய ஒரே பதில் தமிழரசு. பொருளாதார ரீதியான பின்னடைவுகள் ஏற்பட்டாலும், மேற்கு சார்ந்த நாடுகளும் இந்தியா சார்ந்த நாடுகளும் தலையில் குட்டினாலும், கனடா தெரிவிப்பது இலங்கைக்கு மாற்றுத் தெரிவுகள் உண்டு என்பதையே. அரசியல் ரீதியாக சர்வதேசமட்டத்தில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுத்தாலும் கூட வீட்டோ அந்தஸ்தைக் கொண்ட நாடுகளான ரஸ்யாவும், சீனாவும் அதைத் தடை செய்து கொண்டிருக்கும். முள்ளிவாய்க்காலில் அவ்வளவு அவலங்கள் நடந்து கொண்டிருக்க ஒரு சில நாடுகள் இலங்கைக்கு அழுத்தம்கொடுத்து, இந்தப் பிரச்சினைகளைப் பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்ல முயற்சிக்க ரஸ்யா, சீனா போன்றவை அதைத் தடுத்தன.

உள்ளக அரசியலைப் பயன்படுத்தி சிங்களத் தேசிய வாதத்திற்கு அழுத்தம் போடலாம் உள்ளக அரசியல் என்று பார்த்தால் தமிழ் அரசியல் மட்டும் தான் இந்தளவுக்கு ,ந்த வல்லரசுக்கு முக்கியமான பிரதேசம் இலங்கைத் தீவாக இருக்கவில்லை. ஆனால் இந்த இலங்கைத் தீவைக் கையாளக் கூடிய ஒரேயொரு கருவி தமிழரசியல் என்றால் எவ்வளவிற்கு இவர்கள் தமிழரசியலை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

இன்றைக்கும் கூட ராஜபக்ஷவிற்கு அழுத்தம் கொடுத்த எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துப்பார்த்தால் அவை அனைத்தும் தமிழ் அரசியல் சூழலால் தீர்மானிக்கப்பட்டவைதான். தமிழ் மக்களுக்கு நடந்த அநியாயங்களைத் தான் மையப்படுத்தி இருக்கிறது. அது ஜெனிவாவாகாக இருக்கலாம், பொதுநலவாயமாக இருக்கலாம், இலங்கையை மையப்படுத்தும் எந்த அரசியலும், தமிழ் அரசியலைத் தான் பாதிக்கும்.

இந்தியாவின் தேசிய வாதத்தை முன்வைத்து, இந்தியாவின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திநாங்கள்செயற்படவேண்டும்என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்பதை நாங்கள் பகிரங்கமாகச் சொல்கிறோம்.

அதற்காக எங்களுடைய பிரச்சினைகள் எல்லாவற்றையும் கைவிட்டு வெறுமனே இந்தியாவின் தேசிய பாதுகாப்புப் பிரச்சினை தொடர்பாக இழுபட்டுக் கொண்டு போவதற்கு நாங்கள் தயாரில்லை.அந்த நிலைப்பாட்டை நாங்கள் எங்களுக்கென்று எடுக்கலாம். எங்களுக்கென்றொரு நிகழ்ச்சி நிரலை வைக்கலாம் என்றால் நிச்சயமாக இந்தியாவின் ஊஎல் பற்றிப் பேசவேண்டி வரும். தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்று முடிவெடுக்கக் காரணம் தமிழ் மக்கள் தரப்பிலிருந்து இயக்கம் ஒவ்வொரு கட்டமும் பேரம் பேச முன்வந்தமையால் தான். தமிழ் மக்களது பிரச்சினையைப் பாவித்து இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது.

அன்று இயக்கத்தை அழிப்பதற்குப் பயங்கரவாதம் என்று சொல்லக் கூடியதாக இருந்தது. ஏனென்றால் ஆயுதப் போராட்டம் இருந்தது. இன்று ஒருவரும் ஆயுதப் போராட்டம் பற்றிப் பேசவில்லை. இன்று முற்று முழுதாக ஜனநாயகத்தைப் பற்றித் தான் கதைக்கின்றோம். இலங்கைத் தீவிலிருந்து நாங்கள் தமிழகத்தைப் பற்றி கதைக்க வில்லை. நாங்கள் கூட தமிழகத்தைப் பற்றிக் கதைக்கவில்லை. நாங்கள் சமஷடித் தீர்வையே ஏற்கத் தயாராக இருக்கின்றோம். இதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால் நீங்கள் நல்ல நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இதைக் கைவிட்டு நாங்கள் போகத் தயாரில்லை.


ஆனால் இன்று யார் சமஸ்டியைப் பற்றி கதைக்கிறார்கள். சமஸ்டியை கைவிட்டு 13ஆவதுதிருத்தம்பற்றித்தான்கதைக்கிறார்கள். எங்களுக்கு உரிமை இல்லையா? நீங்கள் தான் கூறினீர்கள் சமஸ்டியை ஏற்காததால் தான் அழித்தோம் என்று. ஆனால் இன்று நீங்கள் அதைப் பற்றி பேசாது இருக்கின்றீர்கள். எங்களைப் பொறுத்தவரை தமிழ் இனம் அழிக்கப்படுவதற்குக் காரணமே தமிழ்த் தலைமைகள் தான். தமிழ் தேசிய கூட்டமைப்பு வெறுமனே இந்தியாவின் ஒரு எடுபிடி சக்தியாகப் பாவிப்பதற்கு முடிவெடுத்து விட்டனர்.

பூகோள அரசியல் போட்டியை வைத்துக் கொண்டு அந்தப் போட்டியில் தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடிய முக்கியத்துவத்தை

(15 ஆம் பக்கம் பார்க்க)

- ஏ. எஸ்-

# கிழக்கு மாகாண முதலமைச்சும் தமிழ் தலைமைகளின் நிலைப்பாடும்



**எஸ். அரசரட்ணம்**
**ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி,**
**கல்முனை.**

கிழக்குமாகாண முதலமைச்சர் பதவி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கையாலாகாத் தனத்தினாலேயே முஸ்லிம் தலைமையிடம் கைமாறியுள்ளது, தமிழர் நலன்சார் விடயத்தில் மைத்திரியின் புதிய அரசாங்கம் சாதகமான சமிக்ஞையை காட்டும் என்ற நம்பிக்கையும் முதலமைச்சர் விவகாரத்தில் பயனற்றுப் போயுள்ளது.

கிழக்குமாகாணத்தில்தமிழர்களின் எண்ணிக்கை உயர்வாக உள்ளதுடன் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தலைமைகளும் மாகாணசபையில் அதிகம். ஆனபோதும் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வருவதற்கு தமிழ் தலைமைகள் கோட்டைவிட்டுள்ளது. என்றேகாணமுடியும். இது தமிழ் மக்களின் நலன்கள் விடயத்தில் அக்கறை காட்டாத செயற்பாடாகவே இது அமைந்துள்ளது .

முஸ்லிம் தலைமைகளைப் பொறுத்த வரை முஸ்லிம் மக்களின் வாழ்வாதாரம், அபிவிருத்தி என்பவற்றை இலக்காகக் கொண்டு செயலாற்றுகின்றன. முஸ்லிம் தலைமைகள் மத்திய அரசில் முக்கிய அமைச்சுக்களை பெற்றிருந்தும். கிழக்குமாகாண முதலமைச்சர் பதவியை தமிழ் தலைமையிடம் கையளிக்காத தன்மையானது தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையேயான ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாடாகவே உள்ளது.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணதமிழ் இளைஞர்கள் அரச வேலை வாய்ப்பில் இணைத்துக்கொள்வது தட்டிக்களிக்கப்பட்டே வந்துள்ளன. தற்போதும் இதற்கான சாத்தியப்பாடுகளே அதிகமாகவுள்ளது. இத்தகைய நிலையில் தமிழ் தலைமைகள் மக்கள் நலன்சார் விடயத்தைக் கருதி தீர்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவையாகவுள்ளது.

**எம். பௌசர்**
**அக்கரைப்பற்று (தற்போது லண்டன்)**
**ஊடகவியலாளர்**
**நன்றி : வீரகேசரி**

தமிழ் மக்கள் நடத்திய போராட்டம் வழியாகவே இந்த மாகாகணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. இந்தப் போராட்டத்தின் காரணமாக கிழக்கு தமிழ் மக்கள் பெரும் இழப்பினை சந்தித்து வந்திருக்கின்றனர். அவற்றினை நிவர்த்திப்பதற்கான அரசியல் வாய்ப்பு கிழக்கு தமிழ் மக்களுக்கு வழுங்கப்படல் வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதும் முஸ்லிம் தரப்பின் பொறுப்பாகும்.

அரசியல் வாய்ப்பிலிருந்தும் மத்திய அரசில் அமைச்சர்களாக வருவதனை கொள்கை அடிப்படையில் ஏற்காதவர்கள் அவர்கள் என்பதனை முஸ்லீம்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். முஸ்லிம் மக்கள் மத்திய அரசில் அங்கம் வகிப்பதன் ஊடாக அரசியல் பலத்தினையும் அபிவிருத்தி வாய்ப்புக்களையும் கொண்டிருக்கின்றனர். குறைந்த பட்சம் மாகாண மட்டத்தில் அவர்களுக்கு இந்த வாய்ப்பு வழுங்கப்படுவது அவசியமானதாகும்.

முஸ்லிம் அரசியல் தலைமைகளும் மக்களும் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடுகளுக்கு கோரிக்கைகளுக்கு ஆதரவு அளிக்காது இருக்கலாமே ஒழிய ஒருபோதும் தடையாக இருந்து விடக் கூடாது.

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் ஒரு புவியியல் பிராந்தியத்தில் தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து வாழ வேண்டியவர்கள் என்பதை கவனத்திற் கொள்தல்வேண்டும். சிங்களமைய அரசியல் தலையீடுகளும், தென்னிலங்கை முஸ்லிம் தலைமை சிந்தனையும் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களை பிரித்தாழவே முயலும் என்பதை கவனத்தில் இருத்துதல் முக்கியம்.

தமிழ் அரசியல் தலைமைகள் தமது அதிகார இருப்பினை தமது அதிகார இருப்பினை தக்க வைப்பதற்காக செய்கின்ற தவறுகளை சாதாரண தமிழ் மக்களுடன் தொடர்புபடுத்தி பார்க்க முயலக் கூடாது. தமிழ் மக்களுடன் உரையாடுவதற்கான புதிய பொறிமுறையை பற்றி சிந்திக்க வேண்டும்.

**யதீந்திரா**
**ஊடகவியலாளர்**
**நன்றி : தினக்குரல்**

கிழக்குமாகாண சபை விவகாரம் தொடர்ந்தும் ஒரு சிக்கலான விவகாரமாகவே இருக்கிறது.

ஒருபுறம் முஸ்லிம்கள் தங்களின் தனித்துவத்தை பேணிக்கொள்ளும் வகையிலான அரசியலை முன்னெடுக்கும் போது இன்னொருபுறம் அரச அதிகாரத்துடன் சிங்கள மக்கள் இருக்கின்ற போது, தமிழ் மக்கள் தங்களின் தனித்துவத்தை பேணிக்கொண்டு வாழ்வதற்கான ஏற்பாடு என்ன? இப்படியொரு தமிழர் இருப்பிற்கான ஏற்பாடு முஸ்லிம்களுடன் இணைந்து ஆட்சியமைப்பதன் ஊடாகச் சாத்தியப்படுமா? அல்லது சிங்களவர்களுடன் இணைந்திருப்பதன் மூலம் சாத்தியப்படுமா? இவை இரண்டும் இல்லாவிட்டால் கிழக்கில் தமிழர்களுக்கென தனியானதொரு மாகாணசபையை நோக்கிச் சிந்திப்பது சிறந்ததா? வடக்கு- கிழக்கு இணைப்பு சாத்தியப்படின் இவ்வாறான கேள்விகளுக்கு தேவையிருக்காது.

ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் நீண்டகாலத்தில் கிழக்கு தங்களின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுமென்றே உறுதியாக நம்புகின்றனர்.

கிழக்குத் தமிழ் மக்களின் எதிர் காலம் தொடர்பில் கிழக்கு தமிழர்களே சிந்திக்க வேண்டும். கிழக்குதமிழ் மக்களின் நலன்களை எவ்வாறு வெற்றி கொள்வது என்றுமட்டுமே தமிழர் தரப்பு சிந்திக்க வேண்டும்.

**எஸ்.ஏ.எம். உபைதுல்லா**
**முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினர்,**
**சட்டத்தரணி**

கிழக்கு மாகாணத்தில் நிலவும் அரசியலுக்கு அப்பால் புரிந்துணர்வு அடிப்படையிலும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை வலுவடையச் செய்யும் நோக்கிலும் முதலமைச்சர் பதவியை தமிழ் தலைமைக்கு வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

முதலமைச்சர் நியமனம் தொடர்பில் ஒட்டுமொத்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சிந்தனையாக உள்ளதுடன் அது முஸ்லிம் மக்களின் விருப்பாக அமையவில்லை என்பதே உண்மை. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மக்களின் எதிர்பார்ப்புக்களை சிந்திக்காமலும் முதலமைச்சர் நியமனத்தை எடுத்துள்ளது.

தற்போது மத்தியில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்கள் தொடர்பில் நல்லெண்ணைத்தை கட்டியெழுப்பும் நோக்கில் முதலமைச்சு பதவியை தமிழ் தலைமைக்கு வழங்க வேண்டிய தேவைப்பாடும் எழுந்திருந்தது.

ஆனால் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் பொதுத் தேர்தல், மற்றும் தலைமைத்துவத்திற்கு இடையேயான பிரச்சினை என்பவற்றால் முதலமைச்சு பதவியை பெற்றுக்கொண்டுள்ளது.

இத்தகைய நிலையில் மூவின மக்கள் மத்தியில் ஒன்றுமையும், காலத்தின் தேவை கருதியும் கிழக்கு மாகாண அரசியல் தலைமைகள் அடுத்த கட்டநகர்த்தலைசிந்தித்தும் திட்டமிட்டும் செயலாற்ற வேண்டிய தேவையுள்ளது.

**கலாநிதி. கோ.அமிர்தலிங்கம்**
**சிரேஸ்டவிரிவுரையார்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**


கிழக்குமாகாணத்தில் குறுகிய கால ஆட்சியைப்பெறுவதில் காட்டும் போட்டியை விடுத்து நீண்டகாலத்திற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வடக்குகிழக்கு இணைப்புப் பற்றியும் நிலம் மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்ட பரந்து பட்டஅதிகாரங்களை பெறுவது பற்றியும் சிந்திப்பதே காலத்தின் தேவையாகவுள்ளது. வடக்குகிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைவதன் ஊடாகவே தமிழ் மக்கள் தமது இருப்பை உறுதிப் படுத்தி உரிமைகளை பெறமுடியும்.

முஸ்லிம் அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரைமுதலமைச்சர் பதவியைதக்கவைப்பதேசரியானமுறையாகபார்க்கின்றனர். இதற்குசார்பாக முஸ்லிம் மக்களில் ஒருபகுதியினர் ஆதரவுவழங்கினாலும்பல முஸ்லிம் புத்திஜீவிகள்தமிழ் மக்களுடனான சகவாழ்வினைஉறுதிப்படுத்திசிறுபான்மை மக்களின் பிரச்சினைக்குஉரியதீர்வைப்பெறுவதனையேவிரும்புகின்றனர்.

இந்த சூழலில் இணைந்த வடகிழக்கில் தமிழ் மக்களின் உரிமைகள் மட்டுமன்றி முஸ்லிம் மக்களின் அபிலாசைகளையும்திருப்திப்படுத்துவது தொடர்பில் தமிழ் முஸ்லிம் தலைவர்கள் கவனம் செலுத்துவதுசிறந்ததாகும். இதனூடாகவே ஒட்டுமொத்த சிறுபான்மை மக்களின் இருப்பும் உறுதிப்படுத்தப்படும். அதை விடுத்து வெளிச்சக்திகளின் வழிநடத்திலின் கீழ் வடக்குமற்றும் கிழக்குமாகாணங்களுக்கு தமிழ் முதலமைச்சர்களை மட்டும் பெற்றுக்கொண்டால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என நினைப்பது தவறானதாகும். ஆளுனர்களுக்கான அதிகாரங்கள் குவிந்திருக்கும் நிலையில் அறுதிப்பெரும்பான்மையினைக் கொண்டுள்ள வடமாகாண சபை சாதிக்கமுடியாதளதனைகிழக்குமாகாணதமிழ் முதலமைச்சர் சாதிக்கப் போகின்றார்?

**சமூக ஆய்வாளர்களின் கருத்து**

# சிறீரங்கம் இடைத்தேர்தல்! ஜெயலலிதாவைப் பலப்படுத்துமா? பலவீனப்படுத்துமா?



தமிழ் நாட்டில் சிறீரங்கம் சட்ட மன்றத் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கி யுள்ளது, பெப்ரவரி 13ம் திகதி தேர்தல் நடை பெற்று, 16ம் திகதி தேர்தல் முடிவுகள் வெளி வருகின்றன. இந்தப் பத்திரிகை வெளி வந்து அடுத்த நாள் தேர்தல் முடிவுகளும் தெரிந்துவிடும். தேர்தலில் அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் வெற்றியடையும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே! எவ் வளவு பெரும்பான்மையால் வெல்வார் என் பதுதான் இப்போது எல்லோரதும் எதிர்பார்ப்பு. ஜெயலலிதாவின் தொகுதி என்பதால் தான் கவனம் அதிகமாக உள்ளது. சொத்துக் குவிப்பு வழக்குத் தீர்ப்பின்படி ஜெயலலிதா முதலமைச்சர் பதவியையும், சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் இழந்தமை யினால் தான் இடைத்தேர்தல் இடம்பெறு கின்றது. அ.தி.மு.க வேட்பாளராக இளவரசி போட்டியிடுகின்றார்.

சென்ற தேர்தலில் 41,848 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க வேட் பாளரை, ஜெயலலிதா தோற்கடித்திருந்தார். இந்தத் தடவை ஜெயலலிதா தனது செல்வாக்கினை நிலைநிறுத்த முன்னரை விட கூடுதலான வாக்கு வித்தியாசத்தில் வெல்லவேண்டும் என எதிர்பார்க்கின்றார். பணத்தை அள்ளி வீசும் அழகிரியின் திருமங்கலம் சூத்திரம் இங்கு பின்னபற்றப் படுவதாக தகவல்கள் வருகின்றன. ஜெயலலிதா ஒரு வாக்கிற்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கியிருந்தார் என்றும் செய்திகள் உள்ளன.

தி.மு.க வும் ஜெயலலிதாவிற்கு சளைத்ததாக இல்லை. 20 குடும்பத்திற்கு ஒரு பொறுப் பாளர் என நியமிக்கப்பட்டு பிரச்சாரம் நடை பெறுகின்றது. பணமும் பல்வேறு கட்டங் களாக வழங்கப்படுவதாக தகவல் சென்ற முறை பெற்ற வாக்குகளை விட கொஞ்சம் கூடுதலாக பெற்றாலும் தி.மு.க விற்கு வெற்றி தான். சிறிரங்கம் தொகுதியில் அதிகமாக வுள்ள முத்தரையர் சாதியைசேர்ந்த ஆனந் தன் என்பவரை வேட்பாளராக நிறுத்தி யுள்ளது

இத் தேர்தலில் அ.தி.மு.க, தி.மு.க, பா.ஜ.கா, மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்பனவே முக்கியமான கட்சிகளாக போட்டியிடுகின்றன. ம.தி.மு.க, தே.மு.தி. க, பா.ம.க, விடுதலை சிறுத்தைகள், காங்கிரஸ் என்பன போட்டியிடவில்லை. இக் கட்சிகளின் வாக்குகள் யாருக்கு விழுமென உறுதியாகக் கூற முடியாது. பாரதீய ஜனதாக் கட்சி இத் தொகுதியில் உள்ள பிராமண வாக்குகளையே அதிகம் எதிர் பார்க்கின்றது. ஆனால் இத் தொகுதி பிராமணர்கள் மாநி லத் தேர்தலில் அ.தி.மு.க வையும், மத்திய தேர்தலில் பா.ஜ.க ஆதரிக்க முற்படுகின்ற னர். முன்னைய கூட்டணி கட்சிகளும் ஒத்துழைக்காததினால் பெரியளவில் வாக்குள் விழுமென எதிர்பார்க்க முடியாது. எனவே இங்கு போட்டி தி.மு.க விற்கும் அ.தி.மு.க விற்கும் தான்.

பாராளுமன்றத் தேர்தலில் சிறிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்த பா.ஜ.க ஜெயலலிதா வழக்குத் தீர்ப்பின் பின்னர் அ.தி.மு.கவின் இடத்தினை தான் எடுக்கலாம் என முயன்றது. மாநில ஆட்சியை கைப்பற்றும் கனவும் இருந்தது. ரஜனி காந்தினை வளைத்துப் போடவும் நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன. எனினும் சிறிய வெற்றி கூட கிடைக்கவில்லை. இந்நிலை யில் தற்போது ஜெயலலிதாவுடன் உறவைப் பேண விரும்புகின்றது. ராஜ்ய சபாவில் பெரும்பான்மை இல்லாததினாலும் ஜெயலலி தாவிடம் ஆதரவு கேட்கப்பட வேண்டிய நிலை. முன்னர் என்றால் ஜெயலலிதா இறு மாப்புடன் நின்றிருப்பார். வழக்குத் தீர்ப்பு அவரையும் அடித்து வீழ்த்தி விட்டது. தற்போது அவரது கவனமெல்லாம் வழக் கிலிருந்து தப்புவதே. இதனால் பாரதீய ஜனதாவின் நேசக்கரத்தை ஏற்றுக் கொண் டுள்ளார் போலவே தெரிகின்றது. அருண் ஜெட்லி -ஜெயலலிதா சந்திப்பு இதனை மறைமுகமாக உறுதிப்படுத்தி இருக்கின்றது. பாரதிய ஜனதாக் கட்சி அரசு வழக்கில் ஜெயலலிதாவை இறுக்கியதன் நோக்கம் ஜெயலலிதாவைத் தண்டிப்பதற்கல்ல. மா- றாக பணியவைப்பதே! வழக்குத் தீர்ப்பின் முன்னர் மோடியால் கையாள முடியாத ஒருவராகவே ஜெயலலிதா விளங்கினார். மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி யும் இவரைப் போன்று ஒருவராக இருந்தாலும் ஜெயலலிதாவின் அளவிற்கு வலிமை பொருந்தியவராக இருக்கவில்லை. இந்நிலை மோடிக்கு உள்நாட்டு விவகாரத் தில் மட்டுமல்ல வெளிநாட்டு விவகாரத்திலும் பலத்த நெருக்கடியை கொடுத்திருந்தது.

ஒரு பக்கத்தில் பணிவது போன்று காட்டினாலும் மறுபக்கத்தில் அவ்வப்போது இறுமாப்பை காட்டவும் ஜெயலலிதா தயங்க வில்லை. ஈழத்த தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான கூட்டம் புதுடெல்லியில் நடைபெற்றது. அ.தி.மு.க அதனை புறக் கணித்தது. அதுவுமல்லாமல் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் வரை அனுப்பப் போவதில்லையெனவும்கூறியுள்ளது. தொழில் நுட்ப கல்லூரிகளில் ஈழத் தமிழ் அகதி மாணவர்களுக்கு 5 வீத ஒதுக்கீட்டையும் அறிவித்துள்ளது.

சிறீரங்கத் தேர்தலில் அ.தி. மு.க வேட்பாளர் முன்னரை விட அதிக வாக்குகளை பெறுவாராயின் ஜெயலலி தாவை அது மேலும் பலப்படுத்தும். வழக்கு விடயத்திலும் அது அவருக்கு கைகொடுக்கும். அரசியல் வலிமைக்கு முன்னால் சட்ட வலிமை நிற்பது சற்றுக் கடினம்தான் ●

13 ஆம் பக்க தொடர்ச்சி

**இந்தியாவின்..........**


விளங்கிக் கொண்டு நாங்கள் முன்னேறி போகலாம் என்பதைத் தெரிந்து கொண்டு செயற்படப்போகின்றோமோ அல்லது இல்லை நான் இந்தியாவினுடைய அடிப்படை விசுவாசி. இந்தியா விரும்பிறதை மட்டும் தான் நான் செய்யத் தயார், இந்தியாவை தாண்டி நான் எதையும் செய்ய தயாரில்லை என்று தமிழ் மக்களை அதற்குப் பின்னால் இழுத்துக் கொண்டு போகப் போறீங்களோ? அந்தத் தேவைக்கு நீங்கள் பதில் கொடுக்க வேண்டும். அது தான் முடிவெடுக்கப்ப போகிறது. நாங்கள் எதையும் சாதிக்கப் போகின்றோமோ அல்லது வெறுமனவே எடுபிடிகளாக இருக்கப் போகின்றோமோ? எங்களுக்கு வாய்ப்புக்களுண்டு. பூகோள அரசியல் போட்டியில் எங்களுக்கு ,ருக்கிற முக்கியத்துவம் விளங்குகின்றது. நாங்கள் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முன்செல்ல வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு இப்படியே இருக்கின்ற வரைக்கும் நாம் கூட்டமைப்பிடமிருந்து எதையும் சாதிக்க முடியாது. அது தான் உண்மை.

நாம் மாற்றுத் தலைமையொன்றை உருவாக்கி, கூட்டமைப்பின் ,ருப்புசார்ந்த பிரச்சினையை உருவாக்குகிற கட்டத்தில் கூட்டமைப்பு வழிக்கு வரும். ,ந்த சம்பந்தன் ஐயா தானே 2001ஆம் அண்டு ஜனாதிபதி சந்திரிக்காவால் பாதுகாப்பு வழங்கப்பட்டவர். குண்டுதுளைக்காத வாகனங்களில் அரச செல்வாக்கோடு வலம் வந்தவர்.

கிட்டதிட்ட எத்தனையோ முக்கியமான டங்களில் தமிழரின் போராட்டத் தைக் காட்டிக் கொடுக்கின்ற வகையில் செயற்பட்ட, ,யக்கத்தின் 'ஒரு பட்டியலில்' கூட சம்பந்தன் ஐயா இருந்தவர். இதனை அவர் பகிரங்கமாக சொல்லியும் இருக்கிறார். இயக்கம் இராணுவ ரீதியாக பலமான ஒரு இடத்தை நிரூபிக்கின்ற பொழுது, அக்கினிச் சுவாலை முறியடிக்கப்படுகிற ஒரு கட்டத்தில் இயக்கத்தை அழிப்பதற்கான முழு உதவி களையும் இலங்கைக்கு சகல நாடுகளுமே வழங்கின. ஏனென்றால் இலங்கை இராணு வத்தரப்பு மோசமான பின்னடைவை சந்தித் திருந்தது. ஆகவே இந்த இராணுவ பின்னடை வுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். நிறுத்துவதற்குப் புலிகளை சம்மதிக்க வேண்டும். பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவந்து புலிகள் ஏற்றுக்கொள்ள கூடிய ஒரு கவர்ச்சியான விடயத்தை வழங்கு வதாகக் காட்ட வேண்டும். புலிகள் வென்ற நிலப்பரப்புக்கு ஏதோ ஒருவகையில் அங்கீகாரம் வழங்குகின்றோம் என்ற ஒரு மாயையைக் காட்டித்தான் இயக் கத்தை பேச்சுவார்த்தைக்கு கொண்டு வந்தார்கள். பேச்சுமேசையில் வைத்து இயக்கத்துக்கு குழிபறித்ததில் சம்பந்தன் தலைமையிலானவர்கள் பங்கெடுத்தார்கள். ●

## வாசகர் கருத்து



### நாளிதழாக மாறுவதற்கு எனது வாழ்த்துக்கள்


இது நம்தேசம் பத்திரிகைக்கும் அதன் குடும்பத்தினருக்கும் எனது வணக்கங்கள்!

கடந்த காலங்களிலிருந்து தங்கள் பத்திரிகை வெளிவந்து கொண்டு இருக்கின்றது. அன்றிலிருந்து நான் தீவிர வாசகனாக இருந்து வருகின்றேன். முன்பு வந்த பத்திரிகைக்கும் தற்போது வருகின்ற பத்திரிகைக்கும் நிறைய வித்தியாசம் காணப்படுகின்றமை சந்தோசமளிக்கின்றது. கடந்த கால பத்திரிகைகளில் வெளிவந்த அரசியல் கட்டுரைகள் வரவேற்கதக்கவையே. ஆனாலும் தற்போது வருகின்ற விடயங்கள் வித்தியாசமாக காணப்படுவது சகல மக்கள் மத்தியிலும் சென்றடையக் கூடிய- தாக இருக்கின்றது. இதனை இன்னும் விரிவுபடுத்தி சிறப்பானதாக கொண்டுவருவதற்கு என் சார்பிலும் தமிழ் மக்கள் சார்பிலும் வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும் என்றும் இருக்கும்.

நன்றி
க.தர்மிளா
கிளிநொச்சி

- பேராசிரியர். கா.சிவத்தம்பி-

# மலையகத்தில் அடிநிலைத் தொழில்முறை மாற்றப்படவில்லை



பெருந்தோட்டப்பகுதிகளிலே, குறிப்பாக இலங்கையின் மலைநாட்டு பிரதேசங்களிலே, தேயிலை தோட்டங்களிலே பணிபுரியும் இந்திய வம்சாவளித்தமிழரின் வரலாறு பல முக்கியத்துவங்களைக் கொண்டது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தென்னாபிரிக்கா, தென்னாசியா, தென்கிழக்காசிய பிரதேசங்களைச் சேர்ந்த நாடுகளில் தனது காலனித்துவ ஆட்சியை தொடர்ந்து பேணுவதென்ற தீர்மானத்தை எடுத்த பின்னர், அவ்வவ்நாடுகளின் பொருளாதார வளங்களை தமது சுபீட்சத்துக்கு பயன்படுத்தும் முறையினை தொடங்கிற்று. பிரிட்டனில் பெருகிவரும் தேசிய கைத்தொழில் தேவைகளைப்பூர்த்தி செய்யும் வகையில் தமது ஆட்சியின் கீழ்வந்த இந்த நாடுகளைப் பயன்படுத்தினர். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி தமது கைத்தொழில் வளர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயன்றனர். இதன் காரணமாக இலங்கையில் முதலில் றப்பர் தோட்டங்களும் பின்னர் கோப்பி, தேயிலை தோட்டங்களும் நிறுவப்பட்டு அவற்றின் பரிபாலனம் இங்கிலாந்து கம்பனிகளாலும், அவர்களால் நியமிக்கப்பட்டவர்களாலும் நடத்தப்பெற்று வந்தது.

இந்த வணிக, விவசாய முறையானது இந்நாடுகளின் வரலாற்று அனுபவங்களினூடாக வந்ததென்று கூறிவிட முடியாது. இதனால் இத்தோட்டங்களுக்கான உழைப்பாளிகளைப் பொறுத்தவகையில் அதற்காக ஆள்வலுவை உள்ளூரிலேயே பெறுவது சிரமமாயிற்று. இதனால் அவர்கள் தென்னிந்தியாவிலிருந்து குறிப்பாக அக்காலத்தில் சென்னை இராசதானி என்ற பிரதேசத்துக்குள்ளிருந்த கூலியாட்களைப் பெற்றுக் கொண்டனர்.


ஆங்கில ஆட்சியின் வருகையுடன் தென்னிந்தியாவின் விவசாய முறைமையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக சேலம், கோயம்புத்தூர், திருச்சி போன்ற மாவட்டங்களிலே வாழ்ந்து வந்த அடிநிலை மக்கள் பெரிதும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தனர். பஞ்சம் தோன்றுமளவிற்கு சிலவிடங்களில் நிலைமை மோசமாகவிருந்தது. தமிழ் பிரதேசங்களிலிருந்தும் தெலுங்குப் பிரதேசங்களிலிருந்தும் கூலியாட்கள் பெரும் தொகையினராக கொண்டுவரப்பட்டனர். தென்னிந்திய நிலையில் தொழிலாளர்களை ஒன்று சேர்த்து இலங்கைக்கு அனுப்பும் மையமாக திருச்சியில் ஒரு பகுதி விளங்கிற்று. (திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு அருகேயுள்ள பிரதேசம் இதற்காகப் பயன்படுத்தப்பட்டது. இதன் எச்ச சொச்சங்கள் இன்னுமுள்ளன கடல் மார்க்கமாகத் தலை மன்னாருக்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து கால் நடையாகவே இவர்கள் தோட்டப்பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தொழிலாளர்களின் நேரடிக்கண்காணிப்பிற்கும் அவர்களை நிர்வகிப்பதற்குமென இந்தியத் தமிழர்கள் சிலரை கங்காணியாகத் தெரிந்தெடுத்துக் கொண்டனர். அவர்களையுங்கூட சாதிக்குழும அடிப்படையிலே பார்க்கலாம். இதற்கு நல்ல உதாரணம் இலங்கையில் இன்று அரசியல் முக்கியத்துவம் பெற்றுள்ள தொண்டமான் குடும்பத்தினர் ஆவர். தொண்டமான் என அழைக்கப்படும் பெரும் சாதிக் குழுமம் இன்றுவரை தமிழகம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளது. தமிழகத்தின் கலா ரசிகர்களில் ஒருவராகப் போற்றப்பட்ட தொ.மு.பாஸ்கரத் தொண்டமான் இந்தக் குலத்தவரே. நவீன தமிழிலக்கிய உலகில் மிகப்பெரும் புகழீட்டிய தொ.மு.ரவிரகுநாதன் தொண்டைமானின் தம்பியாவார்.

> **"தொண்டமான் குடும்பத்தினர் முக்குலத்தோருள் ஒரு குழுவான கள்ளர் குலத்தை சார்ந்தவர்கள். பழந் தமிழிலக்கியங்களிலே பேசப்படும் ஆரலைக்கள்வர் என்போரின் வழித்தோன்றல்களாக இவர்கள் இருக்கலாம் என்று கூறுவர். ஆனால் கால வோட்டத்தில் இவர்களில் பலர் நிலச்சொந்தக் காரர்களாக மாறினர்."**

தொண்டமான் குடும்பத்தினர் முக்குலத்தோருள் ஒரு குழுவான கள்ளர் குலத்தைசார்ந்தவர்கள், பழந்தமிழிலக்கியங்களிலே பேசப்படும் ஆரலைக்கள்வர் என்போரின் வழித்தோன்றல்களாக இவர்கள் இருக்கலாம் என்று கூறுவர். ஆனால் காலவோட்டத்தில் இவர்களில் பலர் நிலச்சொந்தக் காரர்களாக மாறினர். பிரித்தானியராட்சியில் தென்னிந்தியாவில் 19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக இப்பிரதேசங்களில் கடும் வரட்சியேற்பட்டது. பஞ்சமும் வந்தது. பிரித்தானியர் தமது வணிக விவசாய பயிர்ச்செய்கைக்காக இந்தப்பிரதேச மக்களைப் பயன்படுத்தினர்.

கங்காணி முறைமை மூலம் இத்தொழிலாளர்கள் கட்டுப்படுத்தப்பட்டனர். கண்காணிப்பு என்ற சொற்களின் அடியாகவே கங்காணி என்ற சொல் வந்திருக்க வேண்டும். இந்த முறைமை தொடங்கப்பெற்ற 19 ஆம் நூற்றாண்டின் நடுக்கூறு, பிற்கூறுகளில் கங்காணிகளாக இருந்தோர் பெரும்பாலும் முக்குலத்தைச் சார்ந்தவர்கள் என்று கொள்ளும் மரபுண்டு. இத்தொழிலாளர்கள் வருடாவருடம் அவர்களிற் சிலர் இடைக்கிடை தமது ஊர்களுக்குச் சென்று திரும்பும் வழக்கமுமிருந்தது என்பது தெரிகிறது. ஆனால் படிப்படியாக இத்தொழிலாளர்கள் இலங்கையின் பெருந்தோட்டங்களிலேயே தொடர்ந்து வாழ்வதற்கான 'நிரந்தர வசதிகள்' ஏற்படுத்தப்படத் தொடங்கின. அவர்களுடைய வீடுகள் ஒரே Line இல் கட்டப்பெற்ற ஒரு வீட்டுத் தொகுதியின் ஒவ்வோர் அலகுகளாகவிருந்தன. பெரும்பாலும் ஒரே இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள் லயன்களில் குடியேற்றப்பட்டாலும் அவர்களிடையே வேறுபாடுகள் காணப்பட்டன.



தேயிலைத் தோட்ட வாழ்க்கை முறையின் பிரதான அம்சம் பெண்கள் தேயிலைக் கொழுந்து பறிக்கின்ற வேலையில் ஈடுபடுத்தப்பட்டமையாகும். ஆண்கள் பெரும்பாலும் தோட்ட பிரதேச மரங்களை வெட்டுதல், தோட்டப் பகுதிகளை செம்மை செய்தல் போன்ற வேலைகளி-லேயே ஈடுபடுவர். கங்காணி இவர்களின் மேற்பார்வையாளராகக் கடமையாற்றுவார். இவர்கள் கவனம் குறையாது கொழுந்து பறிக்கின்றார்களா என்பதை மிகுந்த கண்டிப்புடனேயே கங்காணிமார் பார்த்தனர்.

தோட்ட நிர்வாகம் இரண்டு நிலைப்பட்டது. ஒரு நிலை Superintendent என்பராவார். அவருக்கு உதவியாக உதவி Superitendent மார் இருந்தனர். Superintenednt பெரிய துரை என்றும் Assistant Superintendent ரை சின்ன துரை என்றும் தொழிலாளர்கள் அழைத்தனர்.

பறிக்கப்பட்ட கொழுந்துகளை தேயிலைத் தொழிற்சாலைக்கு கொண்டு சென்று கொடுப்பர். அவ்விடத்தில் தொழிற்சாலை பொறுப்பாளரும் அவரது உதவியாளர்களுமே கொழுந்தை நிறுப்பர், இவர்களும் பெரும்பாலும் இந்திய தமிழர்களாக விருந்தாலும் வர்க்க (Class) அடிப்படையிலான ஒரு மேலாதிக்க நோக்கு இவர்களிடத்தேயுண்டு. கொழுந்தை குறைய அளந்து விடுவார்களோ என்ற பயமும் தொழிலார்களுக்குண்டு.

தேயிலை பெருந்தோட்ட முறையில் தொழிலாளியென்றவகையில், பெண் முக்கியமானவள் என்றாலும், சமுதாய பராம்பரியத்தைப் பொறுத்தவரையில் அதாவது, பிதாவழி அதிகார முறைமையில் ஆண்கள் முதலிடம் வகிக்கும் நிலைமையேயுண்டு. இதனால் தொழிலாளியாக சுரண்டலுக்கு ஆட்படுத்தப்பெற்ற பெண், வீட்டுப் பெண்ணாகவும் ஒடுக்கப்படுகிறாள். குடும்பப் பெண் என்ற அலகே லயத்து வீடுகள் காரணமாக பகிரங்கப்பட்ட வாழ்க்கையாகி விடுகிறது. இந்த தொழிலாளிகளின் வாழ்க்கையிலுள்ள பிரதான அம்சம் யாதெனில் இவர்கள் ஏறத்தாழ மேலே கூறிய உழைப் பிரிவின் (Division of Labour) அடிப்படையிலேயே தொடர்ந்து வைத்திருக்கப்படுகின்றமையாகும்.

தொடரும்...

# தாய்மை மகத்துவமானது

- டாக்டர் எம்.கே.முருகானந்தன்-



## தாயாகப் போகும் உங்களுக்கு – 1

**ஒரு மொட்டு மலர்ந்து மலராக இதழ்விரிப்பது போல, ஒரு கைக்குழந்தை பெரிய மனிதனாக வளர்ச்சியடைவது போல ஒரு சிறுமி புஸ்பவதியாக மாறுவது போலவே, ஒரு பெண் கற்பவதியாகி குழந்தையைப் பெற்றெடுப்பதும் ஒரு சாதாரண உடற்தொழிலியல் நிகழ்ச்சிதான்!**

ஓ! நீங்கள் ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறீர்கள்.

தாய்மை எய்வது எத்துனை மகத்தானது! மகிழ்ச்சியானது!! வாழ்க்கையில் நீண்ட பயணத்தில் ஒரு முக்கிய மைல் கல்லைத் தாண்டுவது போன்றது!!!

“மலடி மலடி என்று வையகத்தார் ஏசாமல் தாய் என்ற பெருமையை, வாழ்க்கையின் பூரணத்துவத்தை, எய்துவதற்காக எத்தனையோ பேர், குறையாத ஆர்வத்துடனும், தளராத தன்னம்பிக்கையுடனும், கைராசிக்கார வைத்தியர்களின் கடாட்சத்தை வேண்டி வைத்தியசாலைகளில் தவம் கிடந்து கொண்டும்: இன்னும் பலர் ஆண்டவனின் கருணையை நாடிஆலமரங்களைவலம்வந்துகொண்டும்: இன்னும் சிலர் 'பிள்ளை வரங்கொடுக்கும்' தாடிக்கார ஆசாமிகளான ஆசாமிகளை' சுற்றிக்கொண்டும், ஏக்கத்துடன் அலைந்து கொண்டிருக்கையில், தாய் என்ற அந்தப் பெருமையை அடைய இருக்கும் நீங்கள் எத்துணை பாக்கியசாலி!

தாய்மையை நோக்கிய இந்தப் பத்துமாதப் பயணம், உங்களுக்குப் பல இனிமையான, பரவசமான, பல எதிர்ப்புக்கள் நிறைந்த அரிய அனுபவத்தைக் கொடுக்கும். அதுவும் முதற் கற்பமாக இருந்தால் சொல்லவே வேண்டாம்.

எனினும் பல பெண்கள் தமது வயிற்றில் ஒரு குழந்தை வளர்கிறது என்பதை உணர்ந்தவுடன், சந்தோஷமான உணர்வுகளை ஆரம்பத்தில் பெற்றாலும், இடையிடையே பலவித சந்தேகங்களுக்கு, ஒரு வித பய உணர்ச்சிக்கும் ஆளாவது உண்டு.

பத்து மாதங்களுக்கு எப்படிக் கர்ப்பத்தைச் சுமக்கப்போகிறேன் எனப் பயந்தும், பிரசவ வேதனையைச் சகித்துக் கொண்டும், எப்படி அதை வளர்த்து ஆளாக்கப் போகிறேன் எனக்கலங்கியும், நம்பிக் கையைத் தளர விட்டு மிரண்டு விடுபவர்களும் உண்டு.

ஆனாலும் கற்பமுறுவது என்பது ஒரு நோயல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வீர்களேயானால், இந்தப் பயமும், சந்தேகமும் உதயகாலத்துப்பனிபோல் ஓசையின்றி மறைந்துவிடும்.

ஒரு மொட்டு மலர்ந்து மலராக இதழ்விரிப்பது போல, ஒரு கைக்குழந்தை பெரிய மனிதனாக வளர்ச்சியடைவது போல ஒரு சிறுமி புஸ்பவதியாக மாறுவது போலவே, ஒரு பெண் கற்பவதியாகி குழந்தையைப் பெற்றெடுப்பதும் ஒரு சாதாரண உடற்தொழிலியல் நிகழ்ச்சிதான்! எனவே பயப்பட எதுவுமில்லை.

அது மாத்திரமல்ல, உங்களது இந்தப் புதிய அனுபவத்தில் நீங்கள் மட்டும் தனியாக விடப்படவில்லை. உங்களது இந்தப் புதிய, இனிய அனுபவத்தில் பங்கு பெற உங்களோடு சேர்ந்து இந்த உணர்ச்சிகளைப் பங்கு போட உங்கள் அன்புக்கணவரும், ஏன் உங்களது முழுக்கடும்பத்தினருமே ஆவலுடன் காத்திருக்கிறார்கள். இந்த உண்மை நிலை, உங்களுக்கு வேண்டிய மனோ தைரியத்தைக் கொடுக்கும்.

கர்ப்பமாயிருக்கும் போது உங்கள் மனதில் பலவித சந்தேகங்கள் ஏற்படலாம். என்ன சாப்பிடுவது? எதைத் தவிர்ப்பது? என்ன உடை அணிவது என்ன மருந்து சாப்பிடலாம்? எந்த வைத்தியரிடம் போவது? என்பது போன்ற பலவித நடைமுறைச் சந்தேகங்கள் ஏற்படலாம்.

இவைபற்றி, உங்கள் உறவினர்கள் பலரும் உங்களுக்கு உதவும் நல்ல எண்ணத்துடன் பல கருத்துக்களைக் கூறலாம். அதே வேளையில் அவர்களது பல்வேறு வகைப்பட்ட, மாறுபட்ட கருத்துக்கள் உங்களுக்கு உதவுவதற்குப் பதிலாக, மேலும் குழப்பத்தையும் ஏற்படுத்தலாம். ஆயினும் எதற்கும் குழப்பமடையாதீர்கள், எதற்கும் ஆத்திரப்படாதீர்கள். எதற்கும் கலக்கமடையாதீர்கள், எல்லாவற்றையும் இயற்கையின் போக்கில் விட்டுவிடுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக உங்களது உள்ளுணர்வு உங்களுக்கு உதவும்: சரியாக வழிகாட்டும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

---

5 ஆம் பக்க தொடர்ச்சி

### கிழக்கு மாகாணம்........

மாகாணசபை முறைமை ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவித அதிகாரமும் அற்ற ஒன்றாக இருக்கும்போது முதலமைச்சர் பதவியினால் வெறுமனே குறியீட்டுப் பயன் கிடைக்குமே தவிரவேறு எதுவும் கிடைக்கப் போவதில்லை. தற்போது இப்பதவி இரு சமூகங்களுக்கிடையேயும் ஈகோ பிரச்சினையை உருவாக்கிவிட்டது. முதலமைச்சர் பதவியை தமிழர்களுக்கு விட்டுக் கொடுத்தால் முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம் மக்கள் மத்தியில் செல்வாக்கினை இழக்கும். முஸ்லீம்களிடம் விட்டுக் கொடுத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்வாக்கினை இழக்கும். சம்பந்தன் தலைமையின் கவலையெல்லாம் வரும் பாராளுமன்றத் தேர்தலில் இவ் விவகாரம் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதே.

இந்த அதிகாரமாற்ற மாகாணசபை முறைமை கூட தமிழர்களின் இரத்தம் சிந்திய போராட்டத்தினால் தான் கிடைத்தது. தமிழர்கள் ஆயிரக் கணக்கில் போராட்டத்தில் உயிரிழந்தனர். இரத்தம் எதுவும் சிந்தாமல் போராட்டத்தைக் காட்டி சிங்கள அரசிடமிருந்து சலுகை பெற்ற முஸ்லீம்கள் மாகாண சபையைக் கைப்பற்றுவதும், தமிழர்களின் நலன்கள் முழுமையாகப் புறக்கணிப்பதும் தமிழர்களுக்கு சகிக்க முடியாததாக உள்ளது.

வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்ட பின்னர் கிழக்கின் அதிகாரிகளில் முஸ்லீம்களே அதிகமாக இருந்தனர். அவர்கள் அமைச்சர்பதவிகளின் அதிகாரத்தையும் பயன்படுத்தி கிழக்கில் தமிழர்களை முழுமையாகப் புறக்கணித்தனர். மாகாணசபை நிர்வாகமும் அவர்களின் கைகளுக்கு வந்த பின்னர் அதிகாரிகள் - அமைச்சர்கள் - மாகாணநிர்வாகம் ஆகிய மூன்றும் இணைந்து வெளிப்படையாகவே புறக்கணிப்பைச் செய்தன. சிங்களவர்கள் முஸ்லீம்களின் நிலங்களைப் பறிக்க அவர்கள் சிங்களவர்களுடன் மோதாது தமிழர்களின் நிலங்களை அதிகாரத்தின் துணைகொண்டு பறித்தனர். கடந்த இரண்டரைவருட முஸ்லீம் ஆதிக்க மாகாண நிர்வாகத்தில் புறக்கணிப்பு பச்சையாகவே தெரிந்தது. தமிழ் - முஸ்லீம் ஐக்கியம் பற்றி பேசுபவர்கள் இந்த உண்மைகளை மறந்து விட்டு பேச முடியாது.

மொத்தத்தில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மைய விடயம் தமிழ் முஸ்லீம் முரண்பாடே! இதனை எப்படித் தீர்க்கப் போகின்றோம். என்பதில் தான் கிழக்கின் எதிர்காலமே தங்கியிருக்கின்றது. கிழக்குத் தமிழர்கள் நேரடியாகவே பிரச்சினைக்கு முகம் கொடுப்பதால் உணர்வுரீதியாக இப் பிரச்சினைகளை அணுகுவது தவிர்க்க முடியாதது. அவர்களின் உனர்வுகளைக் கொச்சைப்படுத்தினால் தமிழ் அரசியல் ஒரு போதும் முன்னே செல்ல முடியாது. ஆனால் தூரநோக்கில் சிந்திப்பவர்கள் இது விடயத்தில் உணர்வுகளுக்கும் யதார்த்தற்கும் இடையே சமநிலையைக் காண்பதற்கு முன்வர வேண்டும்.

யதார்த்த நிலையில் வட - கிழக்கு தமிழர்களுக்கு மட்டுமல்ல முஸ்லீம்களுக்கும் தாயகமே. எனவே நியாயமான வகையில் இரு சமூகங்களும் தாயகத்தின் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு தயாராக வேண்டும். அதற்கு இருதரப்பிலிருந்தும் நேர்மையான உரையாடல்கள் தேவை. கடந்தகாலத் தவறுகளை ஒத்துக் கொள்வதற்கு இருதரப்பும் தயாராக இருக்கவேண்டும். இதற்கு இரு தரப்பிலிருந்தும் நேர்மையான உரையாடல்கள் தேவை. இன்றைய நிலையில் தமிழ்த் தரப்பு தயாராக இருக்கின்றது.

வடக்கு - கிழக்க இணைந்த தாயகத்தில் முஸ்லீம்களுக்கென ஒரு அதிகார அலகினை வழங்குவதற்கும் தயாராக உள்ளது. ஆனால் முஸ்லீம் தரப்பிலிருந்து சிறிய பிரதிபலிப்புக் கூட வரவில்லை. கிழக்கினை எவ்வாறாவது தமக்குச் சொந்தமான பிரதேசமாக மாற்றுவதில் தான் அவர்கள் அக்கறையாக இருக்கின்றனர். இங்கு ஒருகையால் மட்டும் தட்டி சத்தத்தினை எழுப்ப முடியாது. தமிழர்களின் இருப்பினை விலையாகக் கொடுத்து ஐக்கியத்தைப் பேணமுடியாது.

நேர்மையான உரையாடலுக்கு முஸ்லீம் அரசியல் மூன்று தடைகளிலிருந்து விடுபட வேண்டும். முதலாவது தமிழர்களும் சிங்களவர்களும் மோதினால் நாங்கள் நீந்துவோம். அவர்கள் ஐக்கியப்பட்டால் நாங்கள் மூழ்குவோம் என்ற பச்சை வியாபார அரசியலிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும். இரண்டாவது தென்னிலங்கை முஸ்லீம்கள் சிங்களவர்களுடன் வாழப்போகின்றவர்கள். வட - கிழக்கு முஸ்லீம்கள் தமிழர்களுடன் இணைந்து வாழப்போகின்றவர்கள் எனவே இரண்டிற்கும் தனித்தனியான அரசியலைப் பின்பற்ற தயாராக வேண்டும். தமிழ்த் தேசியத்திற்குள் மலையக அரசியல் கரைய வேண்டும் என வட- கிழக்குத் தமிழர்கள் நினைப்பதில்லை. மூன்றாவது ஆளும் கட்சி அரசியலிருந்து விடுபட்டு தமது உரிமைக்காக போராடுகின்ற அரசியலுக்கு முஸ்லீம்களும் தயாராக வேண்டும். தமிழர்களது விடுதலைப் போராட்டத்தில் குளிர் காயலாம் என்ற நினைப்பதைக் கைவிட வேண்டும்.

முஸ்லீம் தேசியம் சிங்கள பேரினவாதத்திற்கு எதிராகக் கட்டியெழுப்பப் படவில்லை. மாறாக தமிழ்த் தேசியத்திற்கு எதிராகத் தான் கட்டப்பட்டது. அது சிலவேளை காலத்தின் தேவையாக இருந்திருக்கலாம். இன்று முஸ்லீம்களின் இருப்புக்கு அச்சுறுத்தல் தமிழர்கள் அல்ல. சிங்கள பௌத்த பேரினவாதத்தினால் தான் ஏற்படுகின்றது. எனவே சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எதிர்கொள்ள முஸ்லீம் தேசியத்தை மடை மாற்றம் செய்ய தயாராக வேண்டும்.

நேர்மையான ஐக்கியத்திற்கு தமிழ்த் தரப்பு தயாராக இருக்கின்றது. முஸ்லீம் தரப்பு தயாரா? ●

-அருள்பிரகாஸ்-

# அந்நியன் நிஜத்தில் இருக்கின்றனா?

உலகில் மிகவும் அரிதான மன நோய், பல்வகை ஆளுமை நோய் (Multiple Personality Disorder). இது மிகவும் சிக்கலான பிரச்சினைதான். இந்தக் கருவை மையமாக வைத்து உருவாக்கப்பட்டதே அந்நியன். ஆனால், அந்தப் படத்தில் வருவது போலத்தான் பல்வகை ஆளுமை நோய் பாதிக்கப்பட்டவர்கள் உண்மையிலேயே இருப்பார்களா?

அந்நியன் திரைப்படம் மூன்று வித மான பண்புகள் கொண்ட ஒரு மனிதனைச் சித்திரிக்கிறது. ஒரு பெண்ணைத் தீவிரமாகக் காதலிக்கும் ஒருவன் சமூக அவலங்களைக் கண்டு பொங்கும் கோபக்கார மனிதனாக ஒருவன் பிறகு சாதுவான ஒரு சாமானியன். ஒரு மனிதனின் தீவிரக் காதல் ரெமோ பாத்திரத்தின் வழியாகவும், சமூகக் கோபம் அந்நியன் கதாபாத்திரம் வழியாகவும் வெளிப்படும். இதைத்தான் பல்வகை ஆளுமை நோய் (Multiple Personality Disorder) என்கிறோம்.



## சரியான சித்திரிப்பா?

அந்நியன் திரைப்படத்தைப் பொறுத்தவரை அம்பிகதாபாத்திரம்சாமானிய னாக இருக்கும். இந்தப் பாத்திரத்துக்குள்தான் 'அந்நியன்', 'ரெமோ'என இரண்டு வகை ஆளுமைப் பண்புகள் வெளிப்படும். அரசு ஊழியர்களின் பொறுப்பின்மையால் அம்பி யின்தங்கைஉயிரிழந்திருப்பாள். இந்தச்சம்ப வம் அவரது மனத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும். அம்பியின் சமூகக் கோபத்துக்கு அது ஒரு காரணமாக இருக் கும்.

மனநல மருத்துவ அறிவியல், பல்வகை ஆளுமை நோய்க்கு சிறுவயதில் ஏற்படும்சின்னச்சின்னசம்பவங்கள்காரண-மாக இருக்கலாம் என்கிறது. அதன்படி, இது சரியான சித்திரிப்பு. ஆனால், இந்தப் படத்தில் உள்ள பெரும்பிழை என்னவென்றால் வே-றொரு ஆளுமையாக மாறும்போது, அந்த ஆளுமைக்காக எந்த நோயாளியும் தனியாக உடை அலங்காரமோ, ஒப்பனையோ செய்துகொள்வதில்லை.

ஆனால், திரைப்படத்தில் அந்நியன் என்ற ஆளுமைக்காக பிரத்யேக 'மேக்-அப்' செட்டுகளை அம்பி கதாபாத்திரம் வாங்கி வைத்திருப்பான். மேலும், ரெமோ ஆளுமை-யும் வேறொரு ஆடையில் வெளிப்படும். இது இந்த நோயின் தன்மைக்கு மாறானது. நாசர் நடிப்பில் நீண்டகாலத்துக்கு முன் வெளியான 'மிஸ்டர் பிரசாத்' என்ற படம் பல்வகை ஆளுமை நோயைச் சரியாகச் சித்திரித்த தமிழ்ப் படம் எனலாம்.

## நோயின் இயல்புகள்

பல்வகை ஆளுமை நோய் (Multiple Personality Disorder) உலகில் மிகவும் அரிதான மனநோய். பெண்கள்தான் இந்த நோய் பாதிப்புக்கு அதிகம் உள்ளாகிறார்கள் எனச் சொல்லப்படுகிறது. இந்த நோய் பாதிப்புக்கு உள்ளானவர்கள் ஒவ்வொரு ஆளுமைக் கும் தனித்த சிந்தனை,தனி அடை யாளம் கொண்டிருப்பார்கள். அதாவது அம்பி யாக இருப்பவனும் அந்நியனும் உடல் அளவில் ஒருவர் என்றாலும், சிந்தனை அளவிலும் அடையாளத்திலும் தனித்த அடையாளம் கொண்டிருப்பார்கள். இவர் களால் ரகசியம் காப்பது இயலாத காரிய மாக இருக்கும். இது தொடர்பறு அடையாளப் பாதிப்பு (Dissociative identity disor-der) என்பது இந்தப் பாதிப்பின் இன்னொரு அம்சம்.

இந்த நோய் பாதிப்பைத் தொடக்க நிலையிலேயே கண்டறிய முடியும். பல்வகை ஆளுமை நோய்ப் பாதிப்பு தொடக்க நிலையில் உள்ளவர்கள், பேசும்போது தன்னையே வேறு ஒரு நபர் போலப் பாவித்துப் பேசுவார். பல விஷயங்களை நினைவில் இருந்து மறந்துவிடுவார். கால மறதி ஏற்படும். அதாவது இரண்டு காலகட்டத்திலும் குறிப்பிட்ட சில நாட்களை மறந்துவிடுவார்கள். திடீரென வெகு தூ ரம் பயணித்து ஒரு புதிய இடத்துக்குச் சென்று, அங்கு ஒரு புதிய மனிதன் போல வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.

இசை, ஓவியம், விளையாட்டு என ஏதாவது ஒன்றில் திறமைசாலியாக இருப்பார். உணர்ச்சிகள் நிலையில்லாமல் மாறுபட்டுக்கொண்டே இருக்கும். சவாலான காரியங்களில் ஈடுபடுவதில் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

## சந்நியாசியான தொழிலதிபர்

பல்வகை ஆளுமை நோய் மிக ஆபூர்வமான நோய் என்பதால் எனது இத்தனை வருட அனுபவத்தில், அந்தப் பாதிப்பு உள்ள ஒருவரையும் சந்தித்ததில்லை. ஆனால் தொடர்பறு அடையாளப் பாதிப்பு (Dissociative identity disorder) ஏற்பட்ட ஒருவரைக் குணப்படுத்திய அனுபவம் உண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு என்னிடம் ஒரு நடுத்தர வயது நபர் வந்தார். அவர் ஒரு வெற்றிகரமான தொழிலதிபர். குடும்பம் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவந்தார். திடீரென ஒரு நாள் காணா-மல் போய்விட்டார். பொறுப்புமிக்க அவர் சாதாரணமாக சொல்லிக்கொள்ளாமல் எங்கும் செல்லமாட்டார். ஆனால், சென்று பல நாட்களாகியும் அவரிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லை.

பல்வகை ஆளுமை நோய் (Multiple Personality Disorder) உலகில் மிகவும் அரிதான மனநோய். பெண்கள்தான் இந்த நோய் பாதிப்புக்கு அதிகம் உள்ளாகிறார்கள் எனச் சொல்லப்படுகிறது. இந்த நோய் பாதிப்புக்கு உள்ளானவர்கள் ஒவ்வொரு ஆளுமைக்கும் தனித்த சிந்தனை,தனி அடையாளம் கொண்டிருப்பார்கள். அதாவது அம்பியாக இருப்பவனும் அந்நியனும் உடல் அளவில் ஒருவர் என்றாலும், சிந்தனை அளவிலும் அடையாளத்திலும் தனித்த அடையாளம் கொண்டிருப்பார்கள். இவர்களால் ரகசியம் காப்பது இயலாத காரியமாக இருக்கும். இது தொடர்பறு அடையாளப் பாதிப்பு (Dissociative identity disorder) என்பது இந்தப் பாதிப்பின் இன்னொரு அம்சம்.

அவர் எங்கு சென்றார் என்றால், தொலைவில் உள்ள ஒரு மலைக் கோயிலுக் குச் சென்றுவிட்டார். அங்கு சென்று ஒரு பிச்சைக்காரன் போல வாழ்ந்திருக்கிறார். தான் யார், தனது அடையாளம் என்ன என்பது போன்ற எந்த நினைவும் இன்றி ஒரு புதிய மனிதனாக வாழ்ந்திருக்கிறார். அங்கு போவோர், வருவோரிடம் உணவு வாங்கி உண்டு, அங்கேயே உறங்கி நாட்களைக் கழித்திருக்கிறார். திடீரென நினைவு திரும்பி, அங்குள்ளவர்களிடம் கூறி ஊர் திரும்பியிருக்கிறார்.

## சிகிச்சை

பெரும்பாலும் பல்வகை ஆளுமை நோயைக் குணப்படுத்துவது கடினம். இந்த பாதிப்புக்குள்ளானவர்கள் குடி, போதைப் பொருள் பழக்கத்துக்கு ஆளாகக்கூடும். தற் கொலை எண்ணங்கள் வரும். இதற்கெனத் தனித்துவமான சிகிச்சைகள் இல்லை. படத்தில் சித்திரித்ததுபோல ஹிப்னாடிச முறையில் சிகிச்சை அளிக்கலாம். நோயின் தன்மையைப் பரிசோதித்த பிறகு மருந்துகள் அளிக்கலாம்.

---

15 ஆம் பக்க தொடர்ச்சி

தாயாகப்போகும்..........

அத்துடன் நாம் இங்கு தரும் பலவித குறிப்புக்களும், கருத்துக்களும் உங்களுக்குப் பலவிதத்தில் உதவும்.
இந் நூல் ஒரே மூச்சில் படித்து முடிக்க வேண்டும் என்று எண்ணாதீர்கள்: நேரம் கிடைக்கும் போது ஆறுதலாக உணர்ந்து படியுங்கள். மறுபடியும் ஏதாவது தேவை ஏற்படும் போது அல்லது சந்தேகம் ஏற்படும்போதோ, அல்லது சந்தேகம் ஏற்படும் போதோ திரும்பவும் பாருங்கள்.

ஆனால் இங்கு எல்லாமே கூறப்பட்டுள்ளது என எண்ணாதீர்கள்: மேலதிக விளக்கங்கள் தேவைப்படும் போதோ, அல்லது சந்தேகங்கள் தோன்றும் போதோ உங்கள் குடும்பவைத்தியரின் ஆலோசனைகளைப் பெறுங்கள். இது மி-கவும் முக்கியமாகும்.

தாயாகப் போகின்ற இந்த அதி ஆனந்த சூழ்நிலையில் தந்தையாகப்போகும் உங்கள் கணவரை மறந்துவிடாதீர்கள். இந்த சூழ்நிலையில் தான் நீங்களும் உங்கள் கணவரும் மனதால் மிகவும் நெருங்கி வருவீர்கள்.

தான் இந்த நேரத்தில் ஒதுக்கப்பட்டு விட்டதாக அவர் எண்ண இடமளியாதீர் கள். அவரையும் இந்த சூழ்நிலையிலும், தயார்ப்படுத்தலிலும் இணைந்துவரச் செய் யுங்கள். என்ன உடை தைகக்லாம், என்ன பொருட்களை வாங்க வேண்டும், என் னென்ன ஆயத்தங்கள் செய்யவேண்டும், என்ன பெயர் வைக்கலாம் போன்ற விஷ யங்களில் அவருடன் கலந்துரையாடி, அவரையும் இந்தப் பயணத்தில் இணைந்து வரச் செய்யுங்கள் .

அத்துடன் அவருக்கும் தந்தை யாவதற்கு தன்னைத் தயார்ப்படுத்தும் மனோநிலை வேண்டியிருக்கும். ஒரு பொறுப்பான தந்தையாவதற்குத் தான் செய்யவேண்டியது என்ன? கர்ப்ப காலத்திலும் பிரசவ வேளையிலும் மனைவிக்கு ஏற்படக்கூடிய சிக்கல்களும், பிரச்சினைகளும் எவை? அவற்றை தீர்த்துவைக்க அல்லது அவற்றைச் சமாளிக்க செய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் எவை? ஒரு புதிய குடும்ப அங்கத்தவனை குழந்தை தனது குடும்ப வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் எவை? இவை போன்ற கேள்விகளுக்கு அவர் தனது பதில்களையும், செயற்பாடுகளையும் தயார்படுத்தி வைக்கவேண்டும்.

தொடரும்

# வாழ்க்கையின் தேடல்

-கவிமகன்-

“ கணினியை காணவே முடியாத அந்த நேரத்தில் கணணி மயப்படுத்தப்பட வேண்டிய ஒரு தேவை அமைப்புக்கு வந்திருந்த நேரத்தில் அதற்கான ஒரு ஆயத்தப்படுத்தலில் அவன் உள்வாங்கப் படுகிறான். அப்போது தான் அவனுக்கும் அவளுக்கும் இடையே ஒரு புதிதான உறவு மலர்ந்தது. இரவில் தூக்கமில்லாமல் சில தடவைகள் தவிக்கும் போது அவனது அனுபவக்கதைகளும் காதல் கதைகளும் எனக்கு மகிழ்வூட்டுபவையாக இருக்கும்.”

கிழக்கு வானம் வெளிப்பாக மட்டுமே இருந்தது. சூரியனின் உருவம் எப்படி என்று அறிய முடியாத அளவுக்கு வானம் பனியால் சூழப்பட்டிருந்தது வானம் மட்டுமல்ல நிலமும் கூட. திரும்பும் இடமெங்கும் வெண்மை போர்த்தியே காணப்பட்டது. நீண்ட தூரப் பயணம். இலத்திரனியல் தொடரூந்து என்னை ஏற்றிப் பயணித்துக் கொண்டிருந்தது. எனது சிந்தனைகள் மட்டும் அவனின் நினைவுடனே சுழன்று கொண்டிருந்தன. இனிமையான அந்த வெண்மை காட்சிகளில் என் மனம் லயிக்கவே இல்லை. சுற்றிச் சுழன்று கொண்டிருந்த மனவோட்டம் முற்று முழுதாக அந்த உருவத்தின் மீதே பதிந்திருந்தது.

“வணக்கம் அண்ண நீங்க ஈழமா“? அவனைக் கண்டவுடன் என் அருகில் வந்து கொண்டிருந்த நண்பன் வினா எழுப்புகிறான். “ஓம் சொல்லுங்க அண்ண“ அந்தக் குரலை உடனடியாக இனங்கான முடியவில்லை. உருவமும் மாறி முற்றுமுழுதாக அவனது தோற்றம் பழைய நிலையை விட்டுத் தூர சென்றிருந்தது. திரும்பிய வேகத்தில் என்னை இனம் கண்டு கொள்கிறான் அவன். “தம்பி எங்கடா? இங்க எப்படா வந்தா? எப்பிடி இருக்கிறா?” பல கேள்விகளை அடுக்கி கொண்டே செல்கிறான். எனக்கு மட்டும் எந்த வார்த்தைகளும் வெளிவரவே இல்லை. அந்த உருவத்துக்கு சொந்தக்காரன் என் நேசத்துக்குரிய ஒரு அண்ணன் என்றால், அது தான் நிஜம்.

சில வருடங்களுக்கு முன் அவனது உருவத்தையும் அவன் செய்து கொண்டிருந்த பணியையும் நினைத்து என் மனது வேதனையின் உச்சியில் வெதும்பத் தொடங்கி இருந்தது. அவனது மேசைகளை சுற்றிப் பல கணனிகள். அவற்றில் பலவி-தமான பணிகளில் மூழ்கி போய் அவனது நண்பர்கள். அவனது கட்டளைகள், திருத்தங்கள், ஆலோசனைகள் என்றும், வடிவமைப்புக்கள் உருவாக்கங்கள் என்றும் பல வேலைத்திட்டங்கள் அவனது உள்ளக வலையமைப்புக்கூடாக உரியவர்களுக்கு அனுப்பப்பட்டு கொண்டே இருக்கும். தவறு விடுபவர்களுக்குரிய தண்டனைகள். திருத்தத்துக்கு தேவையான ஒழுங்குகள் என்று அவன் பணியில் மூழ்கிப் போய் கிடப்பான். இத்தனையும், அவன் உருவாக்கிக் கொண்டிருக்கும் முக்கிய பணியொன்றை செய்யவிருக்கும் மென்பொருள் ஒன்றுக்கானது என்பது அங்கு இருப்பவர்களை விட வேறு எவருக்குமே தெரியாத ஒன்று.

ஜி.பி.எஸ் என்று அறியப்படும் புவியியல் நிலை காட்டி மூலம் எதிரி இருப்பிடங்களை அறிந்து அவற்றின் குறிகளை நிலைப்படுத்தி இலக்கு வைத்து எறிகணைகளை ஏவுவதற்கான அந்த மென்பொருள் உருவாக்கத்தின் முழு முயற்சியையும் வெற்றி கண்டவன் அவன். அவன் ஒரு மென்பொருளாளன் என்பதை விட தேச விடுதலையாளன்.

இளைய வயதிலையே அவனைப் போராளியாக்கி மகிழ்ந்த அவனது தாயின் எண்ணங்களை இப்போதும் என்னால் மறக்கமுடியாது. அத்தகைய தேச விடுதலை விரும்பியாகவே அவன் வளர்க்கப்பட்டிருந்தான். ஒரு அக்காவுக்கு தம்பியாகப் பிறந்ததாலோ என்னவோ அவனும் அதிக செல்லமாகவே வளர்ந்திருந்தான். அவனுக்கும் பல ஆசைகள், கனவுகள் இருந்தன. போரா-ளியாகி பின் அவனின் வயது, அவனைப் படிப்புக்கான தெரிவுக்குள் கொண்டு செல்கிறது. அவனும் கொடுக்கப்பட்ட கல்வியூட்டல்கள் அனைத்தையும் கடுமையான முயற்சியோடு கற்றுக் கொண்டிருந்தான்.

கணினியை காணவே முடியாத அந்த நேரத்தில் கணணி மயப்படுத்தப்பட வேண்டிய ஒரு தேவை அமைப்புக்கு வந்திருந்த நேரத்தில் அதற்கான ஒரு ஆயத்தப்படுத்தலில் அவன் உள்வாங்கப் படுகிறான். அப்போது தான் அவனுக்கும் அவளுக்கும் இடையே ஒரு புதிதான உறவு மலர்ந்தது. இரவில் தூக்கமில்லாமல் சில தடவைகள் தவிக்கும் போது அவனது அனுபவக்கதைகளும் காதல் கதைகளும் எனக்கு மகிழ்வூட்டுபவையாக இருக்கும். பலவருடங்கள் பார்வையால் மட்டுமே காதல் மொழி பேசியதாக அவன் கூறும் போது சிரிப்பதைத் தவிர எனக்கு வேறு எதுவும் இருப்பதில்லை. அத்தகைய ஒரு காதலனாகவே அவன் இருந்தான்.


கற்றல் முடிந்து பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தபோது முதன்நிலை பணியாளனாக இரவு பகல் பாராது உழைத்தவன். அதனாலோ என்னவோ குறித்த சிறுகாலத்துக்குள் அவனுக்குரிய பொறுப்புக்கள் வழங்கப் பட்டு அந்த பணியிடத்துக்கான பொறுப்பு மிக்க பணியில் இருத்தப்படுகிறான். புதிய புதிய உருவாக்கங்களூடாகப் பலம் சேர்த்த அந்த கட்டுடல் உருவம். இப்போது ஒற்றை காலை இழந்து உருவம் மெலிந்து சிற்றுடலாக அந்த மலையின் உச்சியில் இருக்கும் தனது இருப்பிடத்தை நோக்கி சறுக்கி விழுத்தும் பனியின் கட்டிகளுக்கிடையே நடக்க முடியாது போய் கொண்டிருக்கிறது.

என்னடா தம்பி யோசிக்கிறா? என்ன நான் இப்பிடி இருக்கிறது உனக்கு கவலையோ...? விடுடா இதெல்லாம் நாம் பட்ட கஷ்டங்களை விடவா கஷ்டம்? தொடையோடு அகற்றப்பட்ட அந்த காலை ஊன்றி நடக்க முடியாத வேதனையோடும் புன்னகையோடு வா வீட்டுக்கு போவம் என்று அழைக்கிறான். எனக்கு இப்போதும் வாயில் பேச்சு எழவில்லை திகைப்பு மட்டுமே மிஞ்சி இருந்தது. அவனை கட்டிப்பிடித்து என் உணர்வுகளை எல்லாம் அவனுக்கு பரிமாற்ற வேண்டும் என்று எண்ணம் தோன்றியது. ஆனாலும் என் மனம் ஏனோ அவனை விட்டு பிரிந்திடாதே என்றே கூறிக்கொண்டு இருந்தது.

வார்த்தைகள் வெளிவராத போதும் அவனின் காதலி பற்றி கேட்க தோன்றியதால் கேட்டே விட்டேன். “அவை இந்தியாவில இருக்கினம்டா. இரண்டு பிள்ளைகள். தெரியும் தானே பயங்கர பிரச்சனைகளுக்கு மத்தில அங்க இருக்கினம். என்னால ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு பணம் அனுப்புறதுக்கே முடியாம இருக்கு. அதனால் தான் ரேஸ்ரோரெண்ட் வேலைக்குப் போய் வாறன். மணித்தியாலத்துக்கு 8.50 யூரோ தரனும். ஆனால் அவங்கள் எனக்கு 5 தான் தருவாங்கள். என்ன செய்யிறதடா, அவைக்கு அனுப்பனுமே...? “ விம்மி உடைகிறது அவனது குரல். கணினியைத் தன் கைக்குள்ளே வைத்திருந்த ஒரு மென்பொருள் வடிவமைப்பாளன் என்பதை விட மென்பொருள் சாதனையாளன் என்பதே பொருத்தமானது. இன்று சுத்திகரிப்பு தொழிலாளியாகக் கஷ்டப்படுவதை எண்ணிப் பார்க்க மனது வேதனை கொள்வதை விட வேறு என்ன செய்ய முடியும்?

“..ம்ம் என்ன தம்பி நாட்டில ஆட்சி மாற்றமாம். இனிப் பிரச்னை இல்லையாம். சனம் எல்லாம் ஊருக்குக் கிளம்புதுகள்... சாமான் எல்லாம் மலிஞ்சிட்டுதாம். எங்கட தேசவிடுதலை துரோகிகள் கூட எல்லாம் இப்ப அடங்கிட்டினம் போல இருக்கு...?“ அவன் பேச்சை மாற்ற முனைந்தான். நானும் அவனின் குடும்ப உறவுகளைப் பற்றியே அடுத்த வினாவைத் தொடுத்து அவனின் மனதை புண்படுத்த விரும்பாமல் பேசா-மல் மௌனியானேன். வாழ்வாதாரத்தைத் தொலைத்து உயிர் காக்க என்று அந்நிய தேசத்தில் அனாதைகளாக இருக்கும் இவர்களைப் போல அனுபவங்களுக்கு மேல் அனுபவங்களைத் தமது வரலாறாக்கிக் கொண்ட மனிதர்கள் நினைவில் நிறைந்திருப்பது எல்லாம் இப்போதும் எம் தாயக மண்ணின் வாழ்க்கையே. “சீ என்று, எப்படா போய் என்ர மண்ணில ஆசை தீர வெறுங் காலுடன் நடப்பம் என்று இருக்கு....” அள்ளி சொரிந்திருக்கும் பனிக்கட்டிகளின் சறுக்கல்களின் அவனது செயற்கைக் காலும் நிஜக் காலும் தடுமாறும் போதெல்லாம் அவன் குறித்துரைப்பது இதுவே. “உண்மை தான் அண்ண“ என் நண்பன் அவனுக்கு ஒத்தூதினான். நான் அதிர்ச்சியில் இறந்து இன்னும் மீளாதவனாகவே அவன் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்.

அங்கே கலகலப்பிற்கு உருவமான அவனது காதல் மனைவியின் இரு பெண் பிள்ளைகளின் படத்தைப் பார்த்த போது வாழ்க்கையே சிதறிப் போனது. உருவம் சிறுத்து வறுமையின் உருவாக அவர்களும், எளிமையின் உருவாக இவனும் எங்கோ பல்லாயிரம் கிலோ மீற்றர்கள் தள்ளி தமது வாழ்க்கைக்காக காத்திருக்கிறார்கள். அப்போது தான் ஒன்றைக் கவனித்தேன். அவனது தாய் தந்தையின் உருவப்படம் மாலையிடப்பட்டு இருந்ததைக் குறித்து கேட்ட போது தான் மறுபடியும் அந்தக் கொடூர விபத்து நினைவுக்கு வந்தது. அவர்களும் இன்றி தூய்மையான மனதுடையோ-னான இவனும் இன்றி பிள்ளைகளுடன் அவளும் தனிமையில் இவனும் எதோ ஒரு வாழ்வின் தேடலுக்காகப் பயணித்தது கொண்டிருக்கின்றார்கள்.



ஜெ.பிஸ்மி

# தி நேம்ஸேக்

பணம் சம்பாதிப்பது ஒன்றே மனிதக் குறிக்கோள்களில் முதன்மையாகிவிட்ட இன்றைய வாழ்க்கைச் சூழலில், பிறந்து வளர்ந்த ஊரையும், உறவுகளின் வேர்களையும் அறுத்துக் கொண்டு பிழைப்புக்காக வேறு இடம் தேடி ஓடுவதை தவிர்க்க முடியவில்லை. மனிதர்களின் பணத்தேடல் இன்று நகரங்களைக் கான்க்ரீட் காடுகளாக்கிக் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் கிராமங்கள் மனிதர்களற்ற பிரதேசமாக, மயானபூமியாக மாறி வருகின்றன.

பொருளாதார தன்னிறைவுக்காக இப்படி புலம் பெயர்பவர்களின் புதிய இடத்து வாழ்கை எப்படிப்பட்டதாக இருக்கும் என்று யோசிக்கும் போது அதனுள் புதைந்திருப்பது சொல்லிமாளாத சோகம்! ஈரமற்ற நரகக் கலாச்சாரத்தில் தன்னைத் திணித்துக் கொள்ள முடியாமல், பழக்கப்பட்டுப் போன பழைய் வாழ்க்கை முறையிலிருந்து விடுபடவும் முடியாமல் போலியான இரட்டை வாழ்க்கைக்குத் தள்ளப்படுகிறார்கள்.


சில நூறு கிலோமீட்டருக்குள் நிகழும் இந்த இடப்பெயர்ச்சியே இத்தனை சிக்கலுக்குள்ளாகும் போது, நாடுவிட்டு நாடு பறந்து போகின்றவர்களின் நிலை என்னவாக இருக்கும்?

மொழி, கலாச்சாரம், உணவு, உடை என எல்லாவற்றையும் சமரசம் செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. பணத்துக்காக இவற்றை எல்லாம் அழுக்கு உடையைப் போல் எவ்வித மன உறுத்தலும் இல்லாமல் கழற்றி எறியும் சுபாவம் கொண்டவர்களுக்கு இது ஒன்றும் பெரிய விசயமில்லை தான். கலாச்சாரக் கட்டமைப்பில் வளர்ந்து, அதன் மீது பற்றும் பிடிப்பும் கொண்டவர்களுக்கு இது அத்தனை எளிதல்ல. இதன் வலியும் வேதனையும் கற்பனைகளுக்கும், அனுமானங்களுக்கும் அப்பாற்பட்டது ஏனெனில் சமரசங்களிலேயே மிக் கொடுமையானது வாழ்கை முறையை சமரசம் செய்து கொள்வதுதான் அது ஏற்படுத்தும் ரணத்திற்கும்,

### ரத்தத்திற்கும் ஏது சிகிச்சை?

சலாம் பாம்பே, வேனிட்டி ஃபேர், மிஸிஸிப்பி மசாலா, மான் சூன் வெட்டிங் போன்ற படங்களின் மூலம் உலக அளவில்

**மொழி, கலாச்சாரம், உணவு, உடை என எல்லாவற்றையும் சமரசம் செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. பணத்துக்காக இவற்றை எல்லாம் அழுக்கு உடை-யைப் போல் எவ்வித மன உறுத்தலும் இல்லாமல் கழற்றி எறியும் சுபாவம் கொண்டவர்களுக்கு இது ஒன்றும் பெரிய விடயமில்லை தான். கலாச்சாரக் கட்டமைப்பில் வளர்ந்து, அதன் மீது பற்றும் பிடிப்பும் கொண்டவர்களுக்கு? இது அத்தனை எளிதல்ல.**




கவனத்தைப் பெற்றிருக்கும் மீராநாயர் 'தி நேம்ஸேக்' திரைப்படத்தில் எடுத்துக் கொண்டிருப்பது இந்த விஷயத்தைத்தான். இந்தியாவிலிருந்து அமெரிக்கா சென்றவர்கள், இந்தியப் பாரம்பரியத்தைப் பின்பற்றவும் வழியில்லாமல், அங்குள்ள கலாச்சாரத்துக்குள்ளும் செல்ல முடியாமல் தவிப்பதை வெகு நுணுக்கமாய் அலசியிருக்கும் படம் இது.

பெங்காலி குடும்பத்தைச் சேர்ந்த அஷோக்கும், ஆஷிமாவும் பெற்றோர்களால் இல்லறப் பந்தத்தில் இணைக்கப்பட்டு, சிறந்த எதிர்காலத்தைத் தேடி, கல்கத்தாவிலிருந்து நியூயோர்க் செல்கின்றார்கள். தன் சொந்த பந்தங்களையும் தன் நாட்டுக் காலாச்சாரத்தையும் மறக்கமுடியாமல் திணறிப் போகும் ஆஷிமாவால், அமெரிக்க வாழ்கையோடு ஒட முடியவில்லை. சுவாசமே தடைப்பட்டது போல் அவஸ்தையை உணரும் ஆஷிமா, தனக்குப் பிறந்த குழந்தையால் சற்றே ஆறுதல் அடைகிறாள். குழந்தைக்கு தன் அபிமான ரஷ்ய எழுத்தாளர் நிக்கலாய் கோகல் நினைவாக நிக்கல் கோகல் எனப் பெயர் சூட்டி, சந்தோஷமடைகின்றான் அஷோக். குழந்தையைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் போதும் கோகல் என்ற பெயரே தொடர வேண்டும் என்றும் விரும்புகின்றான் அஷோக்.




வளர்ந்து பெரியவனாகின்ற கோகல், தன் பெயரை நிக் என்று அமெரிக்க அடையாளத்துடன் மாற்றிக் கொள்கிறான். பெயரில் மட்டுமல்ல, அவனது வாழ்க்கையையும் பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாகவே இருக்கிறது. வீட்டிலேயே சிகரெட் பிடிக்கிறான், பெண்களுடன் ஊர் சுற்றுகிறான். அமெரிக்க இளைஞனாக வாழ்வதே அவனுக்குப் பிடித்தமானதாக இருக்கிறது. இந்திய பாரம்பரியத்தைப் பற்றி சற்றும் பொருட்படுத்தாத கோகலின் போக்கு, அஷோக்கையும் ஆஷிமாவையும் அதிர்ச்சிக்குள்ளாக்குவது மட்டுமல்ல, அமெரிக்க மோகத்திலிருந்து அவனை எப்படி மீட்பதென்று தெரியாமல் தவிக்கின்றார்கள்.

தன் அப்பா அஷோக்கின் திடீர் மரணத்திற்குப் பிறகு, தனக்காக தன் அப்பா விட்டுச் சென்ற, அவர் வாழ்ந்த போது தன் எதிர்காலத்தை நினைத்து ஏங்கிய உலகத்துக்கும், தனக்கு முன்னால் நிற்கும் இன்னொரு உலகத்துக்குமான இடைவெளியை புரிந்து கொள்கிறான் கோகல்.

அஷோக் ( இர்ஃபான் கான் ), ஆஷிமா ( தபு ), கோகல் ( கேல்பென் ) என 'தி நேம்ஸேக்' படத்தில் மூன்று பாத்திரங்கள் தான் பிரதானம். பாலிவுட் கனவுக் கன்னிகளில் ஒருவரான தபுவின் நடிப்புத் திறமை, 'சாந்தினி பார்' படத்துக்குப் பிறகு சிறப்பாக வெளிப்பட்டிருக்கிறது இந்தப் படத்தில். பெங்காலிக் கலாச்சாரத்தை உயிராய் மதிக்கும் பெண்ணாய், இதை தன் குழந்தைக்குக் கற்றுத்தர முயலும்

**அமெரிக்க இளைஞனாக வாழ்வதே அவனுக்குப் பிடித்தமானதாக இருக்கிறது. இந்திய பாரம்பரியத்தைப் பற்றி சற்றும் பொருட்படுத்தாத கோகலின் போக்கு, அஷோக்கையும் ஆஷிமாவையும் அதிர்ச்சிக்குள்ளாக்குவது மட்டுமல்ல, அமெரிக்க மோகத்திலிருந்து அவனை எப்படி மீட்பதென்று தெரியாமல் தவிக்கின்றார்கள்.**

பொறுப்பான தாயாய், மகனின் போக்கைக் கண்டு, தன் கண் முன்னாலேயே வாழ்க்கையின் அர்த்தம் தொலைந்து போவதாக தவிப்பது என படம் நெடுங்கிலும் தன்னை நிறாபிக்க தபுவுக்கு நிறைய வாய்ப்பு! மிகச் சிறப்பாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் தபு பிறந்த மற்றும் வாழுமிடம் என இரு வேறு இடங்களில் நேரேதிரான கலாச்சாரங்களுக்கிடையில் சிக்கிக்கொண்டிருப்பவர்களின் ஏக்கத்தைச் சொல்லும் 'தி நேம்ஸேக் ' படத்தின் இயக்குனரான மீராநாயரே இந்தியாவில் பிறந்து, அமெரிக்காவில் வாழ்பவர் என்பது சுவாரஸ்சியமான முரண்பாடு! இந்த முரன் பாட்டுக்குப் பின்னால் அவர் அனுபவித்த உளவியல் பிரச்சினையை அப்படியே பிரதிபலித்தது ஜம்பா லஹிரி எழுதிய' தி நேம்ஸேக்' நாவல் ! இந்த நாவல் மீரா நாயருக்குள் புதைந்து கிடந்த இவரது கடந்த காலத்தை கிளறிவிட்டது, அதைப் படமாக் வேண்டும் என்ற தூண்டுதலை ஏற்படுத்தியதும் வியப்பில்லை.

"என்னை சந்தித்த பல பேர் 'தி நேம்ஸேக்' நாவல் தங்களைப் பாதித்ததாக சொன்னார்கள். நானும் படித்தேன் என் வாழக்கையைப் படித்தது போல் இருந்தது. நான் எப்படி அமெரிக்கா வந்தேன்? வந்த புதிதில் எப்படி இருந்தேன்? பிறகு எப்படி மாறினேன்? அங்குள்ள ஆடை நாகரீகத்தை ஏற்றுக் கொள்ள எனக்கு மூன்று ஆண்டுகள் பிடித்தன. ' தி நேம்ஸேக்' நாவலைப் படித்த போது இதெல்லாம் எனக்குள் ஒரு சினிமாவாகவே ஓடியது.

என்கிற மீராநாயர், தன் சாலம் பாம்பே, மிஸிஸிப்பி மசாலா படங்களுக்கு திரைக்கதை அமைத்த சூனி தாராபூரிவாலாவையே 'தி நேம்ஸேக்' படத்துக்கும் திரைக்கதை எழுத வைத்திருக்கிறார். சூனியின் திரைக்கதை 'தி நேம்ஸேக்' படத்திற்கு வலிமை சேர்த்திருக்கிறது.

தி நேம்ஸேக் பெங்காலியில் எடுக்கப்பட்ட படமானாலும் பாதி வசனங்கள் அமெரிக்க ஆங்கிலத்திலேயே இருப்பது, அவர் எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு அழுத்தம் சேர்ப்பதாக மட்டுமல்ல, யதார்த்தமாக இருக்கின்றது. அமெரிக்காவில் பிறந்த கோகல் ஆங்கிலத்தில் பேசுவது தானே பொருத்தம்?

# பூஜ்யமாய்


அரபி மொழியில்:– ஆமால் நவ்வார்
தமிழில்:– பாரிஜமந்தன்

என் இதயத்தை பரிணாமத்தில்
நான் வணங்குவேன்.
இல்லை!
பயங்கொண்ட ஒளியே,
உனக்கு என்ன தைரியம்!
என்னைப் பார்த்து நீ,
நீண்டகாலமாக, விரிவாக,
நான் ஒரு புள்ளி.

வேள்வியைப் போல்
எனக்குத்தெரியும்
வலி
அது கூடவும் செய்யாது,
குறையவும் அல்ல,
நான் காலத்தைப் போன்று
நதியில் சிதறடிக்கப்பட்டு,
தெளிக்கப்பட்டு,
குரைத்துக்கொண்டு
எதிர்பார்த்த சிந்தனைகளின் மையாய்,
எவரின் நினைவுகள்
பசும்புல் தரையை போன்றதோ,
அவர்கள் என்னை
மறந்து விடுவர்.

விடுமுறையின் மீது படர்ந்துள்ள,
பாசியை,
அவன் விலக்குவான்.
பிற நாட்களில்
சூரியனில் அமர்ந்தவனாய்,
எந்த சிந்தனையும் அற்றவனாய்..!
கடலின் கண்ணோ அகன்றதாய்,
காட்சியை விழுங்கும் தன்மையில்,
ஆனால் யார் என் கண்களை
புற்களின் மேல் தேடுவார்கள்?
என் இதயமோ,
திமிங்கல இதயங்களோடு
கீழே பாதத்தை நோக்கி,
செல்லும் நூல்முனையை
யார் பற்றிப்பிடிப்பர்?
யாருடைய அறிவு,
இவ்விருளிலே
தெளிவற்று மங்கலாய்,
பூஜ்ஜியத்தின் வாழ்விற்கு எந்தவொரு
பெருமையும் இல்லை.
பிரயாணிக்கத் தேவையில்லை.
மணி, ஒலி தேவையில்லை.
ஆனால்
காற்றில் தனது எந்திரத்தை
சுழற்ற
அதற்கொரு சக்தி தேவை
நான் யாருக்காகவும்,
எதிர்பார்த்து இருக்கவில்லை.
என் உடலை,
நானே நதிக்கரைக்கு
எடுத்துச்செல்வேன்.
என் விரல் நகங்களால்,
என் வருடங்களைத் தோண்டுவேன்.
அறிகுறியற் தொடுவானிலே,
எதுவும் பிரகாசிக்காது,
அனைத்து இலைகளும்.

# எச்சம்



ஓங்கி வளர்ந்த
கிளைகளும்
கூடவே இலைகளும்
நினைத்தன...
இந்தப் பறவைகளுக்கு
நாம் இல்லாவிட்டால்
வீடு ஏது?

மண்ணில்
புதைந்துள்ள
வேர்கள் மட்டும்
நினைத்தன
பறவைகளின்
எச்சம்
இல்லாவிட்டால்
நாம் ஏது?

வெ.ஸ்ரீதரன்

## நிர்வாணம்

ஒப்பனைகள் எதற்கு உரித்துப்போட்ட
வார்த்தைகளைத் தான் நேசிக்கிறேன்
வா எனை நிர்வாணமாய் நேசித்துப்பார்
குற்றங்களைக் கழைந்தெறிந்து
சதைத் துண்டங்களை
புனிதப்படுத்த முயலாதே
பிய்ந்துருகி யழுகி நாறிடும்
பிண்டங்கட்கு
பிரதியாணைகளைப் பறைந்துன்
நிர்வாணத்தை இழிவுறுத்தாது
நிறுவல்களால் முக்தியிளி
நான் விரும்புவதும்
குற்றங்களோடான உன்
நிர்வணத்தையே.

ஏழவாணி

## நிஜங்களின் நிசப்தம்

நினைவாக
துன்பத்தின் முழுமைக்குள்
நீ
உன் கருவறைக்குள்
நான் உறக்கம்.

நீ வாழ்ந்த
வாழ்க்கையைக் கூற
இன்று
சொற்களில்லை

உன் நினைவுகள்
உயிர்பெறும் கணங்கள்
இமைகளுக்குள்
நீர் துளிர்க்கும்

நீ சுமந்த
துயரங்களுடன்
தொடர்கிறது
என் நடை
சமூக அவலங்களின்
சுவர்களின் மீது.

மு.சி.கந்தையா

## உயிர்த் தியாகி

அவர்கள்
அவனைக்கண்டார்கள்.
வயலிலே,
பிரகாசமாய் பசுமையாய்-
அவர்கள் அவனது
கையினை உயர்த்தினார்கள்.
அதற்கடியே இருந்த புற்கள்
இதயங்களாய் மாறின.
"அவனது கைக்களுக்குக் கீழே
கோதுமைத்தண்டுகள்
பூத்துக்கிடக்கின்றன"
எனக் கூறப்பட்டது.
"அவனது குருதியை
பறவைகள் தங்களின்
அன்புக்குரிய அத்தான்களுக்காக
கொண்டு சென்றன"
எனக் கூறப்பட்டது.
அவன் மறுபடியும் திரும்புவான்.
எரிமலைகளோடு பூத்துக்குலுங்குவான்.
தனது தாயின்
மார்பகங்களையும் நிரப்புவான்.
அவர்கள் அவனை,
பசுமையான ஒளியாய் கண்டார்கள்.
ரோஜாக்களின் மொட்டுகளை,
சவச்சீலையாய்
அவனுக்குப் போர்த்தினார்கள்
அவர்கள் வானத்தை விரித்தார்கள்,
பெருக்கினார்கள்,
அதன் மேல் அவனை வைக்க,
சூரியனை அவனுக்கு தலையணையாய்
ஆக்க.

ஜ°லைஹர் அபூ ஷாயிப்
தமிழில்: பாரிஸமந்தன்



## எச்சரிக்கை

வேட்டையாடும் காதலர்களே,
கற்றுக்குட்டிகள்
உமது இரையை நாடிவந்துள்ளனர்.
எனது மகிழ்ச்சியின் மீது,
உமது தோட்டாக்களை
இலக்காக்காதே.
அவற்றின் மதிப்பு
குண்டுகளின் விலை கூட கிடையாது.
நீ அதை வீணாக செலவழிக்காதே,
எது உன்னைப் பார்ப்பதற்கு,
இவ்வளவு இலாவகமாய்,
விரைவாய், அருமையாய்,
மான் குட்டியைப் போன்று
புகலிடம் தேடிச் செல்பவைகளாய்
அதன் ஒவ்வொரு வழியிலும்,
உணவுக்காக வேட்டையாடப்படும்
பறவைகளாய்,
இது தான் மகிழ்ச்சியல்லவா?
என்னை நம்பு.
என் மகிழ்ச்சியில்,
எந்த மகிழ்ச்சியின்
தொடர்பும் இல்லை.

தாஹா முஹமத் அலீ
தமிழில்: பாரிஸமந்தன்

## கிடைக்குமா விடிவு?

யுத்தத்தின் சத்தம்
கொடுமையின் உச்சம்
தமிழனின் நெஞ்சம்
வலிமையின் உச்சம்
முடிந்தது யுத்தம்
இன்னமும் அச்சம்
தமிழர்க்கு விடிவு
கிடைக்குமா கொஞ்சம்



சி.நவீந்திரா -பருத்தித்துறை

# ஒன்றை கடன் வாங்கு

அ.முத்துலிங்கம்

சென்ற இதழ் தொடர்ச்சி................

சிகரெட் என்றான். த்ரி ரோஸஸ் சிகரெட் ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினார். எரிந்துகொண்டிருந்த நீளக் கயிற்றில் அதைப் பற்றவைத்து இழுத்தான். அவன் இழுத்த விதமும், புகையை ஊதிய விதமும் ஸ்டைலாக இருந்தன. என் பக்கத்தில் மாயமாகத் தோன்றிய வீரசிங்கம் முழங்கையால் மெள்ள இடித்தான். என்னுடன் படிப்பவன், எப்படி அங்கே வந்தான் எனத் தெரியாது.

"மூன்று கொலை செய்தவன். இன்று ஒன்று விழும் பார்" என்றான் ரகசியக் குரலில்.
"எப்படித் தெரியும்?"

"அதற்குத்தான் ஏதோ திட்டம் போடுகிறார்கள்" என்றான்.

சண்டியனின் இடது கை மடிக்காமல் நீளமாகத் தொங்கியது. அதற்குள்தான் வாள் இருக்கும். திடீரென சண்டியன் எழுந்து நடக்க, அவனுடைய இரண்டு எடுபிடிகளும் பின்னால் போனார்கள். அவர்களில் ஒருவன் சொன்னான், "இந்த ஊரின் சனக்கணக்கு ஒன்று குறையப்போகுது". மற்றவன் சிரித்தான். அவர்கள் போனபோது அசைந்த காற்று என்னையும் தொட்டது. நான் கூசிக்கொண்டு நின்றேன்.

வீரசிங்கம், சைக்கிள் வாடகைக்கு எடுக்க வந்திருந்தான். என்னிலும் இரண்டு வயது கூடியவன். வாய்க்குள் எதையோ வைத்திருப்பதுபோல முகம். நல்ல ஓட்டக்காரன். நெஞ்சில் நாடா தொட்ட பிறகும் ஓட்டத்தை நிறுத்த மாட்டான். ஆனால், அவனால் சைக்கிள் ஓட்ட முடியாது. கடைக்காரர் அவனுக்குப் பழக்கம் என்பதால், வாடகைக்குத் தருவார்.

வீரசிங்கம், சைக்கிளை சாய்வாகப் பிடித்துக்கொண்டு ஸீட்டுக்கு மேலே உட்காராமல் பாருக்குக் கீழே காலை நுழைத்து பெடலை மிதித்து ஓட்டினான். பிரேக் இல்லாத சைக்கிள் அது. குதிக்காலால்தான் நிறுத்த வேண்டும். அப்படியே வட்டம்போட்டு என்னிடம் வந்தான்.

கையினால் என் முகத்தைப் பிடித்துத் திருப்பி, "நீயும் ஓட்டிப்பார். ஸீட்டில் இருந்து ஓட்டாததால், வாடகை பாதிதான். காசு தர வேண்டாம்" என்றான்.

சைக்கிள் சின்னதாக வேண்டும் அல்லது நான் கொஞ்சம் வளர வேண்டும். "இந்த சைக்கிள் சரியில்லை எனக்குப் புது சைக்கிள் கொழும்பில் இருந்து வருகிறது" என்றேன். வீரசிங்கம் நம்பிவிட்டான்.

புதுமாப்பிள்ளையும் பொம்பளையும் மணம் முடித்து கோயிலுக்குப் போனார்கள். ஒரு கூட்டம் அவர்கள் பின்னே போனது. அன்று காலைதான் கல்யாணம் நடந்திருக்க வேண்டும். பொம்பளையின் தலை, நெஞ்சோடு ஒட்டி குனிந்து இருந்தது. தலையிலே கழுத்திலே கையிலே சூடியிருந்த நகைகள் எல்லாம் வெயிலில் பளிச்சிட்டன. தாலி, கழுத்தில் வட்டமாகக் கிடந்தது. பின்னலில்கூட நீளமாக ஒரு நகை பூட்டப்பட்டு இருந்தது.

கோயிலிலே அவர்களுக்காக விசேட பூஜை ஒன்று நடந்தது. கோயில் மணியை ஒருவன் மணிக்கூட்டுச் சுவரில் பாதி தூரம் ஏறி, பின்னர் கீழே விழுந்து அடித்தான். புதுத் தம்பதிகளுக்குச் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. அதை விநியோகித்தவர் என்னைப் பார்த்து, "பசிக்கிறதா?" என்றார். பசியைக் கண்டுபிடித்தவன் நான். அது அவருக்குத் தெரியாது. சதுரமான ஐந்து சதக் குற்றியைத் துணியிலே சுருட்டி என் மணிக்கட்டில் கோயிலுக்கு நேர்ந்து கட்டியிருந்தார்கள். வாத்தியாரிடம் பிரம்படி வாங்க நீட்டுவதுபோல, நான் அந்தக் கையை நீட்டினேன். உள்ளங்கையில் ஒரு துளி பொங்கல் விழுந்தது. கையைப் பார்த்தேன். அதிலே போதிய இடம் மீதி இருந்தது.

திடீரெனப் பசித்தது. அத்தனை நேரமும் பசி ஞாபகம் வரவில்லை. ஒரு பயம் பிடித்தது. நேரம் பிந்திப்போனால் தம்பி என் பங்கு சாப்பாட்டை சாப்பிட்டுவிடுவான். ஒருநாள் நான் போனபோது, என்னுடைய நீலப் பூ போட்ட கோப்பையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனுடையது சிவப்புப் பூ போட்ட தட்டு.

'என்னுடைய பிளேட்டில் நீ ஏன் சாப்பிடுகிறாய்?' என அவன் மேல் பாய்ந்தேன். சாப்பிட்டு முடித்த அவனுடைய சிவப்பு எச்சில் கோப்பை, பக்கத்திலேயே கிடந்தது. நான் சாப்பாட்டுக்கு வரப் பிந்தியதால், அவன் என்னுடைய உணவையும் சாப்பிட்டுவிட்டான். 'ஏன்டா என்னுடையதைச் சாப்பிட்டாய்?' என்றதற்கு, மகாபுத்திசாலியான அவன் சொன்னான், 'உன்னுடைய சாப்பாடா? அதுல உன்ரை பேர் எழுதி இருக்கா?'. இதைக் கேட்டதும் நான் திகைத்துப்போய் நின்றேன். 'சாப்பாட்டுக்காக மனிதன் காத்திருக்கலாம். ஆனால், மனிதனுக்காகச் சாப்பாடு காத்திருக்கக் கூடாது.'

கோயிலை ஒட்டிய வீதியில் வெயில் ஏறி மணல் மின்னியது. கடுதாசி ஓரங்கள் எரிவதுபோல ஆகாயம் எரிந்துகொண்டு வந்தது. மரங்களே இல்லாத தெரு வெகுதூரம் நீண்டுபோய்க் கிடந்தது. வேலி பக்கமாகக் கால்களின் ஓரத்தால் மெதுவாக நடந்தேன். என்னுடைய நிழல் வர வர சிறுத்துப்போய் என் கால்களுக்குள் சிக்கியது. தூரத்தே கறுப்பு மாடு ஒன்று அசைந்து வந்தது. பின்னர் பார்த்தால், ஒரு மனிதன் கறுப்பாக ஒன்றைச் சுமந்துகொண்டிருந்தான். இன்னும் கொஞ்சம் அருகில் வந்ததும், அது கணக்குப் படிப்பிக்கும் லலிதா டீச்சர் எனத் தெரிந்தது. காலிலே செருப்பு கையிலே கறுப்புக் குடை. இயற்கைக் காட்சிகளை ரசிப்பதுபோல மெதுவாக வந்துகொண்டிருந்தார். மஞ்சள் கரை வைத்த சேலை சுழன்று சுழன்று அவர் காலை அடித்தது. அவரை எனக்குப் பிடிக்கும். கண் மருத்துவருடைய பலகையில் மேலே பெரிய எழுத்துக்களும் கீழே சிறிய எழுதத்துக்களுமாக இருப்பதுபோல, அவர் கரும்பலகையில் மேலே பெரிய எழுத்தில் எழுதத் தொடங்கி கீழே வர வர சிறிய எழுத்தில் முடிப்பார்.

கறுப்பு-வெள்ளைப் படத்துக்கு வர்ணம் தீட்டி கலர் படமாக்குவதுபோல டீச்சர் கறுப்பு முகத்தில் பவுடர் அப்பி ஒப்பனை செய்திருந்தார்.

"நாலில் இருந்து ஐந்தைக் கழிக்க என்ன செய்ய வேண்டும்?"
"தெரியாது டீச்சர்."
"நாலில் ஐந்து போகுமோ?"
"போகாது."
"உன்னிடம் இல்லாவிட்டால், பக்கத்தில் ஒன்றைக் கடன் வாங்கு" என்றார்.

எனக்கு ஒரே குழப்பம். அப்பாவைத் தேடி கடன்காரர் வருவார்கள். கணக்குப் பாடத்தில் கடன் வாங்கச் சொல்லித் தருகிறாரே!

டீச்சர் கண்களைச் சுருக்கி "நீ இங்கே என்ன செய்கிறாய்?" என்றார்.


ஒருமுறை யாரோ செத்துவிட்டார் என பள்ளிக்கூடக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிட்டார்கள். பள்ளிக்கூடம் விடுமுறை என்றால், எங்களுக்குக் கொண்டாட்டம்தான். ஆனால், டீச்சர் அழுததை அன்று பார்த்தேன். "என்ன?" என்றார் மறுபடியும்.

"கணக்குப் புத்தகம் இரவல் வாங்க வந்தனான்."
"யாரிடம்?" என்றதும் எடை சமமான இரண்டு பொய்கள் சட்டென எனது மூளையில் தோன்றின. ஒன்றைச் சொன்னேன்.

"சரி... சரி. இந்த வெயிலைத் தாங்க மாட்டாய். வீட்டுக்கு ஓடு" என என்னைத் துரத்திவிட்டு குடையைச் சரித்துப் பிடித்துக்கொண்டு அவசரமின்றி நடந்தார்.

புளியமரத்தடியில் என்னை இடித்துக் கொண்டு இரண்டு பெண்கள் முன்னேறினார்கள். "இந்த உலகத்தில் அதிகபட்ச அற்புதம் ஓர் உயிரில் இருந்து இன்னோர் உயிர் பிரிந்து இரண்டாகும் அந்தத் தருணம்தான்" என்றார் ஒருவர். "உலகம் தோன்றிய நாளில் இருந்து நடப்பதால், அதை அற்புதமாக ஒருவருமே நினைப்பது இல்லை. ஊர் சனத்தொகை ஒன்றுகூடும் என்றே எண்ணுகிறார்கள்" என்றார் மற்றவர். சண்டியன் சண்முகத்தின் எடுபிடி ஊர் சனத்தொகை ஒன்று குறையும் எனச் சொன்னது நினைவுக்கு வந்தது. அப்பாவுடன் இரண்டு பேர் மரத்தின் கீழ் நின்று பேசினார்கள். அப்பாவின் குரலில் சிரிப்பு இருந்தது. வீட்டின் உள்ளே குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டது. மருத்துவச்சி ஒரு பேசினில் தண்ணீர் கொண்டுவந்து வெளியே ஊற்றினார்.
அப்பா "எங்கேடா இவ்வளவு நேரம்?" என்றார்.

படுத்திருந்த வீட்டு நாய் விறுக்கென எழும்பி ஓடியது. சம்பவங்கள் பின்னிருந்து முன்னால் திரையில் தோன்றின. இரண்டு பெண்கள், டீச்சர், கோயில், புதுமணத் தம்பதிகள், வீரசிங்கம், சண்டியன் சண்முகம், ரயில், கிழவர், நாய், புளியங்காய். அப்பா பதிலை எதிர்பார்த்து நின்றார். கொஞ்சம் காற்றை இழுத்து சுவாசப்பையை நிரப்பினேன். போன தடவை அப்பா அடித்தபோது அவருடைய கைரேகை கன்னத்தில் பதிந்தது நினைவுக்கு வந்தது. என் வாயில் நிமிடத்தில் பல பொய்கள் உண்டாகும். அன்று மூளையில் ஒன்றுமே இல்லை. 'உன்னிடம் இல்லாவிட்டால் ஒன்றைக் கடன் வாங்கு.' அதைத்தான் செய்ய வேண்டும்!



முற்றும்

11 ஆம் பக்க தொடர்ச்சி

ஆட்சி மாற்றத்திற்கான........

எனவே, நேர்மையுடன் இந்த அடிப்படையில் செயற்படுவதற்கு முதலமைச்சரும் வடமாகாண உறுப்பினர்களும் ஏனைய கூட்டமைப்பின் உறுப்பினர்களும் தயாரென்றால், இத்தீர்மானத்திற்கு நேரெதிராக செயற்படுபவர்களை ஓரம்கட்டிஇ முதலமைச்சர் தலைமையில் அலல்து வேறு ஒருவர் தலைமையில் இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தி முன்னுக்குப் போகத் தயாரென்றால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அவ்வாறான தலைமைக்கு முழு ஆதரவையும் வழங்குவற்கு தயாராக உள்ளது என்பதுடன் இணைந்து செயற்படுவதற்கும் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

06 ஆம் பக்க தொடர்ச்சி

ஆட்சி மாற்றத்தின்........

சபையில் இணைந்ததன் மூலமும், சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டதன் மூலமும் தமிழ்த் தேசியத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கான கடைசி ஆணியையும் அடித்து விட்டது.

தமிழ் அரசியலுக்கு சாதகமாக இருந்த புறச் சூழலை விலையாகக் கொடுத்து தமிழ் மக்கள் பெற்றதென்ன? மைத்திரியை ஆதரித்த புலமையாளர் சிலரின் கருத்து ஒரு ஜனநாயக வெளி உருவாகும் என்பதே? இது உண்மையான ஜனநாயக வெளியா? அல்லது ஜனநாயக வெளி போன்ற ஒரு தோற்றமா? இன்னும் ஒரு சில நாட்களில் உண்மை தெரிந்து விடும்.

04 ஆம் பக்க தொடர்ச்சி

வீடு எரிப்பவனுக்கு..........

ஒன்று இருக் கின்றது என்பதையும் இது நீர்த்துப் போகச் செய்துள்ளது. இனிமேல் இனப்பிரச்சினை என்பது முன்னிலைக்கு வராமல் மத்திய - மாகாண முரண்பாடே முன்னிலைக்கு வரும்.

கிழக்கு மாகாணசபையைப் பொறுத்தவரை இதில் இன்னோர் விடயமும் அடங்கியிருந்தது. இங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும் போது மாகாணநிர்வாகம்முஸ்லீம்களின்கைகளுக்குச் செல்லக் கூடிய நிலை இருந்தது. முஸ்லீம்களிடம் நிர்வாகம் செல்வது தவறானதல்ல. ஆனால் அது முஸ்லீம்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையேயான ஒருசமூக உடன்பாட்டின் மூலமே செல்ல வேண்டும். முஸ்லீம் தரப்பு ஆதிக்க மனோபாவத்திலிருக்கும் போது மாகாண நிர்வாகம் அவர்களின் கைகளில் செல்வது தமிழ் மக்களுக்கு ஆபத்தானதாகவே முடியும். நடைமுறையிலும் அதுவே நிகழ்ந்தது. வடக்கு- கிழக்குப் பிரிக்கப்பட்ட பின்னர் அதிகரித்த முஸ்லீம் அதிகாரிகளும், முஸ்லீம் அமைச்சர்களும் இணைந்து தமிழர்களைப் புறக்கணித்தனர். மாகாண நிர்வாகமும் கிடைத்த பின்னர் மூன்று தரப்பும் இணைந்து தமிழர்களைப் புறக்கணித்தனர்.

நான்காவது சறுக்கல் சுதந்திர தினத்தின் போது ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களது அரசியல் தீர்வு விடயத்திலோ அல்லது இயல்பு நிலையைக் கொண்டு வருதல் விடயத்திலோ எந்த முன்னேற்றங்களும் இல்லாத இடத்தில் சுதந்திர தின வைபவத்தில் சம்பந்தனும் சுமந்திரனும் பங்குபற்றியிருந்தனர். அதன் மூலம் தமிழ் மக்கள் எது நீண்ட கால அரசியல் நிலைப்பாட்டை இருவரும் உடைத்தெறிந்துள்ளனர். தமிழ் மக்கள் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து சுதந்திரதினத்தைப் புறக்கணித்து வந்ததுமல்லாமல் அத்தினத்தை கறுப்பு தினமாகவும் அனுஷ்டித்தனர். இதற்கு காரணம் சுதந்திர தினமென்பது இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரத்தை தமிழ்மக்களை முழுமையாகப் புறக்கணித்து சிங்களத் தரப்பிடம் ஒப்படைத்த தினம் என்பதே! இது வரை அந்த ஒப்படைப்பில் எந்த மாற்றமும் நிகழவில்லை. தமிழ் மக்களை ஒரு தேசமாக ஆட்சி அதிகாரக் கட்டமைப்பில் இணைக்க வேண்டும் என்பதற்காகத் தான் இதுவரை காலப் போராட்டம் இடம் பெற்றது. தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்கின்ற எண்ணக் கருக்களும் கட்டியெழுப்பப்பட்டன. சுதந்திர தினத்தில் கறுப்புக் கொடி ஏற்றிய மைக்காக திருமலை நடராஜன் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இன்று இந்தப் போக்கில் எவ்வித மாற்றங்களும் இல்லாமலே சம்பந்தன் சுதந்திர தினத்தில் கலந்து கொண்டார். இது இதுவரை கால எமது அரசியல் சேமிப்புகளை சிங்கள அரசியலுக்குள் கரைக்கும் கைங்கரியங்களே! ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்த இந்தியாவும், மேற்குலகும் தமக்குச் சார்பான அரசாங்கத்தை பாதுகாக்க முற்படுகின்றன. அதற்காக தமிழ்த் தேசிய அரசியலின் அடிப்படைகள் நீர்த்துப் போக வேண்டும் என விரும்புகின்றன. சம்பந்தன் அதற்கு துணைபோகின்றார்.

வீடு எரிப்பவனுக்கு கொள்ளிக் கட்டை எடுத்துக் கொடுக்கின்றாரா? சம்பந்தன்?

08 ஆம் பக்க தொடர்ச்சி

இந்தியா மேற்குலகக்.........


இந்தியாவினதும் மேற்குலகினதும் நிகழ்ச்சிநிரல்கள் என்னவாக இருந்த போதும் அவை ஒன்றை மாத்திரம் புரிந்துகொள்ள தவறுகின்றன. இலங்கைத் தீவில் நடைபெறுகின்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணம் இனப்பிரச்சினைதான். மகிந்தர் ஆட்சிக்கு வந்ததற்கும் பின்னர் மைத்திரி ஆட்சிக்கு வந்ததற்கும் இது தான் காரணம். இந்த அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்காமல் இலங்கைத்தீவு சந்திக்கின்ற பிரச்சிகைளை ஒரு போதும் முழுமையாகத் தீர்க்கமுடியாது. வேண்டுமானால் அவ்வப்போது சில பூசிமெழுகல்களை செய்யலாம். இனப்பிரச்சினையின் மையம் மாறி மாறி பதவிக்கு வருகின்ற அரசாங்கங்களல்ல மாறாக இலங்கை அரசே. அரசாங்கங்களை மாற்றுவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு காணமுடியாது. அரச கட்டமைப்பை அனைத்து இனங்களையும் சமத்துவமாக இணைத்து பன்மைத் தன்மை கொண்டதாக மாற்றுவதன் மூலமே தீர்வு காணமுடியும்.

இந்தியாவும், மேற்குலகமும் இதனை விரைவில் புரிந்து கொள்ளாவிட்டால் அவற்றின் முயற்சிகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகவே போய்ச்சேரும்.

# நூல் அறிமுகம்

## "விபச்சாரி 80 ரூபாய்"

| | |
|---|---|
| ஆசிரியர் | – யாழ்.தர்மினி பத்மநாதன் |
| வெளியீடு | - மித்ரா ஆர்ட்ஸ், தமிழ்நாடு இந்தியா |
| விலை | - 500.00 (இந்திய விலை) |




யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் பலபடைப்பாளிகள் வெளியில் வந்திருக்கின்றார்கள். அவர்களின் படைப்புக்கள் ஒவ்வொன்றும் அந்த காலத்தின் தன்மைகளை பேசுபொருளாக்கி கண்முன்னே கொண்டு வந்து நிறுத்திச் செல்கின்றன.

இந்நூல் யாழ். தர்மினி பத்மநாதனின் ஏழு சிறுகதைகளை உள்ளடக்கி "விபச்சாரி 80 ரூபாய்" என்ற தலைப்போடு வெளிவந்திருக்கின்றது. இது இந்நூலாசிரியரின் இரண்டாவது படைப்பாகும். இதற்கு முன்னர் "எங்கட கதை தான்" என்ற ஒரு சிறுகதைத் தொகுப்பினையும் இவர் வெளியிட்டுள்ளார்.

தற்போது வெளிவந்திருக்கும் " விபச்சாரி 80 ரூபாய் " என்ற இந்நூலில் உள்ள கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தை உடையதாகக் காணப்படுகின்றது. இவரின் அனேகமான கதைகளின் போரின் வலியும், ஆசைகளின் பிரதிபலிப்புகளும், புலம் தாங்கிய ஏக்கங்களுமே விஞ்சி நிற்கின்றன.

இந்நூலின் உள்ளே, விபச்சாரி 80 ரூபாய், வாடகைவீடு, வித்தகி, முக்கோண தலைநகரங்கள், தந்தையின் தாலாட்டு, பட்டாம்பூச்சி, போன்ற கதைகள் அடங்கியிருக்கின்றன.

வாடகைவீடு கதை மூலமே சென்னையில் ஈழத்தமிழருக்கு இருக்கக்கூடிய வீடு பற்றிய பிரச்சினைகளையும் அதனூடாக புலம் பற்றியதான ஏக்கத்தையும் சீரழிந்த குடும்ப, திருமண உறவு பற்றிய தாக்க விளைவுகளையும் தருகின்றது.

விபச்சாரி என்ற கதையில் போருக்கு பின்னரான ஈழத்தில் பெண்கள், இளம் யுவதிகளிடையே குறிப்பாக புனர்வாழ்வு பெற்ற போராளிப் பெண்களின் நிலைபற்றியும் கூறும் கதையாகக் காணப்படுகின்றது. யாழ் தர்மினியின் கதைகள் ஒவ்வொன்றும் துடிப்புடையதாகவும் கடந்த காலம் மற்றும் நிகழ்காலத்தைப் பேசுவனவாகவும் காணப்படுகின்றது.

தமிழ்

10 ஆம் பக்க தொடர்ச்சி

அழிக்கப்பட்ட கிராமம்.........

தாக்குதல் நடத்தத் தொடங்கியதுடன் பெண்கள்மீதுபாலியல்சேட்டைகளிலும்ஈடுபடமுயற்சித்தனர். இது இக்கிராம மக்களை அச்சமடைய வைத்தது. இராணுவத்தினர் அடிக்கடி அங்கு வந்து மக்கள் மீது தாக்குதல் நடத்தியதால் சில குடும்பங்கள் இடம்பெயரத் தொடங்கின. சில ஆண்கள் தமது குடும்பத்தை அனுப்பிவிட்டு தாங்கள் மாத்திரம் தங்கியிருந்து பயிர்செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த வேளையில் ஒரு நாள் திடீரென விமானப் படையின் கெலிகொப்டர் ஒன்று இக்கிராமத்திற்கு மேலாகச் சுற்றி வட்டமிட்டதுடன் அருகிலிருந்த மலைத் தொடரில் இறங்கியது. அதிலிருந்து இராணுவத்தினர் இறங்கிக் கொண்டிருந்தனர். இதைச் சற்றும் எதிர்பாராத கிராமவாசிகள் மத்தியில் அதிர்ச்சியும் அச்சமும் ஏற்பட்டது. வயல் வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்களும் குடிசைகளில் தங்கியிருந்தவர்களும் கையில் அகப்பட்ட பொருட்களை எடுத்துக் கொண்டு காடுகளை நோக்கி ஓடத் தொடங்கினர். அந்த வேளையில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு கிராமத்தை நெருங்கிக் கொண்டிருந்தனர்.

கிராமத்திற்குள் சென்ற இராணுவத்தினர் கிராமவாசிகளின் குடிசைகளை அழித்ததுடன் பயிர் வகைளையும் அழித்தனர். காந்தியத்தின் பண்ணையும் அழிக்கப்பட்டது. தப்பியோடி காடுகளுக்குள் ஒழிந்துக் கொண்டவர்கள் உயிராபத்துக்கள் எதுவும் இல்லாது தாம் முன்னர் வாழ்ந்த இடங்களுக்குச் சென்று அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.


# நிகழ்வின் பதிவுகள்



ஜீ.ஜீ பொன்னம்பலம் அவர்களின் 38 ஆவது சிரார்த்த தின நிகழ்வு யாழ் . குருநகர் பகுதியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலையின் முன்பாக நடைபெற்றது.



யாழ்ப்பாணத்தில் நடந்த காணமால் போனவர்களின் கவனயீர்ப்பு போராட்டத்தின் போது...



இலங்கையின் சுதந்திரதின நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா . சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டமையைக் கண்டித்துப் புலம் பெயர் தமிழர்களால் லண்டனில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.



தேசிய மீனவர் ஒத்துழைப்பு மன்றத்தின் கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.




லண்டன் குறோலி தமிழ்க் கல்விக் கூடத்தினரின் உதவியுடன் 03.02.2015 அன்று வடமாகாணத்தைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஶ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 15.02.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.